# சிலை பேசிற்று!

பாத்திரங்கள்

| | |
|---|---|
| பூமிநாதன் | —சிற்பி |
| விசாகன் | —சிற்பியின் நண்பன் |
| மோகினி | —உயிர் பெற்ற சிலை |
| மனோகரன் | —மோகினியின் புதுக்காதலன் |

பின்னணியில்

அறிவிப்பு : இரவுதான்.

என்றாலும் பட்டப் பகல்போல் நிலவு பால் மழை பொழிகிறது. வருணி ஆற்றங்கரையில் குளிர்காற்றின் சீதத்தோடு தாழை மடலின் மணமயக்கம் புரையோடிக் கமழ்கிறது.
அதோ......

[குயில் கூவும் சப்தம்]

ஆம், எங்கோ எட்டாத் தொலைவில் ஒரு குயில் ஏங்கி ஏங்கிக் கூவுகிறது. மோன சமாதி நிறைந்த இந்த முன்னிலாக்காலத்தில் எங்கிருந்தோ......

*[வீணையில் ஆனந்த பைரவி ராகம் இழைகிறது; பின்னர் கல்லைச் செதுக்கும் உளிச் சப்தமும் 'கண், கண்' என்று கேட்கிறது ]*

## காட்சி — 1

பூமிநாதன் : நிலவுதான் என்ன அழகாய்க் காய்கிறது!

இந்தச் சந்திரிகை அழகாகக் காண இவளுக்கும் கண்கள் இருந்தால்?

*[சிலையை நோக்கிப் பெருமூச்சு விடுகிறான். பாதக் குறடு நெருங்கி வரும் சப்தம் கேட்கிறது. சப்தம் கேட்டுத் திரும்புகிறான்.]*

யாரது?......யாரங்கே?

விசாகன் : (வந்துகொண்டே) நான் தான் பூமிநாதா!

பூமி : விசாகனா? வா வா. ஏது, இந்த வேளையில்?

விசா : நீ மட்டும் இந்த வேளையில் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உன் சிலையோடு உறவாடு கிறாயா?

பூமி : ஆமாம், நாளை சித்ரா பௌர்ணமி. நாளை இவ ளுக்குக் கண் திறந்து விடும்! (தன் எதிரேயுள்ள மோஹன ரூபம் படைத்த சிலையைக் காட்டுகிறான்) தன்னைப் படைத்த என்னை இரு கண்களாலும் பார்த்து மகிழ்வாள்!

விசா : (லேசாகச் சிரித்து) பிரமாதமாகக் கற்பனை செய் கிறாயே. சிலை எங்காவது பார்க்குமா அல்லது பேசுமா?

பூமி : என் உள்ளம் பேசினால் அவளும் பேசுவாள்; என் கண்கள் பார்த்தால்—

விசா : உடனே அவள் கண்கள் நாணத்தால் வெட்கித் தலை குனிந்து விடுமோ? நல்ல பைத்தியம்! (மெல்லச் சிரிக்கிறான்)

பூமி : பைத்தியமா? பைத்திய நிலையில்தான் மேதா விலாசம் பளிச்சிட முடியும், விசாகா!

விசா : பைத்தியம் பிடிக்காவிட்டால் இரவும் பகலும் இந்தக் கல்லைக் கட்டிக் கொண்டு மாரடிப்பாயா, கட்டிய மனைவியை மறந்துவிட்டு?

பூமி : விசாகா! நானோ கலைஞன். அழகை அனுபவிப்ப வன்; ஆராதிப்பவன்!

விசா : பூமிநாதா! கனவிலும் காவியத்திலும் காணும் அழகை யெல்லாம் கட்டிய மனைவியிடத்திலும் எதிர் பார்க்கலாமா?

உன் மனைவி குமுதா நல்ல குணவதி.

பூமி : குணம் இருந்தென்ன? கண்ணுக்குக் குளிர்ச்சி யாக இருக்க வேண்டாமா?

விசா : இதயம் குளிர்ந்தால் போதாதா, பூமிநாதா? அழகு அழிந்து விடும்; அன்பு அழியாது.

பூமி : (மெல்லச் சிரிக்கிறான்) அழகு அழிந்து விடுமா? அழியாத அழகை — நித்திய சௌந்தர் யத்தைத்தானே இதோ உருவாக்கிக் கொண்டிருக் கிறேன். பார் இதோ—

விசா : பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்!

பூமி : விசாகா! மேக சஞ்சாரத்திலே ஊடு பாய்ந்து வெட்டும் மின்னலின் துடி துடிப்பு, ஆற்றங்கரைத் தாழை மடல் தண்ணீரைக் குனிந்து தொட்டு, அந்த நீரில் தன் மனத்தை உரசிவிடும் லாகவம், ஆனந்த பைரவி ராகத்தின் அற்புத நளினம், வானத்து ஸப்த ரிஷி மண்டலத்தின் வண்ணக்

கோல நாட்டியம்—எங்கெங்கோ எப்போ தோப் போதோ நான் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்த அழகைத் தானே நான் உருவாக்கு கிறேன். என் புலன்களைக் கணநேரம் கவர்ந் திழுத்த அற்புதமான அழகுக்கெல்லாம் இதோ நான் அமரத்தன்மை அளித்துக் கொண்டிருக் கிறேன். அழியாத அழகின் திருவுருவமான இந்தச் சிலை மட்டும் உயிர் பெற்று விட்டால்...

விசா : உயிர் பெற்று விட்டால்? உடனே கட்டி அணைத்து விடுவாயோ?

பூமி : இப்போது கூடத்தான் என் கை துறுதுறுக் கிறது!

விசா : பூமிநாதா! அழகு அழகு என்று மாரடிப்பதற்கு, அந்த அழகே உன் உயிரைக் குடித்துவிடாமல் இருந்தால் சரிதான்.

பூமி : என்ன அப்படிச் சொல்கிறாய்? அழகு என்ன அழிக்கும் சக்தியா?

விசா : பின்னே கொல்லிமலைப் பாவையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? அவள் காலடியில் கிடந்து எலும்புக் கூடானவர் எத்தனை பேரோ? நீயும் எங்கே இதன் காலடியில் தவம் கிடந்து விடு வாயோ என்றுதான் பயமாயிருக்கிறது.

பூமி : கிடந்தால்தான் என்ன? இந்த அழகின் உபாசனை யில் என் ஆயுள் முழுவதும் கழித்துவிடுவேனே. இவள் மட்டும் உயிர்பெற்று எழுந்து விட்டாள்...?

விசா : கல்லில் மட்டுந்தானே உன்னால் உயிர்பெய்ய முடியும்? அவள் இதயத்தைத் துடிக்கச் செய்ய முடியுமா?

பூமி : தெய்வ கிருபையால் அதுவும் கூடச் சாத்திய மாகலாம்!

விசா : அப்படியானால் உனக்கும் அழிவு நெருங்கி விட்டது என்று கொள்ள வேண்டியதுதான். அழகை ஆராதித்தவர்களில் எத்தனையோ பேர் போர்க்களத்தைத்தான் முத்தமிட்டார்கள்!

பூமி : நீ என்னைச் சரியாக அறியவில்லை. கேவலம், வெறும் இச்சை வசப்படமாட்டேன் நான்!

விசா : தெரிகிறதே! இதய சௌந்தர்யத்தை உணரத் தெரியாமல், ரூப சௌந்தர்யத்திலே மயங்கி, இந்தச் சிலையைக் கண்டு மோகிக்கிறாயே, இதிலி ருந்தே தெரியவில்லையா?

பூமி : சரி, உன்னோடு வழக்காட நேரமில்லை, போ. எனக்கு வேலை முடியவேண்டும்!

விசா : அதுவும் சரிதான். அழிவு என்னவோ நிச்சயம். நீயா சிலையா என்பதுதான் கேள்வி. நான் வரு கிறேன்.

[விசாகன் செல்கிறான். பாதக்குறட்டின் ஒலி இரு ளில் கட்கட்டென்று ஒலித்து மடிகிறது.]

பூமி : (தனக்குள்) விசாகன் என்ன சொன்னான்? அழகு அழிக்கும் சக்தியா? இதயம்தான் அழியாதா?...... இதோ இவள் மட்டும் உயிர்பெற்று எழுந்துவிட் டால்......அப்புறம் இவளோடு கொஞ்சுவேன். குலாவுவேன், கூடுவேன்!

[மீண்டும் சிலையில் செதுக்கத் தொடங்குகிறான். பின் னணியில் நீலாம்புரி ராகத்தின் ஆலாபனை தந்தி யில் இழைகிறது. உளிச் சப்தம் தேய்ந்து குறை

கிறது. பூமிநாதன் கைசோர்ந்து சிலைமீது சாய்கிறான். தூக்கம் அவனைத் தழுவுகிறது. தூக்கக் கலக்கத்தில் அவன் வாய் புலம்புகிறது.]

ஆண்டவா! உலகத்து அழகை யெல்லாம் இதோ ஒன்று திரட்டி உருவாக்கிவிட்டேன். இவளுக்கு உயிர்கொடு! என் இதய ராணிக்கு இன்னுயிர் கொடு! கொடு! கொடு! சீக்கிரம் கொடு!

[பின்னணியில் மெல்லிய ஸ்தாயியில் தொடங்கி அவரோகண கதியில் ஓங்கார நாதம் உச்சிக்கேறுகிறது. பூமிநாதன் குரலும் உயர்கிறது.]

அதோ அவள் கண்கள் துடிக்கின்றன! பச்சை நரம்புகளில் பசிய ரத்தம் ஓடத் தொடங்குகிறது! இதயம் துடிக்கிறது! கண்கள் படபடக்கின்றன! மோஹன உதட்டில் முல்லை வெடிக்கிறது! வா என் கண்ணே, வா, வந்துவிடு!

[வீணைத் தந்தியின் டங்கார நாதம். காட்சி கரைகிறது.]

(கனவுக் காட்சி—2.)

[அதே நிலவு பொழியும் இரவு நேரம். அமைதியான சூழ்நிலை, ஆற்றங்கரை நந்தவனத்தில் அமர்ந்து பூமிநாதன் பாடிக் கொண்டிருக்கிறான்.]

பூமி : (பாடுகிறான் : பாட்டு)

வெடித்த கடலமுதை
எடுத்து வடிவு செய்த
மேனியாள்—ஒரு

வீம்பாக மோத்த
காமப் பாலுக் கொத்த
சீனியான் (வெடித்த......

[பாடலின் இசைக்குத் தாளமிடுவதுபோல் பாதச் சிலம்பின் ஓசை மெல்ல மெல்ல நெருங்கி வருகிறது. தொடர்ந்து மோகினி (உயிர் பெற்ற சிலை) அடியளந்து நடந்து வருகிறாள்.]

மோகினி : (வந்தவுடனே) யாரைப் பற்றிப் பாடுகிறீர்கள்? இத்தனை உற்சாகமாக!

பூமி : யாரை—உன்னைத்தான். சரி, நான் உன்னை என்ன பெயரிட்டு அழைக்கலாம்?

மோகினி : (அவன் அருகே நெருங்கி வந்து) அது உங்கள் இஷ்டம்.

பூமி : வாஸ்தவம்தான். ரோஜாப் பூவை எந்தப் பெயரிட்டு அழைத்தால் என்ன, அதன் மணம் குன்றி விடுமா?

மோகினி : (மெல்லச் சிரித்து) ரோஜாவா? அதில் முள் இருக்குமே!

பூமி : கெட்டிக்காரிதான்......மோகினி என்று அழைக்கட்டுமா?

மோகினி : மோகினியா? அவள் ரத்தத்தைக் குடித்து விடுவாளே!

பூமி : (மெல்லச் சிரித்து) நீ மட்டுமென்ன? என் இதயத்தையே குடித்துவிட்டாயே!......மோகினி! இங்கு வா. வாயேன்! (அவளைத் தழுவ முனைகிறான்.)

மோகினி : (விலகி) அதோ......பொறுங்கள்!...அதோ பாருங்கள்!

பூமி : ஆம். நிலவு அமிர்த வர்ஷம் பொழிகிறது!

மோகினி : தங்கள் அன்பும் அந்த நிலவைப் போல்—

பூமி : அன்புக்கு அம்புலியை உதாரணம் காட்டாதே. அம்புலி தேயவும் கூடுமல்லவா?

மோகினி : காதலும் அப்படித்தானே. ஒன்று, அது வளரவேண்டும் அல்லது தேயவேண்டும், சரி தானே!

பூமி : என்னைச் சந்தேகிக்காதே, மோகினி. என் காதல் சந்திரனல்ல ; சூரியன்!

மோகினி : (மெல்ல நகைத்து) வீணாக வார்த்தைகளைக் கொண்டு அம்மானை ஆடாதீர்கள். இந்த வார்த்தை கள் பச்சோந்திகளைப் போன்றவை. கணத்துக் குக் கணம் நிறமாறும் தன்மை கொண்டவை.

பூமி : சூரியனுக்கு ஏழு வர்ணங்கள் இருந்தாலும் நாம் காண்பது ஒரே நிறம்தானே, மோகினி!.

மோகினி : (நாணத்துடன்) உங்கள் பேச்செல்லாம் எனக்குப் புரியாது. நான் ஒரு பேதை.

பூமி : (மோகினியை அணைத்துத் தழுவிக் கொண்டு) மோகினி! உன் அழகால் உண்மையில் என்னைத் தான் பேதையாக்கி விட்டாய். உன் மையலில் நான் கட்டுண்டு கிடக்கிறேன். இந்தச் சுகத்துக் காக எத்தனை வருஷம் தவம் கிடந்தேன் தெரியுமா? அதை நினைத்தால்—?

மோகினி : (சிரிக்கிறாள்) சென்றதை நினைத்து வருந்து வதுதான் பேதைச் செயல். இன்று இந்த வேளையை, இந்தக் கணத்தை இன்பமாகக் கழிப் போம். அதுதான் வாழ்க்கை. ஆமாம், வாழ்க்கை என்பது இதோ இந்தப் பொழுதுதான். மது நுரை வடியுமுன் அதனைப் பருகிவிட வேண்டும்

வாருங்கள், கண்ணுளா, அதோ ஆற்றின் சல சலப்பு நம்மை அழைக்கிறது!

[இருவரும் செல்கிருர்கள்; இருளில் இருவரது சிரிப் பொலியும் கலகலத்துத் தேய்கிறது.]

பின்னணியில் :

ஒற்றைக் குரல் : (பாட்டு)

கோடை கொதித்தது
சூடு பொழிந்தது
கூதிரும் வாடையில்
நஞ்சைக் கலந்தது

ஓடைப் புனலினில்
ஊறும் வசந்தமும்
உள்ளவெறி யிணைக்
கிண்டி யலுத்தது

ஆடிப் பருவத்துச்
சூறையங் காற்றும்
அலைத்து இயற்கை
வனப்பைக் குலைத்தது

ஓடின காலமும்
நில்லாது ஓடின
ஓடின மாதமும்
ஓடின, ஓடின......

[பாட்டின் இசை மங்கி, அடுத்த காட்சி தெளிவடை கிறது.]

## (கனவுக்) காட்சி—3.

[அதே ஆற்றங்கரை, பூமிநாதன் ஒரு பளிங்காசனத் தில் அமர்ந்திருக்கிருன்.]

பூமி : (தனக்குள்) ஒரு வருஷம்!......ஓடிப் போனதே தெரியவில்லையே !

[கால் சிலம்பின் ஓசை நெருங்கி வருகிறது, தொடர்ந்து மோகினி வருகிருள்.]

மோகினி, வந்துவிட்டாயா?...குழந்தையை எங்கே? நம் காதற்கனி எங்கே?......

மோகினி : காதற் கனியல்ல அது; பாபத்தின் சுமை!

பூமி : மோகினி, என்ன சொல்கிருய்? நமது அருமைக் காதல் அளித்த பரிசல்லவா அது!

மோகினி : நான் காதலைத்தான் வேண்டினேன், கண்ணா! கைக்குழந்தையை வேண்டவில்லை.

பூமி : (திடுக்கிட்டு) காதலைப் பாபமென்று கருதுகிருய்?

மோகினி : (மெல்ல நகைத்து) காதலைப் பாபமென்று கருதினுல், உங்களோடு இத்தனை நாள் வாழ்ந்திருக்கவேமாட்டேன். நான் காதலியாகத்தான் இருக்க முடியும்; தாயாக முடியாது!

பூமி : மோகினி, இல் வாழ்வின் இன்பமே குழந்தைகள் தானே, அதைப் பழித்தால்—

மோகினி : நான் குழந்தையைப் பழிக்கவில்லையே! வேண்டாமென்றுதான் சொல்கிறேன்.

பூமி : அப்படியானுல் நீ என்னதான் செய்ய எண்ணியிருக்கிருய்?

மோகினி : அழையாத விருந்தாளிக்கு நுழைய இடமேது?

பூமி : (திடுக்கிட்டு) அடி பாவி!

மோகினி : பாபமாவது? மேனகையும் அப்படித்தானே செய்தாள்!

பூமி : விசுவாமித்திரன் நிராகரிக்கப் போய்த் தானே. நான்......

மோகினி : நீங்கள் வைத்துக் கொள்ளுகிறேன் என் கிறீர்களா? ஒன்று, குழந்தை—அல்லது நான். உங்கள் அன்பு யாருக்காவது ஒருவருக்குத்தான்.

பூமி : ஏன் உனக்கு இந்தப் புத்தி, மோகினி?

மோகினி : (சிரிக்கிருள்) அழகை உபாசித்தால் மற்ற வற்றை மறந்துவிட வேண்டியதுதான்! என்ன சொல்கிறீர்கள்?

*[பின்னணியில் தந்தியின் டங்கார நாதம்.]*

பூமி : (பெருமூச் செறிந்து) உன் இஷ்டம்.

மோகினி : சரி, வாருங்கள் போகலாம்.

*[இருவரும் செல்கிருர்கள். பாதச் சிலம்போசை தேய்ந்து மடிகிறது.]*

பின்னணியில்

ஒற்றைக்குரல. (பாட்டு)

கோடை கொதித்தது
 சூடு பொழிந்தது
கூதிரும் வாடையில்
 நஞ்சைக் கலந்தது
ஓடின காலமும்
 நில்லாது ஓடின
ஓடின மாதமும்
 ஓடின ஓடின......

(கனவுக்) காட்சி—4.

*[இரவு நேரம் : முன்னிலவின் மங்கிய ஒளிமூட்டம் ஆற்றங்கரையை அடுத்த புல்வெளியில் மோகினி யும் அவளது புதிய காதலன் மனோகரனும் சரச சல்லாபத்தில் ஈடுபட்டிருக்கிருர்கள்.]*

மனோகரன் : கண்ணே மோஹினி! உன்னுடன் இவ்வாறு ஏகாந்தமாக இணைந்திருப்பது எனக்கு எவ்வளவு ஆனந்தம் தருகிறது தெரியுமா? உன்னை எட்டாப்பழம் என்றல்லவோ எண்ணி வந்தேன்.

மோகினி : (மெல்ல நகைத்து) மனோகரா! இப்போது எட்டிவிட்டேனல்லவா?

மனோ : ஆமாமடி, மோகினி. ஆனால் பூமிநாதன்—?

மோகினி : நான் என்ன அவர் சொத்தா?

மனோ : என் சொத்தா?

மோகினி : நான் ஒருவர் சொத்துமல்ல.

மனோ : வேண்டாததையெல்லாம் எண்ணி நாம் சிந்தா குலப்படுவானேன்? இதோ நீயும் நானும் ஆற்றங்கரை மணலும், ஆகாயத்துச் சந்திர வளையமுமாக இருக்கிறோமே, இதுதான் சொர்க்கம் இல்லையா. மோகினி?

மோகினி : ஆமாம், மனோகரா!

மனோ : சரி, மோகினி. நான் உன்னை விரும்பினேன் என்பதை நீ எப்படித் தெரிந்துகொண்டாய்?

மோகினி : ஓ, அதுவா? அதை என் உள்ளம் சொல்லிற்று; உங்கள் கண்கள் சொல்லின. இதோ வீசும் தென்றல், அதோ அந்த நிலவு, இந்த மலர்கள் எல்லாம் எனக்குத் தூது சொல்லின.

மனோ : ஆமாம். காதல் தூது சொல்வதற்கென்றே காற்றும் மலரும் கருங்குயிலும் பிறந்திருக்கின்றன.

மோகினி ; ம்?... அதோ அந்த நிலவைப் பார்த்தீர்களா?

மனோ : நமது காதலும் அந்த நிலவைப் போல்......

மோகினி : நம்மை மயக்க வேண்டும், கண்ணா !

(மோகினி அவன் மடியில் சாய்கிறாள். அப்போது தூரத்திலிருந்து 'மோகினி, மோகினி' என்ற பூமி நாதனின் கூப்பிடு குரல் கேட்கிறது. மோகினி திடுக்கிட்டு எழுகிறாள்.)

அதோ பூமிநாதன் குரல் !......

(அதற்குள் பூமிநாதன் அங்கு வந்து அவள் இருக்கும் நிலையைக் கண்டுவிடுகிறான்.)

பூமி : (கோபாவேசமாக) மோகினி ! எத்தனை நாளாக இந்தக் கபட நாடகம் ?

மோகினி : (மௌனம் சாதிக்கிறாள்)

பூமி : ஏன் பேசாமல் நிற்கிறாய் ? அன்று உனக்காக என் பிள்ளையைப் பறிகொடுத்தேன். அதற்கு மேனகையை உதாரணம் காட்டினாய், இன்று யாரைக் காட்டுவாய் ?

மோகினி : (கலகலத்துச் சிரித்து) ஊர்வசியைத் தெரியுமா உங்களுக்கு ? புரூரவஸைக் காதலித்த அதே ஊர்வசி அர்ஜுனனையும் காதலித்தாளே கதை தெரியுமா ? எங்கள் வர்க்கமே அப்படித்தான்.

பூமி : எதிர்த்தா பேசுகிறாய் ? மலர் மலராய் மதுவுண்டு திரியும் பொன்வண்டுதானா நீ ? உன்னைக் கண்டா நான் மயங்கினேன் ?

மோகினி : ஆண்கள் மட்டும் என்ன ?

பூமி : புதுப்புது மது வேண்டுமோ உனக்கும் ?

மோகினி : ஆமாம், நான் அழகு, பிறரைக் கவர்வதற்காகவே வாழ்கிறேன் ? அடிமையாவதற்கல்ல.

பூமி: இதற்காகத்தானு இத்தனை வருஷம் பாடுபட்டேன்? என் வேட்கை இப்படியே வெந்து நீருக வேண்டியதுதானு?

மோகினி: வேறு வழி? அழகு சாச்வதம், யௌவனம்?

பூமி: இத்தனை துணிச்சல் வந்து விட்டதா? இனி நீ இருந்தால் என்ன? போனுல் என்ன?

*(ஆத்திரத்தோடு மோகினியைத் தாக்க முனைந்து தாவுகிறன். மோகினி கலகலவென்று குலுங்கிச் சிரிக்கிருள்.*

*திடீரென்று வீணைத் தந்தியின் டங்கார நாதம். கனவுக் காட்சி மடிகிறது.)*

## காட்சி—5

*(சென்ற கனவுக் காட்சியின் தொடர்பாக, பூமிநாதனின் கரத்தில் இருந்த சுத்தியல் எதிரே நிற்கும் சிலைமீது மோதி விழுகிறது. சிலையில் இருந்து உடைந்து தெறித்த கருங்கல் ஒன்றுபூமிநாதனின் நெற்றியில் பாய்ந்து வடுக் கீறி விடுகிறது.)*

பூமி: (பைத்தியம் கொண்டவனைப் போல்) விசாகா, இதா பார். என்னை அழிக்க வந்த அழகை நான் அழித்துவிட்டேன், இதோ, விசாகா! குமுதா! விசாகா!......

*(மயங்கிச் சிலையின்மீது விழுகிருன். சிலை சாய்ந்து விழுந்து துண்டுபடுகிறது. பூமிநாதனின் நெற்றியிலிருந்து ஒழுகும் ரத்தம் சிலையின் மார்பைக் கறைப்படுத்துகிறது......*

*பின்னணியில் பூபாள ராகத்தின் மெல்லிய தந்தி இசை; மெல்ல மெல்ல ஆரோகணித்துத் தெளிவு பெறுகிறது.*

காலைப் பறவைகளின் கீச்சுக்குரல் இருளின் அந்தகாரத்தையும் அமைதியையும் குலைத்து ஒலிக்கிறது. கீழ்த்திசை உதய சூரியனின் பிள்ளைக் கதிர் ஒன்று, மேக மண்டலத்தைக் கிழித்துக் கொண்டும், பனிப்படலத்தில் மிதந்துகொண்டும் வந்து சிலையின் மார்பின்மீது விழுந்துஜொலிக்கிறது......

தொடர்ந்து பாதக் குறடுகளின் ஓசை நெருங்கி வருகிறது. விசாகன் வருகிறுன்.)

விசா : (வரும்போதே) பூமிநாதா! இன்னுமா வேலை முடியவில்லை?...

(வந்ததும் அங்குள்ள நிலைமையைக் கண்டு ஓடோடிச் சென்று பூமி நாதனை எழுப்புகிருன்) பூமிநாதா! என்ன இதெல்லாம்? சிலைஏன் உடைந்து கிடக்கிறது? என்ன, தலையெல்லாம் ரத்தம்? பூமிநாதா!...

(பூமிநாதன் உசும்பிக் கண் விழிக்கிருன்)

பூமி : யாரது? மோகினியா?...

விசா : மோகினியா? ...யாரவள்? ...... நான் தான் விசாகன். பூமிநாதா, எழுந்திரு, என்ன இதெல்லாம்?

பூமி : (எழுந்திருந்து) விசாகா! நான் உண்மையை உணர்ந்துவிட்டேன்

விசா : உண்மையா? சரி. இந்தச் சிலை ஏன் உடைந்து போயிற்று? உன் உயிருக்குயிரான தாச்சே.

பூமி : அதுபோனதே நல்லதாயிற்று. தசைக்கோளத்து அழகின் பிரதிபிம்பம் அது! அதற்கு இதயம் ஏது? சரி, குமுதா எங்கே?

விசா : வீட்டில்தான்.

பூமி : சரி, வா. போகலாம்.

(பூமிநாதனும் விசாகனும் புறப்படுகிறார்கள். உடைந்து விழுந்த சிலையில் படிந்திருந்த ரத்தக் கறைமீது சூரிய ஒளி தகதகக்கிறது.)

பின்னணியில்

ஒற்றைக்குரல் : (பாட்டு)

கோடை கொதித்தது
    சூடு பொழிந்தது
கூதிரும் வாடையில்
    நஞ்சைக் கலந்து
ஓடின காலமும்
    நில்லாது ஓடின
ஓடின மாதமும்
    ஓடின ஓடின......

# மனமோகினி

பாத்திரங்கள் :

'மார்க்கண்டேயா பிலிம்ஸ்' புரட்யூஸர்
ஷி பிலிம்ஸ் கம்பெனி சினிமா டைரக்டர்
பிரபல எழுத்தாளர் — சுகுமார்
டைரக்டரின் மனைவி — சுந்தரி
சுகுமாரின் நண்பன் — சங்கர்
நடிக நக்ஷத்திரம் — குமாரி தில்ரூபா
மற்றும்
ஸ்டுடியோ சிப்பந்திகள் முதலியோர்.

## காட்சி—1

[மார்க்கண்டேயா பிலிம்ஸ் கம்பெனி காரியாலயத்திலுள்ள புரட்யூஸரின் தனி யறை. புரட்யூஸர் ஒரு சுழல் நாற்காலியில் அமர்ந்து கால்களை மேஜை மேல் தூக்கிப் போட்டுக்கொண்டு, 'ஹாயாக' சிகரெட் பிடித்துக்கொண்டிருக்கிறார். மேலே சுழன்றுகொண்டிருக்கும் மின்சார விசிறியின் காற்று புகைச் சுருள்களைக் கலைத்தெறிவதை ரசித்துக்கொண் டிருக்கிறார். அவருக்கு எதிரேயுள்ள மேஜையருகே சினிமா டைரக்டர்

ஏதோ ஒரு பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார், கருகித் தீய்ந்த சிகரெட்டை 'ஆஷ்ட்ரே'யினுள் புதைத்துவிட்டு, புரட்யூஸர் டைரக்டரிடம் திரும்புகிறார்.]

புரட்யூஸர் : என்ன டைரக்டர் ஸார்? வருகிற சரஸ்வதி பூஜையன்னிக்கு நாமும் ஏதாவது ஒரு புதுப் படத்துக்குப் பூஜை போட்டுட வேண்டியதுதான். உங்க 'ஐடியா' என்ன ?......ம் ?......

டைரக்டர் : (கையிலிருந்த பத்திரிகையை மேஜை மீது வைத்துவிட்டு) ஆமாமா. இப்போ எடுத்துக்கிட்டிருக்கிறதுதான் இந்த 'மந்த் எண்'டிலே ஸென்ஸாருக்கு ரெடி ஆயிடுமே.

புரட் : அது சரி ஸார். நம்ம அடுத்த படம் ஏதாவது சமூகக் கதையா இருந்தா நலலது. இப்போதான் புராணப் படங்களுக்கு அவ்வளவு மவுஸ் இல்லையே. மேலும் 'காஸ்ட் ஆப் புரடெக்ஷன்' வேறே ஏகமாப் போயிடும்.

டைரக் : வாஸ்தவம்தான். இப்போ எடுக்கிற படம் 'க்வாஸி ஹிஸ்டாரிக்கல் டைப்'; அடுத்த படம் 'சோஷியல் ஒன்'னாகத்தான் இருக்கணும்.

புரட் : என்ன ஸார்? நான் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்றதுக்கா உங்களைக் கேட்டேன்? ஏதாவது நல்ல கதை 'ரெடி'யா இருக்கா ?

டைரக் : (உற்சாகமாக) கதைக்கென்ன? (மேஜை மீதிருந்த பத்திரிகையை எடுத்து நீட்டி) இதோ இந்த 'புக் ரெவ்யூ கால'த்தைப் படிச்சுப் பாருங்க.

புரட் : நான் என்னத்தைப் படிக்கிறது? நீங்களே வாசியுங்க, கேக்கலாம்.

டைரக் : (தொண்டையை லேசாகக்கனைத்துக்கொண்டு பத்திரிகையை வாசிக்கத் தொடங்குகிறார்.) மன மோகினி—ஆசிரியர் சுகுமார்—விலை ரூபாய் ஐந்து —கிடைக்குமிடம் : பிருகஸ்பதி பிரசுரம் சென்னை நாலு. ஆசிரியர் சுகுமார் சென்ற சில வருஷங்களுக் குள் புகழேணியின் உச்சிக்கேறிவிட்ட முதல்தரக் கதாசிரியர். அற்புதமான கற்பனை, அநாயாச மான தமிழ் நடை, ஜீவனுள்ள பாத்திர சிருஷ்டி. உன்னத லட்சியங்கள்—இவை எல்லாம் சுகுமா ரின் சிருஷ்டிகளின் தனிப் பண்புகள். மனமோகி னியை அவரது மாஸ்டர் பீஸ்—மாக்னம் ஆப்பஸ் —என்றே சொல்லவேண்டும். கதாநாயகன் காதலி லும் கடமையிலும் சிக்கித் தவிக்கிறான். ஒருபுறம் காதலி; மறுபுறம் தேசம். இறுதியில் தேசமே வெற்றி பெறுகிறது; தேசமே அவனது மனத் தைக் கவரும் மனமோகினியாகி விடுகிறது. அந்த மனமோகினியின் விடுதலைக்காக அவன் தன் உயிரையே தியாகம் செய்கிறான். அற்புதமான இந்த நாவலை அனைவரும் படிக்கவேண்டியது அவசியம். இந்தக் கதை சினிமாப் படம் எடுப்ப பதற்கு மிகவும் உகந்தது. படத் தயாரிப்பாளர்கள் கவனத்தை இந்நாவல் கவரும் என்று நம்புகிறோம். ...(பத்திரிகையை மூடிவிட்டு) பார்த்தீர்களா, ஸார். சுகுமாரின் கதை என்றாலே நல்ல கிராக்கி......

புரட் : சுகுமாரா ? யாரையா அவன் ? கேள்விப் பட்டதே இல்லையே. இந்தக் காலத்திலேதான் அம்மா வயித்திலே யிருந்து குதிக்கையிலேயே ஒவ்வொருத்தனும் அறிஞன்னு புறப்பட்டுடறாங் களே, பசங்க !

டைரக் : புரட்யூஸர் ஸார், நீங்க சுகுமாரை அந்தமாதிரி நினைச்சுடக் கூடாது. 'பிலிம் சர்க்கிள்'லேதான்

அவர் பெயர்'பாப்புல'ரா இல்லையே ஒழிய,'லிட்டரரீ ஓர்ல்ட்'டிலே, அவர் ரொம்பப் பிரபலமானவர். பெரிய 'ஜீனியஸ்' ஸார், அவர்!

புரட் : (மெல்லச் சிரித்து) இந்த 'ஜீனியஸ்'களெல்லாம் நம்ம 'லைனு'க்கு ஒத்து வராதே!......சரி, நீங்க அந்த நாவலைப் படிச்சுப் பார்த்தீங்களா ?

டைரக் : படிக்காமலா ? புஸ்தகம் வெளிவந்த புதுசிலேயே படிச்சுப் பார்த்துட்டேன். மனமோகினி தான் ஸார். நம்ம 'நெக்ஸ்ட் புரடெக்ஷன் !'

புரட் : நீங்க சொன்னு சரிதான். அப்படின்னு அந்த ஆசாமியைச் சந்திச்சி, ஒரு வகையா முடிக்கப் பாருங்க.

டைரக் : அதுக்கென்ன ? ஆனுல்—

புரட் : அதுக்குள்ளே என்ன எழவு 'ஆனுல் ?'

டைரக் : ஒன்றுமில்லை. இந்த சுகுமாரை எனக்குப் 'பெர்ஸண'லாத் தெரியாது. ரொம்பக் கண்டிப்பான பேர்வழின்னு கேள்வி.

புரட் : அதென்ன ஸார் கண்டிப்பு? கதாசிரியர் என்ன சினிமா ஸ்டாரா, கிராக்கி பண்றதுக்கு ?............ அப்படி என்ன ஸார் அதிகம் கேட்டுடப் போருன் ?

டைரக் : அதைச் சொல்ல வரலை ஸார். முதல்லே இந்த ஆசாமி சினிமாவுக்குக் கதை எழுதுறதுக்கே ஒத்துக்கணும். அதுக்கே அவர் மசியிறது சிரமம்

புரட் : என்ன ஸார் ? நீங்களேதான் கதையையும் போடுறீங்க, கதையையும் அழிக்கிறீங்க !......

டைரக் : சேச்சே ! அதுக்காக இவரை விட்டுடவா சொல்றேன். இந்த மனமோகினியைப் படமா

எடுத்தா பணமோகினி தாஞ நம்மைத் தேடி வருவா. நிச்சயம் 'பாக்ஸ் ஆபீஸ் சக்செஸ்!'

புரட் : அப்படின்ஞ, கூடக் குறையன்ஞலும் பேசி முடிச்சிடுங்க. ஆஞனப்பட்ட லட்சியம் பேசிக்கிட்டு வந்தவன் எல்லாம் நம்மிடம் அதையெல்லாம் அடகு வச்சிட்டான். பணமில்லா ஸார் பேசுது!

டைரக் : பணத்துக்கெல்லாம் மசியிற ஆசாமியில்லே இவர். எனக்கு சுகுமாரோடே சிநேகிதன் ஒருத்தனைத் தெரியும். அவனைக் கொண்டு—

புரட் : ஏதாச்சும் செய்யுங்க...எனக்கு சரஸ்வதி பூஜையன்னைக்குள்ளே 'ஸ்டில்'லோடே விளம்பரம் தந்தாச் சரி.

டைரக் : ஓ. கே. ஸார். செஞ்சுடறேன்.

## காட்சி—2

*[எழுத்தாளர் சுகுமாரின் வீடு. சுகுமார் ஒரு ஈஸிச் சேரில் சாய்ந்துகொண்டு ஏதோ ஒரு புத்தகத்தை மிகவும் ஈடுபட்டு வாசித்துக் கொண்டிருக்கிருர். அடுக்களைப் புகையால் கன்றிக் கலங்கிய கண்களைக் கசக்கி விட்டவாறே சுகுமாரின் மனைவி சுந்தரி பிரவேசிக்கிருள்.]*

சுந்தரி : என்னங்க, உங்களைத்தானே. பால்காரன் காலையிலேயே வந்து ஒரு மூச்சுக்குப் பாடிட்டுப் போஞன். அவன் பாக்கியும்தான் எவ்வளவு ஆகுது?

சுகுமார் : (புத்தகத்தை மூடிவிட்டுத் தலை நிமிர்ந்து) எவ்வளவு ஆகுதுன்னு இப்போச் சொல்லி ஆகப் போவதென்ன? கையிலே காசு இருக்கிற சமயமாப்

பார்த்துச் சொல்லு, சல்லிக் காசு இல்லாம, தீர்த்துப்பிடுவோம்.

சுந்தரி : (பெருமூச்சு விட்டு) சூரியன் மேற்கே உதிக்கிறப்பத்தான் உங்களுக்குக் காசு வரும்! ஹூம்! இந்த வீடு என்னைக்கித்தான் விடியப் போகுதோ தெரியலே. இந்த எழவெடுத்த பேனாவையும் தாளையும் முறிச்சி......

சுகுமார் : (மெல்லச் சிரித்தவாறு) குறையையும் சொல்லிப்பிடேன், சுந்தரி! எழுத்தாளர் சுகுமாரின்னு ஊரெல்லாம் ஒரே பேரா யிருக்கு. நீ ஒருத்திதான் என்னை மதிக்கிற பாட்டைக் காணோம்.

சுந்தரி : (செல்லச் சிணுங்கலோடு) மதிக்காம என்ன? வாய் நிறைஞ்சு புகழ்ந்துவிட்டால் மட்டும் வயிறு நிறைஞ்சிடுமா?

சுகுமார் : என்னமோ நம்ம அதிருஷ்டம் அது! மனமோகினி 'சேல்ஸ் ஸ்டேட்மெண்ட்' இன்னிக்கு நாளைக்கு வந்துடும். வந்தவுடனே—

சுந்தரி : வந்தவுடனே எனக்கு வைரத்தோடு வாங்கப் போறேளா? வங்கி பண்ணிப் போடப் போறேளா? புஸ்தகம் வித்து வர்ர பணத்தைக்கொண்டு புஸ்தகமாகவே வாங்கித் தள்ளுவீங்க. புஸ்தகம் சோறு போடுமா?

சுகுமார் : போடுமோ, போடாதோ! அதுக்காகப் படிக்கிறதை நிறுத்த முடியுமா?

சுந்தரி : உங்க படிப்புத்தான் வீட்டு அடுப்பையே அணைச்சிடும் போலிருக்கே.

சுகுமார் : (சிரித்துக் கொண்டே) அடேடே! நீயும் அழகாகத்தான் பேசறே! எழுத்தாளர் மனைவி யில்லையா நீ? கம்பன் வீட்டுக்—

சுந்தரி : சரி சரி. பேச்சை மடக்கப் பார்க்காதிங்க. எங்கேயாவது, அஞ்சு பத்து கைமாத்தாவது வாங் கிட்டு வாங்க.

[இந்தச் சந்தர்ப்பத்தில் வெளியிலிருந்து 'சுகுமார், சுகுமார்' என்ற கூப்பிடு குரல் கேட்கிறது.]

சுகுமார் : (தலையை உயர்த்தி) யாரது ?

சுந்தரி : யாராயிருப்பா? எவனாவது ஒரு கத்துக்குட்டி ரசிகன். இல்லேன்னா, கதாசிரியன்! போங்கோ போங்கோ. இனிமே நான் எதுக்கு ?

[சுந்தரி விசுக்கென்று தோளை இடித்துக் கொண்டு உள்ளே நுழைகிறாள், சுகுமார் எழுந்து சென்று தாழைத் திறக்கிறார். திறந்தவுடன் சுகுமாரின் நண்பன் சங்கர் பிரவேசிக்கிறான்.]

சுகுமார் : (சங்கரை வரவேற்றவாறே) அடடே! சங்கரனா? வாப்பா வா. உன்னை என்ன, ஆளையே காணோமே. சரி, அப்படி உட்கார். (நாற்காலி யைக் காட்டுகிறார்.)

சங்கர் : (உட்கார்ந்தவாறே) இப்பவாவது கண்டுட் டியா, இல்லையா ?

சுகுமார் : (தானும் அமர்ந்தவாறே) உன்னைத் தேடி நானே வரலாம் என்றிருந்தேன்.

சங்கர் : என்ன விஷயம்?

சுகுமார் : ஒரு அஞ்சு ரூபாய் கைமாத்து வாங்கலா மின்னுதான்.

சங்கர் : (உற்சாகமாக) அஞ்சென்ன ? ஐயாயிரம்னாலும் தர்ரேன்.

சுகுமார் : அட, அவ்வளவுக்கு எப்போதடப்பா ஆளாணுய் ? ஏதாவது ஏ. பி. டி. சி.....இல்லெ ; லாட்டரி கீட்டரி ?—

சங்கர் : நம்ம பாடு என்னைக்கும் உள்ள லாட்டரிதான். என்னுலே இப்போ உனக்கு அஞ்சு பைசாக்கூடக் கொடுக்க முடியாது.

சுகுமார் : பின்னே ?

சங்கர் : ஆனுல், உனக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைக்கிறதுக்கு வழிபண்ண மட்டும் முடியும் !

சுகுமார் : (சிரித்து) அதென்ன வழி அப்பனே !

சங்கர் : சுகுமார் ! உனக்கு மார்க்கண்டேயா பிலிம்ஸ் தெரியுமா ? அதன் டைரக்டர் உன் கதையை— அதானப்பா, உன் மனமோகினியைப் படிச்சுட்டு ஒரேயடியாத் தலைசுத்தி ஆடுருர் !

சுகுமார் : யார் ஆடினு நமக்கென்ன ? இங்கே நம்மபாடு தான் இப்போ ஆட்டமாயிருக்கு !

சங்கர் : அந்த ஆட்டமெல்லாம் நின்னுபோயிடும். நிச்சயமா அந்த டைரக்டர் உன் கதையைப் படம் பிடிக்கணும்னு துடியாய்த் துடிக்கிருர்.

சுகுமார் : (வியப்புடன்) என்னது ? படம் பிடிக்கவா ? நல்லாச் சொன்னே, போ. சினிமாவுக்குக் கதை எழுதுறதின்னுலே எனக்குப் பிடிக்காத விஷயம்.

சங்கர் : ஆனு, இதிலே பிடிக்கிற விஷயம் ஒண்ணு இருக்கே !

சுகுமார் : என்ன அது?

சங்கர் : (விரலைச் சுண்டிக்காட்டி) பணம்!

சுகுமார் : பணத்துக்காக என் கொள்கையை விட்டு விடச் சொல்கிறாயா, சங்கர். அது மட்டும் முடியாது; முடியவே முடியாது.

சங்கர் : அட, உன் கொள்கையை எல்லாம் ஏதாவது புஸ்தகத்திலே நல்லா எழுதிவை. நான் சொல்றதுக் கென்ன?

சுகுமார் : சங்கர், புஸ்தகம் எழுதறது நம்ம கைக் குள்ளே. சினிமாவா எடுக்கிறதோ நம்ம கையிலே இல்லே. சினிமாவுக்குக் கொடுத்தால் என் கதையின் ஜீவனே பாழ்பட்டுப் போகும். வேண்டவே வேண் டாம். நான் என் கதையை விலை சாட்டத் தயாரா யில்லே.

சங்கர் : (தூள் கொட்டியவாறு) சுகுமார், வேதாந்தம் பேசாதே. வெறுங்கை முழம் போடாது. பிழைக்கிற வழியைப் பாரு. பிறகு பேரும் புகழும் தானு வருது. அந்த டைரக்டர் ரொம்ப நல்லவர். உன் கதையை ஒண்ணும் கொன்னுப்பிட மாட்டார். நீ எழுதியிருக் கிறபடியே எடுக்கணும்னு சொன்னுப் போச்சு!

சுகுமார் : இருந்தாலும்—

சங்கர் : (குறுக்கிட்டு) இருந்தாலுமாவது, நின்னுலுமா வது? (இடத்தை விட்டு எழுந்தவாறே) நான் வரு கிறேன். நாளை 'ஸெட்டில்' பண்ணிப்பிடுவோம். (புறப்பட யத்தனிக்கிருன்.)

சுகுமார் : சங்கர், அவசரப்படாதே. நான் யோசிச்சிச் சொல்றேன்.

**சங்கர் :** (சிரித்து) பைத்தியக்காரப் பிள்ளையாய் இருக்கிறியே. இந்தக் காலத்திலே பணத்தைக் குடுக்கிறதுக்குத்தானேப்பா யோசிக்கணும். வாங்கிறதுக்குமா யோசனை? ஊருக்கெல்லாம் உபதேசம்பண்றே. உனக்கு உபதேசம் பண்ண ஒருத்தர் வேண்டியிருக்கு! சரி, நான் வர்றேன்.

*(சுகுமாரின் பதிலையே எதிர்பாராதவனாக சங்கர் வெளியேறிச் செல்கிறான். சுகுமார் ஒன்றும் தோன்றாதவனாக, ஈஸிச்சேரில் சாய்கிறார்.)*

## காட்சி—3

*(சுகுமாரின் வீடு. சுகுமார் தன் மேஜைமுன் அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறார். 'சுகுமார்' என்ற சங்கரின் குரல் கேட்டுத் தலை நிமிர்கிறார். எதிரே சங்கரும் மார்க்கண்டேயா பிலிம்ஸ் புரட்யூஸரும், டைரக்டரும் வந்து சேர்கிறார்கள். வந்தவர்களை வரவேற்பதற்காக இடத்தை விட்டு எழுந்திருக்கிறார் சுகுமார்.)*

**சுகுமார் :** நமஸ்காரம். வாருங்கோ. (ஆசனங்களைக் காட்டி) இப்படி உட்காருங்க.

**டைரக்டர் :** நமஸ்காரம்.

*(புரட்யூஸரும் டைரக்டரும் ஆசனங்களில் அமர்கின்றனர்.)*

**சங்கர் :** (வந்தவர்களை அறிமுகப்படுத்தும் முறையில்) சுகுமார், இவாள்தான் மார்க்கண்டேயா பிலிம்ஸ் புரட்யூஸர்; இவாள் டைரக்டர்.

**சுகுமார் :** சந்தோஷம்.

டைரக் : (தொண்டையைச் செருமிக் கொண்டே) உங்களை நேரில் சந்தித்து அளவளாவணும்கிறது ரொம்பநாள் ஆசை. இப்போதுதான் நிறை வேறித்து. உங்க மனமோகினி அற்புதமான கதை. அதைப் படமா எடுத்து இன்னும் பிரபலப்படுத்த லாமென்று ஒரு உத்தேசம். புரட்யூஸர் ஸாரும் சரின்னுங்க, வந்தோம்.

சுகுமார் : (தன் உள்ளங்கைகளைப் பார்த்தவாறே, டைரக்டரின் முகத்தைப் பாராமல்) எனக்கு இந்தச் சினிமா விவகாரமே அவ்வளவாகப் பிடிப்பதில்லை.

டைரக் : உங்களைப் போன்றவாள் எல்லாம் இப்படி ஒதுங்கியிருந்தா, இந்தச் சினிமாத்துறைதான் எப்படி உருப்படும்? பாருங்க, நானும் உங்களை மாதிரிதான். என்னென்னமோ ஆசை. இருந்தாலும் என்னத்தைச் செய்ய முடிகிறது, ஒண்டிக் கட்டையா-

புரட் : (குறுக்கிட்டு) என்ன டைரக்டர் ஸார்? நீங்களே மிஸ்டர் சுகுமாரைப் பின்னடிக்கச் செய்துடுவீங்க போலிருக்கே!

டைரக் : சேச்சே! நிலையைச் சொன்னேன். ஸ்டுடியோ விலே 'லைட் பா'யாக இருந்தவனுக எல்லாம் டைரக் டர்னு கிளம்பிட்டா, சினிமா உலகம்தான் என்னு கிறது?...மிஸ்டர் சுகுமார் நம்மைப் பத்தியும் தப்பா நினைச்சிடக் கூடாது பாருங்க. அதுக்காகத் தான் சொல்ல வந்தேன். கலையைக் கொலை பண்ற சில படங்களைப் பார்த்துட்டு, அவாளுக்கு இந்தத் துறை மேலேயே ஒரு வெறுப்புத் தோணிருக்கு. அதைப் போக்குறது நம்ம கடமை இல்லையா?

புரட் : ஆமாம், மிஸ்டர் சுகுமார். நாங்க பணத்தைப் பணமின்னு பாராமே, கலையைக் கலைக்காகவே

வளர்க்கணும்னு கங்கணம் கட்டியிருக்கோம். அதனாலே நீங்க ஒண்ணுக்குமே சந்தேகப்பட வேண்டாம்.

சங்கர் : (குறுக்கிட்டு) சந்தேகமாவது? என்ன சுகுமார்? சரின்னு ஒரு வார்த்தை, அவங்க எதிரிலேயே சொல்லிடப்பா.

சுகுமார் : புரட்யூஸர் ஸார். நீங்க என் கதையைப் படமாக்க விரும்புகிறது சரிதான். ஆனால், அதனால் என் கதை உருக்குலைந்து போய் விடுமோன்னு தான் பயப்படுகிறேன். நான் படிச்ச எத்தனையோ அருமையான இலக்கியங்கள் கூட, சினிமாவிலே வர்ரபோது—

டைரக் : (செல்லக் கோபத்துடன்) எங்களை என்ன கத்துக்குட்டிங்கள்'னு நினைச்சேளா ஸார்? (குரலை மாற்றி) உங்க கதை என்ன, உங்க பேர் என்ன, பெருமை என்ன? நீங்க கதையைக் கையாண்டிருக்கிற முறை என்ன?...அதையெல்லாம் உங்க முகத்துக்கு நேரே சொல்லப்பிடாது. திரையிலே காட்ட வேண்டிய சங்கதி!

சுகுமார் : (சலனமுற்றுத் தளர்ந்து) அப்படின்னா சரி. எழுத்தாளனுக்கு அவன் கதை பெற்றெடுத்த குழந்தை மாதிரி. அதை உருக்குலையச்சுச் சித்திரவதை பண்ணினா, மனசு தாளாது.

டைரக் : உங்க கதைக்கு ஒரு ஆபத்தும் வராது.

சங்கர் : சுகுமார்! புரட்யூஸர், டைரக்டர்—ரெண்டு பேரும் ரொம்ப நல்லவா. நீ ஒண்ணுக்கும் கவலைப் படாதே. (புரட்யூஸரிடம் திரும்பி) எங்கே ஸார், 'அக்ரிமெண்ட் பாரம்?'

புரட் : (தம்மிடமுள்ள தோல் பையிலிருந்து பாரத்தை எடுத்துக் கொடுத்தவாறே) இதோ இருக்கு. மிஸ்டர் சுகுமார், உங்களுக்குத் திரைக் கதையும் வசனமும் எழுதித் தர்ரதுக்கு மொத்தம் ஐயாயிரம் ரூபாய் தர்ரோம். அட்வான்ஸா இப்போ ஒரு ரெண்டாயிரம் போதுமோ ?

சங்கர் : போதுமான்னு என்ன கேள்வி? நம்ம சுகுமாரோடே எழுத்துக்கு அக்ஷர லட்சம் கொடுக்கலாம். இருந்தாலும் சுகுமார் பணத்தைப் பெரிசா மதிக்கிறவன் இல்லே.

சுகுமார் : (ஒப்பந்த பாரத்தைப் பார்த்தவாறே திடுக்கிட்டுத் தலை நிமிர்கிருன்) என்ன ஸார், இது? என்னமோ கதையைச் சௌகரியப்படி திருத்திக் கொள்ள உங்களுக்கு உரிமையா?

டைரக் : (சாவதானமாக) அதுவா? அதைப் பார்த்து நீங்க ஒண்ணும் பயந்துடாதிங்கோ. அது மாமூல் எக்ரிமெண்ட் 'சினிமாட்டிக்'கா இருப்பதற்காக ஒண்ணு ரெண்டு 'மைனர் ஆல்ட்டரேஷன்ஸ்'— சில்லறைத் திருத்தங்கள். அதுக்காகத்தான்.

சுகுமார் : எனக்குப் புரியலேயே ஸார்.

டைரக் : (அழுத்தமாக) கையெழுத்தைப் போடுங்க ஸார், இந்தாங்க ரூபாய் ரெண்டாயிரம். (ரூபாய்க் கட்டுக்களை மேஜைமீது எடுத்து வைத்தவாறே பேனாவையும் திறந்து நீட்டி) ஏதாவது 'ஆல்ட்டர்' பண்றதுன்னாலும் நீங்கதானே பண்ணப் போறேள்? பயப்படாமக் கையெழுத்தைப் போடுங்கோ.

சங்கர் : (சுகுமார் தயங்குவதைக் கண்டு) சுகுமார், யோசிக்காதே சும்மா போடு, நான் இருக்கேன்.

[சுகுமார் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்து விட்டு, ரூபாய்க் கட்டுக்களையும் கையில் எடுத்துக் கொள்கிறார். புரட்யூஸரும், டைரக்டரும் ஆசனங்களை விட்டு எழுகிறார்கள்.]

**டைரக் :** அப்போ சரி, ரொம்ப தாங்க்ஸ் ஸார். நாங்க வர்றோம். மற்ற விஷயங்களை அப்போதைக் கப்போது பேசிக்கிடலாம்.

**சுகுமார் :** (அவர்களை வழியனுப்பியவாறே) நமஸ்காரம். போய் வாருங்கோ.

**சங்கர் :** (புரட்யூஸரும், டைரக்டரும் வெளியே சென்ற பிறகு) என்ன சுகுமார், உன்பாடு இன்னும் கொஞ்ச நாளைக்குக் கவலை இல்லை.

**சுகுமார் :** கவலையில்லையா? இந்தப் படம் முடிகிற வரையிலும் எனக்குக் கவலைதான்.

**சங்கர் :** சரி, நான் வர்றேன், ஓசிக்காரிலே வீட்டு வரைக்கும் போறதை விடுவானேன். நான் வரட்டுமா?

[சங்கர் அவசரமாக வெளியேறுகிறான். சிறிது நேரத்தில் வெளியே ஹார்ன் அடித்தவாறு கார் புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்கிறது.]

**சுகுமார் :** (கையிலுள்ள நோட்டுக் கட்டுகளை விசிறி மாதிரி உலுப்பிவிட்டு அழகு பார்க்கிறான். புத்தம் புது நோட்டுகள் சரசரத்து ஒலி செய்கின்றன.) சுந்தரி, சுந்தரி.

**சுந்தரி :** (அகப்பையும் கையுமாக அடுக்களையிலிருந்து வந்தவாறே) சுந்தரிக்கு இப்போ என்ன வந்திட்டுது?

**சுகுமார் :** வரும்போதே கோபந்தானா? (நோட்டுக்கட்டுக் களைக் காட்டி) இதோ பார்த்தாயா? இப்போ

சொல்லு, வைரத்தோடு வேணுமா, வங்கி வேணுமா ?

சுந்தரி : (வியப்புற்று விழித்தவளாய்) ஏது இவ்வளவு பணம் ?

சுகுமார் : என் மோகினி சினிமாவிலே சம்பாதிச்ச பணம் இது, தெரிஞ்சுதாடி, அம்மா !

சுந்தரி : நிசம்மாத்தானா ? ரெண்டு நாளா இடது கண்ணு துடியாத் துடிச்சப்பவே நினைச்சேன் !

சுகுமார் : சரி, (அதிகாரத்தோடு) பால்காரன, கணக் கைச் சொல்லும் சீக்கிரம் !

*[இருவரும் வாய்நிறைந்து சிரிக்கிறார்கள்.]*

## காட்சி—4

*[மார்க்கண்டேயா பிலிம்ஸ் காரியாலயம். டைரக்ட ரின் தனியறை. டைரக்டர் தமது ஆசனத்தில் அமர்ந்து ஏதோ பைல்களைப் புரட்டிக் கொண் டிருக்கிறார். எதிரே சிகரெட் புகை மண்டலத் துக்குள் மூழ்கியவாறே, புரட்யூஸர் தமது கையி லுள்ள எக்ஸ்ட்ரா நடிகைகளின் புகைப்படங்கள் கொண்ட போட்டோ ஆல்பத்தைப் புரட்டிப் பார்க்கிறார். எழுத்தாளர் சுகுமார் உள்ளே பிரவேசிக்கிறார்.]*

சுகுமார் : (வணக்கம் தெரிவித்தவாறே) நமஸ்காரம். ஸார்.

டைரக் : வாங்கோ, வாங்கோ.

புரட் : டேக் யுவர் ஸீட், மிஸ்டர் சுகுமார்.

*[சுகுமார் அங்கிருந்த சோபா ஒன்றில் அமர்கிறார்.]*

டைரக் : என்ன ரைட்டர் ஸார்? எவ்வளவு தூரம் ஆகியிருக்கு?

சுகுமார் : சுமார் பதினைந்து சீன்கள் ஆகியிருக்கும்.

புரட் : மிஸ்டர் சுகுமார், நாங்க உங்களை எதற்காக வரவழைத்தோம், தெரியுமா?

சுகுமார் : ஏன்?

டைரக் : நம்ம 'ஸ்டோரி ட்ரீட்மெண்'டிலே ஒரு சிறு 'சேஞ்ச்' செய்யணும். உங்களிடம் விஷயத்தைச் சொல்லி, 'டிஸ்கஸ்' பண்ணிண்டு—

சுகுமார் : என்னது? சேஞ்சா?

டைரக் : ஆமாம் ஸார். புதுசா ஒரு 'காரெக்டர்' சிருஷ்டிக்கணும்.

சுகுமார் : புதிய கதாபாத்திரமா?

டைரக். ஆமாம் ஸார். 'ஒன் மோர் லேடி காரெக்டர்!'

சுகுமார் : (யோசித்தவாறே) அவசியம் வேணுமோ?... அப்படி யென்றால் எங்கேயாவது ஒரு 'மைனர் ரோல் சிறு பாத்திரமா —

புரட் : மைனர் ரோலா? சேச்சே!—

சுகுமார் பின்னே?

டைரக் : சுகுமார் நம்ம கதையின் கதா நாயகிக்கு எதிரா, கதா நாயகனை இன்னொருத்தியும் காதலிக்கிறதா பண்ணிட்டா?

சுகுமார் : இல்லையே ஸார். கதையிலே காதல் ஒரு புறம். தேசம் ஒருபுறம் இரண்டே அம்சங்கள் தானே, மூன்றாவது காதலுக்கு அங்கு இடமே இல்லையே!

டைரக் : அதுக்கென்ன? காதலிப்பதிலேயே ஒரு போட்டி. 'ட்ரிபிள் கான்பிளிக்ட் எபெக்ட்!'—நீங்க சேர்த்துப் பாருங்க ஸார், பிரமாதமாயிருக்கும்.

சுகுமார் : கொஞ்சம்கூடப் பொருத்தமில்லையே!

டைரக் : பொருத்தத்தைப் பார்த்தா முடியுமா ஸார்? நாம் என்ன ஜாதகமா கணிக்கப் போறோம்?

சுகுமார் : நீங்க சொல்றதாலே, வேணுமென்றால், மைனர் ரோலாக......

புரட் : சொன்னதையே சொல்றீங்களே, தேவகி பெரிய ஸ்டார் ஸார். அவள் ஒன்றும் எக்ஸ்ட்ரா நடிகை அல்ல, மைனர் ரோல்லே நடிக்கமாட்டா

டைரக் : ஆமா ஸார். அவளிடம் எக்ரிமெண்ட பண்றதே பெரும்பாடாப் போச்சு. அம்பதினாயிரம் பேசி அந்த ஸ்டாரை 'புக்' பண்ணியிருக்கிறோம். குடுக்கிற பணத்துக்கு வேலை வாங்க வேண்டாமா?

சுகுமார் : இருந்தாலும், கதை—

புரட் : கதை என்ன ஸார் பிரமாதம்? நீங்க எழுதுகிற கதையைக் கிழிச்சுப் போட்டுட்டு வேறெ எழுதினாப் போச்சு. ஆனால் அவளிடம் எழுதிக்கொண்ட காண்ட்ராக்டைக் கிழிச்சி எறிய முடியுமா?

சுகுமார் : (பெருமூச்செறிந்து, சிறிது மௌனம் சாதித்து) பார்க்கிறேன்.

புரட் : பார்க்கிறேன், கேக்கிறேன்னுல்லாம் சொல்லப் பிடாது. அவ 'போர்ஷ'னை அடுத்த மாதம் எடுத்தாகணும். அதற்குள்ளே எழுதி முடிச்சிடணும்.

சுகுமார் : சரி, ஆகட்டும். நான் வரட்டுமா? (எழுந்திருக்கிறுன்.)

புரட் : இருங்க ஸார். காபி சாப்பிட்டுட்டுப் போகலாம். டிபன் ஏதாவது...(மேஜைமீதிருந்த மணியை அடித்து) டே, பையா!

சுகுமார் : வேண்டாம் ஸார். ரொம்ப தாங்ஸ், நான் வர்றேன்.

*[சுகுமார் வணங்கிவிட்டு வெளியேறுகிருர்.]*

## காட்சி—5

*[எழுத்தாளர் சுகுமாரின் வீடு. சுகுமார் வெளியே செல்வதற்காக ஆடைகளை அணிந்து புறப்பட்டுக் கொண்டிருக்கிருர். இந்தச் சமயத்தில் சுகுமாரின் நண்பன் சங்கர் வந்து சேர்கிருன்.]*

சங்கர் : (உள்ளே வந்தவாறு) என்னப்பா சுகுமார்? சினிமாவுக்குக் கதை வசனம் எழுதப் போனுலும் போனே, உன்னை ஆளையே காண முடியலியே. உனக்கும் 'ஸ்டார் வால்யூ' வந்துட்டுதா என்ன?

சுகுமார் : (மேஜையிலுள்ள காகிதங்களை அடுக்கி எடுத்தவாறே) அந்த வயித்தெரிச்சலை ஏன் கேக்கிறே? ஒரே துக்ளக் ராஜ்யமா இருக்கு. நிமிஷத்துக்கு ஒரு மாற்றம்; நிமிஷத்துக்கு ஒரு எண்ணம்.

சங்கர் : (கிண்டலாக) யாருக்கு? உனக்கா?

சுகுமார் : எனக்கு இருந்தால்தான் நல்லதாப் போச்சே, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்காவது போய்ச் சேரலாம்.

சங்கர் : என்னப்பா சலிச்சிக்கிறே ? (சுகுமார் காகிதக் கட்டை எடுத்துக்கொண்டு புறப்பட முனைவதைக் கண்டு) சரி, இப்போ எங்கே புறப்பட்டே ?

சுகுமார் : கம்பெனிக்குத்தான், வருகிறாயா ?

சங்கர் : அதற்கென்ன ? தாராளமாய் !

சுகுமார் : (வீட்டினுள் திரும்பி) சுந்தரி ! நான் கம்பெனிக்குப் போயிட்டு வர்றேன். கதவைத் தாழ் போட்டுக்கொள். (சங்கரிடம்) என்ன சங்கர், புறப்படலாமா ?

[இருவரும் புறப்பட்டுச் செல்கிறார்கள்.]

## காட்சி—6

(மார்க்கண்டேயா பிலிம்ஸ் கம்பெனி டைரக்டரின் தனியறை. டைரக்டர் தமது ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்; எதிரேயுள்ள ஆசனங்களில் சங்கரும் சுகுமாரும் அமர்ந்துள்ளனர். சுகுமாரின் கையில் சினிமாக் கதை 'பைல்' இருக்கிறது. ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தவர்போல் தோன்றிய டைரக்டர் சுகுமாரின் பக்கம் திரும்புகிறார்.]

டைரக் : மிஸ்டர் சுகுமார் ! இருபதாவது சீனிலே 'ஹீரோ' பேசறுன் பாருங்கோ, அதைக் கொஞ்சம் வாசியுங்கோ.

சுகுமார் : ('பைலை'த் திருப்பி வாசிக்கத் தொடங்குகிறார்.) சகோதரர்களே ! தேசம்தான் நமது ஜீவன் ; தேசம்தான் நமது தெய்வம். அதைக் காப்பாற்ற அதை விடுவிக்க நாம் நம உயிரையும் பணயம் வைக்கவேண்டும். பாரதத் தாயின் கண்ணீரை நமது புனித ரத்தத்தால்தான் கழுவிவிட முடியும் ! —

டைரக் : (குறுக்கிட்டு) கொஞ்சம் நில்லுங்கள் ஸார்.

சங்கர் : (இடைமறித்து) சுகுமார், பிரமாதம் போ. உன் நாவலில் இந்தக் கடைசி ஐடியா இல்லையே.

டைரக் : (சங்கரிடம் வெடுக்கென்று) என்ன ஸார் பிரமாதத்தைக் கண்டு விட்டீர்கள் ?

சுகுமார் : (பிரமிப்புடன்) என்ன சொல்கிறீர்கள் டைரக்டர் ஸார் ?

டைரக் : மிஸ்டர் சுகுமார். நான் சொல்றேன்னு கோவிச்சிண்டிடப்பிடாது. இப்படி இருந்தா எவன் ஸார் இதைக் காதுகொடுத்துக் கேட்பான் ?

சங்கர் : என்ன இப்படிச் சொல்றீங்க ?

டைரக் : பின்னே ? இது அந்தக் காலத்து வசனம் ஸார். இப்போ இப்படியெல்லாம் எழுதினால் எடுபடாது ஸார். இப்போல்லாம் வசனமே பாட்டு மாதிரி இருக்கணும்.

சுகுமார் : என்னது ? வசனம் பாட்டுமாதிரி இருக்கணுமா ? விசித்திரமாயிருக்கே !

டைரக் : ஆமாம், சுகுமார். எங்கே, அதைத் திரும்ப வாசியுங்கள்.

சுகுமார் : (வாசிக்கிறார்) தேசம்தான் நம் ஜீவன் ; தேசம் தான் நம தெய்வம். அதைக் காப்பாற்ற, அதை விடுவிக்க நாம் நம் உயிரையும்—

டைரக் : (குறுக்கிட்டு) பார்த்திங்களா ? இப்படி எழுதப்படாது. நான் சொல்கிறேன், பாருங்கள். 'தேசமே நம் ஆவி ! தேசமே நம் தேவி ! தேசத்துக்காகத்

தியாகம் செய்யாதவன் மகாபாவி!'...சரி. அப்புறம் மேலே படியுங்கள்.

சுகுமார்: (வாசிக்கிறார்) பாரதத் தாயின் கண்ணீரை நமது புனித ரத்தத்தால்தான்—

டைரக்: (குறுக்கிட்டு) போதும். அதை இப்படி எழுதுங்கள். 'தாயின் கண்ணீரைச் சேயின் செந்நீர் தான்...'

சுகுமார்: (குறுக்கிட்டு) இதுதான் பாட்டு மாதிரி எழுதுகிறதோ? அநாவசியமான பிராசம் எதுக்கு ஸார்?

டைரக்: பிராசமா? இதுதான் ஸார் இப்போ சினிமா வசனத்துக்கே சுவாசம்! மிஸ்டர் சுகுமார். சொல்வதில் அர்த்தமிருக்கா, பாவம் இருக்காங்கிறது இங்கே முக்கியமில்லே. காக்கா கத்தறமாதிரி 'கா' ன்னு ஆரம்பிச்சா ரயில் வண்டி மாதிரி, கா கா கான்னே வசனம் வந்து குவியணும் ஸார். தெரிஞ்சிதா?

சுகுமார்: (கோபத்துடன்) எனக்கு அந்த மாதிரியெல்லாம் எழுத வராது!

டைரக்: கோவிச்சுக்காதிங்க ஸார். படம் 'ஸக்ஸஸ்' ஆகணுமின்னு நீங்க நாங்க சொல்றபடி எழுதத்தானே வேண்டும்?

சங்கர்: (இடைமறித்து) என்ன டைரக்டர் ஸார். நீங்க ஆரம்பததிலே என்னிடம் சொன்ன மாதிரி சுகுமாரிடமும்—

டைரக்: அதுக்கென்ன ஸார். திரும்ப எழுதித்தரட்டும். 'ரிவைஸ்டு ட்ரீட்மெண்ட்'டுக்குன்னு புரட்யூஸரிடம் ஒரு ஆயிரம் ரூபாய் வாங்கித் தர்ரேன்.

சுகுமார்: டைரக்டர் ஸார்—

டைரக் : மிஸ்டர் சுகுமார். யோசிக்கவே வேண்டாம். நான் சொல்கிறபடி செய்யுங்கள். உங்களுக்கும் பேரு ; எங்களுக்கும் பேரு !

(இந்தச் சமயத்தில் கையிலுள்ள பிளாஸ்டிக் பையை ஒய்யாரமாகச் சுழற்றியவாறு, ஒயிலாக நடந்து வருகிறார் குமாரி தில்ரூபா. எல்லோருடைய பார்வையும் அவள் பக்கம் திரும்புகிறது.)

தில்ரூபா : (வணக்கம் தெரிவித்துக் கொண்டே அங்குள்ள சோபாவில் தொப்பென்று விழுந்து சாய்கிறாள்) குட் ஈவினிங், டைரக்டர் ஸார்.

டைரக் : குட் ஈவினிங், ரூபா. (சுகுமாரிடம் திரும்பி) சுகுமார், இவாதான் நம்ம ஹீரோயின். பிரபல வட நாட்டு நக்ஷத்திரம் குமாரி தில்ரூபா.

சுகுமார் : (டைரக்டரிடம் மெல்லிய குரலில்) வடநாட்டு நக்ஷத்திரமா ? இவளுக்குத் தமிழ் தெரியுமா ?

டைரக் : அவசியம்? குமாரி தில்ரூபா 'ஆல் இண்டியா ஸ்டார்' ! மேலும் நம்ம புரட்யூஸரோடே...'ஓ! ஐ ஆம் ஸாரி!'... (தில்ரூபாவிடம் திரும்பி) மிஸ் ரூபா இவர்தான் நம்ம 'பிளே ரைட்' மிஸ்டர் சுகுமார்.

தில் : (சுகுமாரை நோக்கி) நமஸ்தே ஜீ

சுகுமார் : நமஸ்காரம். உங்களுக்குத் தமிழ் பேசத் தெரியுமா ?

தில் : (கண்களை ஏறச் சொருகி, அநாயாசமாக) ஓ! டமில் !—மத்ராஸி பாஷா!—தோடா தோடா எனக்கு மாலும்!

சுகுமார் : (டைரக்டரிடம்) இந்த அம்மாளைக்கொண்டா?

தில் : (கைக் கடிகாரத்தை அவசரமாகத் திருப்பிப் பார்த்துவிட்டு) டைரக்டர் ஸார், புரட்யூஸர் ஸார் வரலே?

டைரக் : இன்னும் வரலே.

தில் : (இடத்தை விட்டு எழுந்தவாறே) வந்தாச் சொல் லுங்கோ, (நமஸ்காரம் செய்து) பிர் மிலேங்கே! (சுகுமாரிடம்) நமஸ்தே டைரக்டர் ஸார்!

(வந்தது போலவே ஒயிலாக நடந்து வெளியே செல் கிருள் தில்ருபா.)

சுகுமார் : டைரக்டர் ஸார் இந்த அம்மா எப்படி இந்த வசனத்தை யெல்லாம் பேசமுடியும்?

டைரக் : பேசியாகணுமே ஸார்! இந்த ஸ்டார் நம்ம புரட்யூஸரோடே பேவரிட் ஸார், பேவரிட். இவளை எப்படியாவது ஒரு படத்திலே வளைச்சுப் போட்டுப் பாத்துடணுங்கிறது நம்ம புரட்யூஸரோட ஆசை.

சுகுமார் : அதற்காக? இங்கு நம் நாட்டு நடிகை, நடிகர் கள் இல்லையா? பாஷை தெரியாமல் பேச முடி யுமா?

டைரக் : அதற்குத்தான் அவள் இப்போ 'ஹிந்தி ஸ்கிரிப்ட்'டிலே தமிழ் கற்று வருகிருளே. சீக் கிரம் 'பிக் அப்' பண்ணிண்டுடுவா. இவளுக்கு 'நைட்டிங்கேல்' என்றே பட்டப் பெயர். இவள் பாடி நீங்க கேட்டதில்லையே!

சுகுமார் : (எரிச்சலுடன்) பேசிக் கேட்டாச்சு. இனிமேப் பாடிக் கேக்கிறது ஒண்ணுதான் பாக்கி.

டைரக் : நாளைக்குக் காலையிலே இவ பாட்டு ஒண்ணு 'ரெக்கார்ட்' ஆகுது. நீங்க அவசியம் வரணும்.

**சுகுமார் :** ஆகட்டும் வருகிறேன். (சங்கரிடம் திரும்பி) என்ன சங்கர், புறப்படலாமா ?

**சங்கர் :** ......ம். புறப்படு.

**டைரக் :** (டிராயரைத் திறந்து செக் ஒன்றை எடுத்து நீட்டியவாறே) இருங்க ஸார். இதோ ஒரு ஆயிரத்துக்கு 'செக்' வைத்துக்கொள்ளுங்கள். நீங்க எப்படி எப்படி நாங்க சொல்கிறபடி நடக்கிறேளோ, அப்படியப்படி ... ஹிஹ்ஹி... தெரிஞ்சிதா ?

**சுகுமார் :** (செக்கை வாங்கிக்கொண்டு) நான் வருகிறேன் ஸார்.

**டைரக் :—** ஆல் ரைட் !

[சுகுமாரும் சங்கரும் வெளியேறுகிறார்கள்.]

## காட்சி—7

[சினிமா ஸ்டூடியோவில் பாடல்கள் பதிவு செய்யும் ஹால். சுற்றுச் சூழப் பின்னணி வாத்திய சங்கீதக்காரர்கள் வட்டமிட்டு அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒட்டகச் சிவிங்கி மாதிரி முகத்துக்கு முன்னால் தலையை நீட்டிக் கொண்டிருக்கும் 'மைக்'கின் முன்னர் குமாரி தில்ருபா நின்றுகொண்டிருக்கிறாள். பின்னணி சங்கீதக்காரர்கள் தங்கள் கருவிகளை ஏகோபித்து முடுக்கி விடுகிறார்கள். சங்கீத டைரக்டர் அவர்களுக்கு முன்னால் நின்றுகொண்டு கைக்கரணங்கள் காட்டிக்கொண்டிருக்கிறார். சுவரை ஒட்டிப் போடப்பட்டுள்ள சோபா வரிசையில் புரட்யூஸரும் டைரக்டரும் அமர்ந்திருக்கிறார்கள். ஒரு 'ஆவர்த்தம்' முடிந்து, வாத்திய சங்கீதம் மௌனமாகிறது. இந்தச் சமயத்தில் சுகுமார் உள்ளே வருகிறார்.)

டைரக் : (சுகுமாரை நோக்கி) நல்ல சமயத்தில் வந்தேள். ரெக்கார்டிங் ஆரம்பமாகப் போகிறது.

சுகுமார் : (ஆசனத்தில் அமர்ந்தவாறே) கர்நாடக சங்கீதம்தானே.

டைரக் : (அழுத்தலாக) வெயிட், அண்ட் ஸீ !

*[சங்கீத டைரக்டர் தமது கையிலுள்ள விசிலை உரத்து ஊதுகிறார் ; அதற்கு எதிரொலியாக, 'ரிக்கார்டிஸ்ட்'டிடமிருந்து பதில் விசில் சப்தம் கேட்கிறது. எங்கும் மவுனம் நிலவுகிறது.]*

சங்கீத டைரக் : (உரத்த குரலில்) ரெடி...எஸ், ரெடி !—ஸைலன்ஸ் !—மனமோகினி—ஸாங் நம்பர் எயிட்—டேக் நம்பர் ஒன்—ரெடி—ஒன்—டு !—

*[பின்னணி வாத்தியங்கள் ஒரு இங்கிலீஷ் நோட்டை ஏகோபித்து அலறத் தொடங்குகின்றன. சங்கீத டைரக்டரின் சைகையைப் புரிந்துகொண்டு, குமாரி தில்ரூபா, பாடத் தொடங்குகிறாள்.]*

தில்ரூபா : (பாடுகிறாள்)

லல்லால லால லல்ல
லல்லால லால லல்ல
லல்லால லால லல்ல
லா லா லா

*[பின்னணி சங்கீதம் அவள் பாடிய சந்தத்தை மீண்டும் வாசித்து ஓய்கிறது.]*

(மீண்டும் பாடுகிறாள்)

தேச மேல்
வைத்தார் நேசமே
எந்தன் பாசமே
செய்தார் மோசமே
தேசமேல்—அவர் தேசமேல...

லல்லால லால லல்ல
லல்லால லால லல்ல...

சுகுமார் : (பாடிக்கொண்டிருக்கும்போதே இடைமறித்து) இது என்ன ஸார், இது? பாட்டா இது?

சங். டைரக் : (இடைமறித்த குரலைக்கேட்டு) கட்-கட்!

[வாத்திய சங்கீதம், தில்ரூபாவின் பாட்டு எல்லாம் ஸ்தம்பித்து நிற்கின்றன.]

டைரக் : என்ன சுகுமார்? தில்ரூபா நல்லாப் பாடிவர்ற சமயத்திலே இப்படிக் கெடுத்துட்டேளே!

சுகுமார் : (எரிச்சலுடன்) பின்னே—பாட்டா இது?

டைரக் : இந்தப் 'பாட்டினுல்தான் நம்ம படத்துக்கே 'மாஸ் அப்பீல்' கிட்டப் போறது, ஸார்!

சுகுமார் : 'மாஸ் அப்பீ'லாவது? மண்ணுவது? அதற்காக எதை வேண்டுமானுலும் பாடலாமோ?

டைரக் : இதனுல் என்ன குடிமுழுகி விடப்போகிறது?

சுகுமார் : என் கதையே தொலைந்து போய்விடும் ஸார். பாரத நாட்டின் பண்பாட்டின் பெருமையை, நான் என் கதைமூலம் உணர்த்த விரும்பினேன். நமது நாட்டுக் கதையில் நமது நாட்டுச் சங்கீதம் இருந்தாலல்லவா சோபிக்கும்! இந்தமாதிரி 'இங்கிலீஷ் நோட்'டிலே கதறித் தொலைச்சால்?

புரட் : மிஸ்டர் சுகுமார். தயவு செய்து நீங்க இந்தப் பாட்டு விஷயத்திலே தலையிட வேண்டாம். உங்களுக்கு 'மாஸ் சைக்காலஜி'யே தெரியலை. நீங்க கலை, கலாசாரம், அது, இதுன்னு ஆயிரத்தைச் சொல்வீங்க. ஆனுல், லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைக் கொட்டிட்டு, போட்ட பணம் திரும்பணு

மேன்னு இருக்கிற எங்களுக்குத் தெரியும் அந்தச் சங்கடம் !

சுகுமார் : இதுதான் நீங்கள் கலைக்குச் செய்யும் சேவையோ ?

புரட் : முதல்லே 'பிஸினஸ்'; அப்புறம்தான் ஸார் கலை, கருமாதி எல்லாம் !

டைரக் : (குறுக்கிட்டு) மிஸ்டர் சுகுமார், 'டோண்ட் ஒரி,' இப்போ புரட்யூஸர் ஸார் சொல்லலே, அதை மட்டும் மறந்துடாதீங்க. முதல்லே 'பிஸினஸ்'; பிஸினஸ் வெற்றியடைஞ்சா, கலையும் தானு வெற்றியடையறது.

சுகுமார் : (கோபத்தோடு எழுந்தவாறே) ஸார் என்றால் இங்கு அரைக்ஷணம்கூட இருக்க முடியாது, நான் வருகிறேன்.

[சுகுமார் விசுக்கென்று வெளிச் செல்கிறார்]

புரட் : என்ன டைரக்டர் ஸார். நம்ம ரைட்டர்வாள் போற போக்கைப் பார்த்திங்களா ?

டைரக் : (மெல்லச் சிரித்து) தொழிலுக்குப் புதுசில்லெ, கொஞ்சம் திமிறத்தான் செய்யும். எல்லாம் வர வரச் சரிப்பட்டுப் போகும்.

புரட் : (தில்ரூபாவிடம்) ரூபா ! இன்று உன் பாட்டு அற்புதம், அந்தப் பித்துக்குளி கத்தித் தொலைக்கலேன்னு, அப்படியே 'கண்டினியூ' பண்ணியிருக்கலாம். சரி, அடுத்த 'பிட்'டையும் இப்போதே பாடறியா ? இல்லே—

**தில்ருபா :** (கோணப் புன்னகை புரிந்து குழைந்து கொண்டே) அபி நஹிங்!—கல் கா ஹுங்கி!—நாளைக் குப் பாட்றேன் !

**புரட் :** ஓ...கே...! உன் இஷ்டம்.

[புரட்யூஸரும் டைரக்டரும் தில்ருபாவும் ரிக்கார்டிங் ஹாலை விட்டுக் கிளம்புகிறார்கள்.]

## காட்சி—8

*[சுகுமார் வீடு. சுகுமார் தமது மேஜைக்கு எதிரே யிருந்து எதையோ படித்துக்கொண்டிருக்கிறார். பக்கத்து நாற்காலியில் சுந்தரி அமர்ந்திருக்கிறாள். வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது.]*

**சுகுமார் :** (சுந்தரியிடம்) சுந்தரி, யாரென்று பார்த்து விட்டு வா.

**சுந்தரி :** (எழுந்து சென்று எட்டிப் பார்த்துவிட்டு வந்து) சினிமா டைரக்டர்தான் வந்திருக்கிறார். (என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்று மறை கிறாள்.)

**டைரக் :** (உள்ளே வந்தவாறே)என்ன மிஸ்டர் சுகுமார்! அன்னிக்கி என்ன அப்படிக் கோவிச்சுண்டு வந் திட்டீங்க. இன்னுமா உங்க கோபம் மாறலே ?

**சுகுமார் :** (விரக்தியுடன்) கோபமாவது, தாபமாவது ? உரலுக்குள்ளே தலையைக் குடுத்தாச்சி; இனி உலக்கைக்குப் பயந்தா முடியுமா ? தலை பிழைத் தால் போதும்.

**டைரக் :** (உற்சாகத்துடன்) பரவாயில்லே. இப்பவேனும் உண்மையத் தெரிஞ்சுண்டேளே. 'லோகோ பின்ன ருசி'. நாம் எல்லாத்தையும் 'அட்ஜெஸ்ட்' பண்ணித்

தானே போகணும்......சரி, கம்பெனிக்கு ஏன் வரலே? வாருங்கோ. கொஞ்சம் வேலே இருக்கு.

சுகுமார்: இன்னும் என்ன ஸார் வேலே? என் ஜோலி தான் அநேகமா முடிஞ்சிட்டுதே.

டைரக்: வருத்தப்படாதீங்க, ஸார். இதோ இதைப் பாருங்க. (தமது 'ஜிப்'பிலிருந்து ஒரு 'செக்'கை எடுத்து நீட்டியவாறே) நம்ம புரட்யூஸர் உங்க பேருக்கு இன்னொரு செக் அனுப்பியிருக்கார். உங்க ளிடம் பேசினது என்னமோ அஞ்சுதான். இப்போ அவரா மனசுவச்சீ, அதைப் பத்தாகவே கணக்குப் பண்ணிட்டார்.

சுகுமார்: (கையில் செக்கை வாங்கியவாறு) பணத் தைக் கொடுத்துக் கொடுத்து என்னே எவ்வளவு தான் விலேக்கு வாங்க முடியும்?

டைரக்: விலேக்கு வாங்கிறதாவது? - சேச்சே! நீங்க நினேப்பது தவறு. உங்க வேலேயை மெச்சி, புரட் யூஸர் மனமுவந்து கொடுக்கிற சன்மானமே தவிர......சரி, புறப்படுங்கள். (சுகுமார் தயங்கி நிற்பதைக் கண்டு) என்ன யோசனே ஸார்? ம், புறப்படுங்கள்.

சுந்தரி: (உள்ளேயிருந்து தலேயை மெல்ல நீட்டிய வாறு) அவாளும்தான் நயமாக் கூப்பிடறுங்களே. கொஞ்சம் போயிட்டுத்தான் வாருங்களேன்.

சுகுமார்: (உள்ளே திரும்பி) நீ வேறே சிபாரிசா? (பெருமூச்செறிந்து) சரி, கிளம்புங்கள் ஸார்.

[மகிழ்ச்சி ததும்பும் முகத்தோடு டைரக்டர் முன்னே செல்ல, சுகுமார் பின் தொடர்கிறுர்.]

## காட்சி—9

[மார்க்கண்டேயா பிலிம்ஸ் காரியாலயம். புரட்யூஸர் தனியறை. புரட்யூஸர் தமது ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். டைரக்டரும் சுகுமாரும் பிரவேசிக்கிறார்கள்.]

**புரட்யூஸர் :** நமஸ்காரம், வரவேணும் சுகுமார்.

**சுகுமார் :** நமஸ்காரம்.

**டைரக் :** (அங்குள்ள சோபாவில் விழுந்து புதைந்து கொண்டே) ஆசாமியைத் தள்ளிண்டு வர்றதே பெரும்பாடாப் போச்சு.

**புரட் :** அதெல்லாம்...ஹிஹ்ஹி...சுகுமார் கொஞ்சம் 'ஸெண்டிமெண்டல்.' நிற்கிறீர்களே, உட்காருங்கள் சுகுமார்.

**சுகுமார் :** (உட்கார்ந்துகொண்டே) ஏதோ வேலை யிருக்குன்னு சொன்னீங்களாமே, என்ன வேலை?

**புரட் :** ஒன்றுமில்லை, நம்ம படம் ஆரம்பிச்சுக் கிட்டத் தட்ட ஒரு வருஷம் ஆகியும் இப்பத்தான் முடியுற தருவாயிலே இருக்கு. அடுத்த மாதம் சென்சாருக்குப் போகணும்.

**சுகுமார் :** சரி, போகட்டும். அதனாலென்ன?

**புரட் :** ஒன்றுமில்லை. இருந்தாலும் நம்ம நாட்டு வழக்கத்திலே ஒரு கதை அமங்கலமா முடியலாமா? ஆகையினாலே, முடிவைக் கொஞ்சம் மாத்தி எழுதினால்—

**சுகுமார் :** (திடுக்கிட்டு) என்னது? முடிவை மாத்தணுமா?

**புரட் :** மாத்தறது இல்லை ஸார். ஒரே ஒரு 'ஸ்லைட் சேஞ்ச்!' கடைசியிலே கதாநாயகன் இறந்து

போறதா இருக்கு பாருங்கோ, அதை எடுத்துப் புட்டு, கதாநாயகன் கதாநாயகியை மணந்துகொள் வதாகக் காட்டிவிட்டால்?......

சுகுமார்: அதெப்படி ஸார் முடியும்? என் கதையின் ஜீவநாடியே அதுதானே ஸார். தேசத்துக்காக உயிரை விடுவதுதானே கதைக்கே சிகரம். தேசம் தானே அவனது மனமோகினி!

டைரக்: வீணு, ஒரு வாலிபனை ஏன் ஸார் சாகடிக்க ணும்? கதாபாத்திரங்களை நீங்க ஈவிரக்கமில்லாம, கொன்னு தள்ளிப்பிடறீங்க. அதைவிட, அவா ளைச் சாவிலேயிருந்து காப்பாத்தறது பெரி சில்லையா?

புரட்: ஆமாம் ஸார், காதாநாயகனைச் சாகடிக்க வேண் டாம். அவன் தேசத்துக்காகவே பாடுபடட்டும். கடைசியில் தேசம் விடுதலை யடைகிறது. தேசம் விடுதலையடைந்த பின்னர் அவன் கதாநாயகியை மணந்து கொள்கிருன். அப்படின்னு மாத்தி எழுதி ருைப் போச்சு, நீங்க கையாண்டுள்ள 'தீம்'முக்கும் ஒரு 'பாஸிட்டிவ் வே அவுட்' ஏற்பட்டாப் போலே இருக்கும்.

சுகுமார்: அப்படிச் செய்தால் கதையிலே உயிரே இராது ஸார்.

புரட்: உயிர் இருக்கும்படியா நாங்க பாத்துக்கறோம் சுகுமார்.

சுகுமார்: (கசப்புடன்) சரி ஸார். இவ்வளவுதானு? இன்னும் இருக்கா?

டைரக்: இதை மட்டும் செய்து கொடுத்துட்டாப் போதும். பார்த்திங்களா? இதிலே இன்னொரு

விஷயம். உங்க மனமோகினி நாவலைப் படிச்ச வங்க, கதை சோக முடிவாயிருக்கும்னு தான் எதிர் பார்ப்பாங்க, ஆனா, கதையைத் தெரிந்தவங் களுக்கே, இந்தக் 'கிளைமாக்ஸ்' ஒரு 'கிரேட் ஸர்ப் ரைஸ் !' இல்லையா ?

**சுகுமார் :** 'சர்ப்ரைஸ்' அவர்களுக்கில்லை. எனக்குத் தான் ! (இடத்தை விட்டு எழுந்தவாறு) சரி. நான் வருகிறேன். நாளைப் பார்க்கலாம்.

*[சுகுமார் வெளிச் செல்கிறார்.]*

## காட்சி—10

*[சுகுமாரின் வீடு, சுகுமாரின் அறையில் சுகுமாரும் சுந்தரியும் இருந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]*

**சுந்தரி :** உங்களைத்தானே, 'ஸிட்டி டாக்கீஸில்' மன மோகினி ஆரம்ப விழாவாச்சே, போய்வரலாமா ?

**சுகுமார் :** (கசந்த சிரிப்புடன்) என் மனமோகினிதான் இதோ நீ இருக்கிறாயே, அங்கே போய் அந்தக் கண்றாவியை வேறே பார்க்கணுமா ?

**சுந்தரி :** நல்லா இருக்கு, உங்க படத்தைப்பத்தி நீங் களே இப்படி மெச்சிக்கிட்டா...? யாரும் கேட்டா, சிரிககப் போறாங்க.

**சுகுமார் :** உனக்கென்ன தெரியும் ? ஊரே சிரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒண்ணுமில்லை.

*[இந்தச் சந்தர்ப்பத்தில் சங்கர் பிரவேசிக்கிறான். சுந்தரி எழுந்து வீட்டினுள் செல்கிறாள்.]*

**சங்கர் :** (உள்ளே வந்தவாறே) என்ன சுகுமார், மணி நாலரையாகிறது. இன்னும் சும்மா அசட்டாட்டம் உட்கார்ந்திருக்கயே, வரலலெ ?

சுகுமார் : எங்கே சங்கர் ?

சங்கர் : எங்கேயா ? நல்லாக் கேட்டே போ. மனமோகினி ஆரம்ப விழாவுக்குத்தான், ரிஸெப்ஷனுக்கு எனக்குக்கூட இன்விடேஷன் வந்திருக்கு. நீ என்னை அங்கிருந்து வரவேற்கிறத்துப் பதிலாக, இங்கே உட்கார்ந்திருக்கயே !

சுகுமார் : போடா, போ ! உன் பேச்சைக் கேட்டுத் தான் நான் இந்தக் கதிக்கு ஆளானேன்.

சங்கர் : உன் கதிக்கு என்னப்பா ? கவலையில்லாம காலம் தள்ளுறது கஷ்டமாயிருக்கோ ? முன்னே மாதிரி 'லோல்' பட்டாத்தான் உனக்குச் சரிப்படும் போலிருக்கு !

சுகுமார் : சங்கர் ! என் 'மனமோகினி'யை விற்றுவிட்டேனடா !

சங்கர் : சும்மாவா ? மனமோகினியை விற்றுவிட்டு, பண மோகினியை வாங்கிக்கொண்டாய் !

சுகுமார் : ஆமாம். என் மனமோகினி இன்று அங்கு ஆடமாட்டாள் ! அவள் வேறு ஒரு மோகினி !

சங்கர் : என்னப்பா உளறுகிறாய் ?

சுகுமார் : (ஆவேசத்தோடு) சங்கர் ! என் மனத்தை விட்டே அவள் மறைந்து விட்டாளடா ! அதற்குப் பதிலாக இந்தப் பணமோகினி என்னைத் தனக்கு இரையாக்கி விட்டாள். இந்த மோகினி என் மானத்தை, மரியாதையை, லட்சியத்தை, ஆன்மாவையே குடித்துவிட்டாளடா, குடித்து விட்டாள் !

—: திரை :—

1951

# பெரிய இடத்துச் சம்பந்தம்

**பாத்திரங்கள் :**

| | |
|---|---|
| நம்பியா பிள்ளை | பெண்ணுக்கு வரன் தேடுபவர். |
| அம்மையப்பன் | ஷெயார் மைத்துனன்; "காரியதரிசி" |
| சொர்ணத்தம்மாள் | பிள்ளையவர்கள் சம்சாரம் |
| சபாபதி | 'மாப்பிள்ளை' |
| தேவானை | சபாபதியின் தாய். |
| மாயாண்டி | உள்ளூர் வாசி |

## காட்சி—1

*[நம்பியா பிள்ளையவர்கள் வீடு. வீட்டின் வெளி முற்றத்திலுள்ள கல் திண்ணை மீது அமர்ந்து நம்பியா பிள்ளை பழைய 'திருவிழாக் கடைப் புத்தகம்' ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கிறார். பௌராணிகக் காலட்சேப பந்தாவில் ஆரோகண அவரோகண ஆலாபனைகளோடு, வாய் விட்டுப் படித்துத் தலையை ஆட்டித் தமக்குள் தாமே ரசித்துக் கொண்டிருக்கிறார்.]*

நம்பியா பிள்ளை : (புத்தகத்தைப் படிக்கிறார்)......இப்படியாகத் தானே, அரிச்சந்திர மகாராசாவைப் பார்த்து, அந்தப் பிராம்மணர்கள், 'ஓ! மகாராசனே! கேளும். நாங்கள் அநேக சிவஸ்தலங்கள் தோறும் சஞ்சாரம் செய்து, கங்கையிலே மூழ்கி, மான் மழு சூல கபாலம் ஏந்திய மகாதேவராகிய மகேச்வரனுடைய ஆலயங்கள்தோறும் வணங்கி, அப்பால் கன்னோசி நாட்டில் கண்டகி தீர்த்தமாடி உம்முடைய பெருமையையும் கீர்த்தியையும் பிரபல்யத்தையும் அயோத்தியா புரியின் அலங்காரத்தையும் கேள்விப்பட்டு இங்கு வந்தோம். இன்னும் சொல்லுகிறோம். கவனமாய்க் கேளும்......

*[இந்தச் சந்தர்ப்பத்தில் பிள்ளையவர்களின் மனைவி சொர்ணத்தம்மாள் பொடு பொடுவென்று வருகிறாள். அவள் வருவதைக் கண்டவுடன் பிள்ளையின் படிப்புத் தடைப்படுகிறது.]*

நம்பி : மேலே படிக்காமல், கடைசியாக வாசித்த வரியையே மாறி மாறி ஆலாபனை செய்கிறார்) கேளும் ...சற்றே கவனமாய்க் கேளும்......

சொர்ணத்தம்மாள் : (வந்ததும் வராததுமாய் இடைமறித்து) என்னத்தைக் கேக்கது? காலம் காத்தாலே எந்திரிச்சி உக்காந்துக் கிட்டு, கதையா படிக்கிய? இருந்திருந்து எனக்குன்னு வந்து வாச்சியளே. வந்ததும் அப்படி. வாச்சதும் அப்படின்னு!

நம்பி : (கண்ணில் மாட்டியிருந்த மூக்குக் கண்ணாடியை நெற்றிக் கேற்றிய வராய்) ஏளா, என்ன? பூசை வேளையிலே வந்து கரடி விடுதே? ஏதோ காலையிலே புண்ணிய கதை படிச்சா—? அதுக்குள்ளே காலகண்டையன் மாதிரி வந்து நின்று என் கழுத்தை அறுக்கிறியே!

சோர் : ஆமா, சத்தியத்திலே அரிச்சந்திரன் ? உங்களுக்கு இதெல்லாம் ? வீடுவாசல் பெண்டாட்டி புள்ளேன்னு கரிசனை இருக்கா ?

நம்பி : பெண்டாட்டிக்கும் புள்ளைக்கும் இப்ப என்னவா வந்துது ? கொள்ளையா ? நோக்காடா ?

சோர் : அப்படி வந்தாத்தான் அலுப்பு விட்டுதே !...... தெருவிலே நடமாட நாதியில்லே. சமைஞ்ச குமரியை இப்படி எத்தனை நாளுதான் வச்சிருக்கது ? நம்ம செல்லத்துக்கு எங்'னெக் கூடியா வது ஒரு இடத்தைப் பார்த்து......

நம்பி : (இடைமறித்து) நீயும் பாத்துக் கிட்டுத்தானே இருக்கே ? ஒரு இடமா, ரெண்டு இடமா ? ஏதாவது வாச்கா வழியா அமைஞ்சால்'லெ ? தெருவிலே போற பிச்சைக்காரப் பயலுக்குக் கட்டிக் கொடுக்கணும்கிறியா ? நம்ப குடும்பம் இருந்த தகுதி என்ன ? நாம் போயி—

சோர் : ஆமா, பசிச்சவன் பழங்கணக்கைப் பாக்கிற மாதிரி, பழசையெல்லாம் நினைச்சிக் கிட்டிருந்தா முடியுமா ? ஏதோ நம்ம தகுதிக்கு ஏத்ததா ஒரு இடம் கிடைக்காமலா போகுது ? உங்களுக்கு ஆசைமட்டும் பெரிசாயிருக்கு, அதிட்டம் வேண்டாமா ?

நம்பி : அதிருஷ்டம் இல்லாமலென்ன ? எல்லாம் அம்மையப்பன் வந்தாத் தெரியும் !

சோர் : (சலிப்புடன்) அம்மையப்பன், அம்மையப்பன்! உங்களுக்குன்னு வந்து வாச்சானே அருமையுள்ள மச்சினன் !

நம்பி : அவனுக்கென்னடி ? இந்தக் காலத்திலே அவனைப் போல வாயடி அடிக்கிறவனுக்குத் தாம்'ளா காலம் !

மச்சா : ஆமாமா ! நீங்க பட்டணத்தை விலே பேசினு, அவன் எம பட்டணத்தையே வித்து முதலாக் கிட்டு வந்திடுவான். (சலிப்புடன்) எப்படியும் போங்க. பொண்ணை அஞ்சாறு வருசமா வீட்டிலே வச்சிருக்கதைவிட, எங்கேயாவது ஆத்திலே குளத்திலே தள்ளிரலாம்.

[வருத்தமும் சிணுங்கலும் நிறைந்த குரலோடும் முகத்தோடும் கண்களைத் துடைத்துக்கொண்டே வீட்டினுள் செல்கிருள், அவள் சென்ற மறு கணமே வெளியே கூப்பிடு குரல் கேட்கிறது.]

குரல் : (வெளியிலிருந்து) அத்தான் ! அத்தானேவ் !

நம்பி : யாரு ?......அம்மையப்பனு ?...வாப்பா வா.

[அம்மையப்பன் வருகிருன்.]

என்ன ? போன காரியம் காயா, பழமா ?

அம்மையப்பன் : (திண்ணைமீது வந்தமர்ந்துகொண்டே) என்ன அத்தான் ? அம்மையப்பன் போனு, ஆகாத சோலி இருக்கா ? காயாத பழமின்னுலும் அடிச்சிப் பிடிச்சிக் கனிய வச்சிரமாட்டேனு ? காரியம் நல்ல உதைப்பழம் ! நாளைக் காலையிலே தானு கனியப் போவுது பாருங்களேன்.

நம்பி : சரி சரி, விசயத்தைச் சொல்லு. ஒத்துக்கிட்டாகளா என்னு ?

அம்மை : கேளுங்க இங்கே யிருந்து நான் நேரா அம்பா சமுத்திரம் போனேனு ?

நம்பி : அட, நீ போனது வந்தது எல்லாம்தான் தெரியுதே, அவுஹ ஒத்துக்கிட்டாகளா என்ன ?

அம்மை : சும்மா மாணுங்காணியா ஒத்துக்கிடுவாகளா? ஏ, அப்பா ! அந்த அம்மா—அவதான் அந்தத்

தேவானை இருக்காளே—அவ நம்மையெல்லாம் ஏப்பம் விட்டிடுவா போலிருக்கு. பையனுக்குப் பெரிய இடமாப் பாத்துத்தான் சம்பந்தம் பண்ணப்போருளாம்!

நம்பி : அப்ப?—நம்ம வீடு?

அம்மை : அதைப்பத்தி என்ன கவலே அத்தான்? ஆடிக் கறக்கிற மாட்டை ஆடித்தான் கறக்கணும்; பாடிக் கறக்கிற மாட்டைப் பாடித்தான் கறக்கணும், ஆடுறதுக்கும் பாடுறதுக்கும் எல்லாம் 'ப்ளான்' போட்டே வேலே செஞ்சிட்டேன்!

நம்பி : (வியப்புடன்) அப்படி என்ன பண்ணினே?

அம்மை : (கைவரிசைகள் காட்டி) 'நம்பியா பிள்ளையைப் பத்தி உங்களுக்குத் தெரியாது போலிருக்கு. அவுஹ பேரைச் சொன்ளு, ஊரெல்லாம் கையெடுக்குமே. உங்க மனசுக்கேத்த பெரிய இடம் அது தான், எல்லாம் ஒரு தடவை நேரிலே போயி, பொண்ணையும் அவுஹ இருக்கிற அந்தஸ்தையும் கண்ணுலே பார்த்தாத் தெரியும். அதெல்லாம் நான் சொல்லக்கூடாது. சர்க்கஸ்ரன்னு சொன்ளு வாய் இனிக்குமா?' அப்படி இப்படின்னு அளந்துவிட்டேன் பார்க்கணும்!...

நம்பி : ம்! அப்புறம்?

அம்மை : அப்புறமென்ன? நிஹறா தெரிஞ்சி குழை அடிச்சா, எந்தப் பேய்தான் தலே சுத்தி ஆடாது? அந்தத் தேவானே அப்படியே அசந்து போய்ட்டா. நாளைக்கு அவ, அந்த மாப்பிள்ளேப் பையனேயும் கூட்டிக்கிட்டு இங்கே வாரதாகச் சொல்லி அனுப்பிஞ, போதுமா?

நம்பி : (உற்சாகத்துடன் வீட்டினுள் கழுத்தைத் திருப்பி) ஏளா, ஏ சொர்ணம்! இங்கே வா'ளா. இத்தனை நேரமும் என்னமில்லாமே சொல்லி அழுதியே, வா. வந்து அம்மையப்பன் சொல்றதைக் கேளு.

[சொர்ணத்தம்மாள் உள்ளே யிருந்து வந்து சேர்கிருள்.]

சொர் : எல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். அவுஹ வாய்க்கு ஆயிரத்தைச் சொல்லிப்பிட்டு வந்திருப்பாஹ, விடிஞ்சாத் தெரியுது வெளிச்சம்!

அம்மை : என்ன அக்கா, அப்படிச் சொல்லுதே? இந்த அம்மையப்பனை என்னுன்னு நினைச்சே? விடியறதுக்குள்ளேயே வெளிச்சம் போட்டுப்பிட மாட்டேனு?

நம்பி : ஆமா'ளா சொர்ணம். அம்மையப்பன் சொல்றதுதான் சரி. ஆயிரம் பொய்யைச் சொல்லித் தான் ஒரு கலியாணத்தை முடிக்கணும்.

சொர் : இதுக்குத்தான் அரிச்சந்திரன் கதை படிச்சியளா?

நம்பி : அரிச்சந்திரன் மார்திரி இருந்தா, பொண்டாட்டி புள்ளையை வித்துப்பிட்டு, பொணத்தைத்தான் காக்கணும். ஒம் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ண முடியாது.

சொர் : (பெருமூச்சுடன்) என்னமும் செய்யுங்க, அந்தப் பொண்ணு கரையேறிஞச் சரி......அடுப்பு காயுது நான் போறேன்.

[உள்ளே போகிருள்.]

நம்பி : (மனைவி சென்றதும் அம்மையப்பனிடம்) சரி, மாப்பிளே! நாளைக்கு என்ன பண்ணறது?

அம்மை : பண்றதென்ன? எல்லாம் 'பிளான்' போட்டே வேலை செய்வோம். கேளுங்க. நாளைக்கு நம்ம பெரிய பண்ணை வீட்டிலே சொல்லி, அவுஹ பங்களாச் சாவியை வாங்கி வச்சிக்கிடணும்.

நம்பி : (புரியாமல்) ஏன்? வாரவுஹ நம்ம வீட்'லே தங்க மாட்டாகளா, என்ன?

அம்மை : தங்குதாகளோ இல்லியோ? வாங்கி வச்சா இருக்கு.

நம்பி : அவுஹ தருவாகளா?

அம்மை : இந்த அம்மையப்பன் வாய்க்கு இதுவும் தருவாஹ. இன்னமும் தருவாஹ. அப்புறம் இருக்கிற நகை நட்டு போக, அக்கம் பக்கத்திலேயும் கொஞ்சம் நகைகளை இரவல் வாங்கி, அக்காவும் மருமகளும் போட்டுக்கிடணும்.

நம்பி : மாப்ளே! பிளான் எல்லாம் பிரமாதம்தான். ஆனா, இதையெல்லாம் பாத்து அவங்க ஏமாந்திருவாஹன்னு நினைக்கே?

அம்மை : எல்லாம் நாம நடந்துக்கிடுற முறையிலே தான் இருக்கு அத்தான்! நாய் வேசம் போட்டா, குலைச்சித்தான் ஆகணும். அதைக் கூச்சமில்லாம, நல்லாக் குலைச்சிட்டோம்'னு—

[மாயாண்டி கும்பிட்ட கையாக வந்து சேர்கிறான்.]

மாயாண்டி : மொதலாளி!

நம்பி : மாயாண்டியா? வாப்பா வா. எங்கே வந்தே?

மாயா : ஒன்னுமில்லே. அன்னைக்கி விறகு தறிச்சிப் போட்டேன். அதுக்கு......அதான் வந்தேன் மொதலாளி.

நம்பி : முதலாவது, வட்டியாவது? இப்போ ஒண்ணும் காசு இல்லே, நாளைக் கழிச்சி வா.

மாயா : என்ன மொதலாளி! நாளை நாளைன்னு நாளும் தான் போவுது.

அம்மை : சரி மாயாண்டி அத்தான் சொன்ன நம்பிக்கை இல்லே? நாளைக் கழிச்சி வா. அவுஹ தரலேன்ன என்னைக் கேளு.

மாயா : சரி. அப்ப நான் வரட்டுமா?

அம்மை : மாயாண்டி இப்படி வாப்பா. ஒன்னாலே ஒரு காரியம் ஆகணுமே.

மாயா : என்னங்க?

அம்மை : நாளைக்கு நம்ம அத்தான் மகளைப் பார்க்க, மாப்பிள்ளை வீட்டார் வாராஹ.

மாயா : அப்படியா? நல்லதுங்க. அதுக்கும்தான் எவ்வளவு நாளாச்சு?

அம்மை : எல்லாம் ஆகிறகாலத்திலேதானே ஆகும்ப்பா ...ம். வாரவுஹ ரொம்பப் பெரிய இடமாக்கும்!

மாயா : நம்ம பெரிய பண்ணை அளவு இருக்குங்களா?

அம்மை : ஹூம்! பெரிய பண்ணையா? அதெல்லாம் இவங்க கால்'லே கட்டி அடிக்க உதவாது. சரி. அதுக்குத்தான் உன்னைக் கூப்பிட்டேன். தாலி கழுத்திலே ஏர்ற வரையிலே தர்ம நியாயம் பாக்கப் படாதுங்குறது உலக வழக்கு. சரி நாளைக்குப் பூராவும் நீ இங்கேயே இரி. தெரிஞ்சுதா?

மாயா : எதுக்குங்க?

அம்மை : சும்மா, நாளைக்கி ஒரு நா இங்'னெ வந்து நின்னு ஏன்னு கேட்டா, என்னன்னு சொல்லிக்கிட்டு

நில்லப்பா. அத்தானே நானே அப்படியிப்படி அதட்டிக்கிதட்டிப் பேசினாலும், கையைக் கட்டிக் கிட்டுப் பதில் சொல்லணும். அவ்வளவுதான்.

மாயா: இதென்னங்க வேலை?

அம்மை: அட,—ரெண்டு ரூவா தாரேம்ப்பா.

மாயா: ரெண்டு ரூவாயா? சரிங்க.

அம்மை: சரி. நாளைக்குக் கோழி கூப்ட வந்துரு. மறந் திராதே.

மாயா: சரி. வாறேனுங்க

(மாயாண்டி செல்கிறான்)

நம்பி: அம்மையப்பா! இதெல்லாம் என்ன வேடிக்கை?

அம்மை: வேடிக்கையில்லை அத்தான்! எல்லாம் அம் மையப்பனின் திருவிளையாடல்!

## காட்சி—2.

(மறுநாள். நம்பியா பிள்ளையின் வீடு. அம்மையப்பன் ஒரு பெட்டியடி மேஜை முன்னிருந்து பொத்தைப் பொத்தையான பேரேட்டுப் புத்தகங்களைக் கரி சனையோடு புரட்டிக் கொண்டிருக்கிறான். வீட்டி னுள்ளிருந்து இடுப்பில் கட்டிய சிட்டுத் துண் டோடு நம்பியாபிள்ளை பிரவேசிக்கிறார்.)

நம்பி: என்ன அம்மையப்பா! காலம் காத்தாலே கணக் குப் பொஸ்தகமும் கையுமா உட்கார்ந்திருக்கே? இதெல்லாம் என்னது?

அம்மை: இதெல்லாம் நம்ம வீட்டு இறப்பிலே கிடந் தது என்னமோ நாலு தடிக்கணக்குப் புஸ்தகத்

தைப் போட்டு அப்படி யிப்படிப் புரட்டிக் கிட்டு இருந்தா, வாரவுகளுக்கு நம்ம வரவு செலவைப் பத்தி ஒரு எண்ணம் விழும் பாருங்க.

நம்பி : சரிசரி. மாயாண்டி வந்தானு ?

அம்மை : வராம என்ன ? காசில்லா பேசுது ! சரி, அத்தான். நீங்க என்ன இப்படி ஒரு மூண்டைக் கட்டிக்கிட்டு நிக்கீஹ ? ஜோரா, ஒரு எட்டு முழமல் வேட்டியை எடுத்து, பட்டத்தார் போட்டுக்கிட்டு நில்லுங்க.

நம்பி : என்னது ? பட்டத்தாரா ?

அம்மை : ஆமத்தான் ! பட்டத்தார் கட்டிக்கிட்டு, காலே அகட்டிவச்சி நடை நடந்தாத்தான் பணக்காரன் னு மதிப்பான் !

(உள்ளே இருந்து சொர்ணம் தலைகாட்டுகிருள்.)

சொர்ணம் : என்ன ? நீங்க இன்னம் குளிக்கலியா ?

அம்மை : இனிமே எங்கே குளிக்க ? நேரமாச்சி. மேற குத்தி ரயில் இன்னம் சித்த அஞ்சல்'லே வந்திடும், அத்தான் ! சும்மா குளிச்சமாதிரி விபூதி மட்டும் பூசிக்கிடுங்க. வேணுமின்னு மதியம் பாத்துக்கிட லாம்.

நம்பி : (சிரித்துக் கொண்டே) ஏம்பா. இந்தப் பகல் வேசம் போட்டா, குளிக்கவுமா கூடாது ? குளிச்சா, நம்ம வேசம் கலைஞ்சிருமேன்னு நினைச்சியா ?

அம்மை : நேரமில்லையேன்னுதான். (சொர்ணத்தை நோக்கி) சரி அக்கா. வாரவுகள்ட்டே நீ எதுவும் வசப்பிசகா பேசி மாட்டிக் கிடாதே. ஒம்பொண்ணு கரையேறணும்னு நீயும் எங்களோடே ஆடித்தான் தீரணும் !

சொர் : (தோளின்மீது மோவாயை இடித்துக்கொண்டு) நல்லாததான இருக்கு நம்ம புழைப்பு !

அம்மை : பொண்ணைப் பெத்துப்போட்டுட்டா, இதுவும் தான்—இன்னமும்தான் !

நம்பி : சரி அம்மையப்பா, எதுக்கு இத்தனை படி பால், தயிர், நெய் எல்லாம் தரவழைச்சிருக்கே ! சும்மாவா தாராங்க ?

அம்மை : காசுக்குத்தான். ஆனு, காசு என்ன நாம இப்பவா கொடுக்கப் போறேம் ? பாலும் நெய்யும் வழிஞ்சி ஓடுதின்னு சொன்ஞப் போதுமா ? ஓட வேண்டாமா ?

நம்பி : நீ பண்ற கூத்தை யெல்லாம் பார்த்தா, இனிமே நாமதான் ஊரைவிட்டே ஓடணும் போலிருக்கு !

*(வெளியே வண்டி வரும் சத்தம் கேட்கிறது. அதைத் தொடர்ந்து மாயாண்டி பிரவேசிக்கிருன். நம்பியா பிள்ளை வீட்டினுள் ஓடி வேட்டியைக் கட்டிக் கொண்டு ஓடிவருகிருர்.)*

மாயா : (உள்ளே வந்து) மொதலாளி, வண்டி வந்துட்டுது.

*(செய்தியைக் கேட்டதும் எல்லோரும் தெரு வாசலுக்குப் போகிருர்கள். தெருவில் வண்டி வந்து நிற்கிறது. வண்டியிலிருந்து 'மாப்பிள்ளை' சபாபதியும், அவன் தாய்தேவயானையும் இறங்குகிருர்கள்.)*

அம்மை : டே, மாயாண்டி ! நோக்கூலேக் கொஞ்சம் தூக்கிப் பிடியேண்டா. (தேவானையை நோக்கி) வாங்கம்மா. வாங்க தமபி. பாத்து இறங்குங்க.

நம்பி : வாங்க, வாங்க உள்ளே.

சொர் : வாங்க மதனி.

*(எல்லோரும் வீட்டினுள் நுழைகிருர்கள்.)*

அம்மை : டே, மாயாண்டி. அந்த ஈசிச்சேரை எடுத்துப் போடேண்டா. முழு மாடாட்டம் நிக்கிறியே.

[மாயாண்டி ஈஸிச்சேரை எடுத்துப் போடுகிறன்.]

(சபாபதியை நோக்கி) தம்பி. அப்படி உக்காருங்க. டே மாயாண்டி அந்த விசிறியை எடுத்து வீசேண்டா. (சபாபதியிடம்) திண்டுபோடச் சொல்லட்டுமா?

சபா : அதெல்லாம் வேண்டாங்க.

அம்மை : அத்தான், நீங்களும் அப்படி உக்காருங்க, தம்பியைப் பாத்தியள்ளே? அப்படியே அவுஹ அப்பாவை உரிச்சி வச்ச மாதிரியில்லே?

நம்பி : (திண்ணையில் அமர்ந்தவாறே) ஆமாமா.

அம்மை : தம்பிக்கி உங்களை யெல்லாம் பார்த்துப் பழக்கமில்லே. அவுஹ அப்பா இந்தத் திசையிலே வந்தா, நம்ம வீட்டிலே கை நனைக்காமப் போக மாட்டாக. தம்பி இளவட்டம். அதிலியும் மேல் படிப்புக்குன்னு பட்டணம் வேறெ போயிட்டா களா? தெரியலெ...இப்பத்தான் தெய்வ சங்கல் பத்தாலே அந்த உறவு ஒண்ணு சேருது... (மாயாண்டியிடம் திரும்பி) டே, மாயாண்டி, அக்காளை இலை போடச் சொல்லுடா.

மாயா : சரிங்க.

[மாயாண்டி உள்ளே செல்கிறன்.]

அம்மை : தம்பி இருங்க. நீங்க வந்த வரத்திலே கணக்கு நோட்டையெல்லாம் அப்படியே போட்டுட்டு வந்தேன், இருங்க ஒரு வரி எழுதிட்டு வந்திருதேன்.

சபா : அதுக்கென்ன? பொயிட்டு வாங்க

[அம்மையப்பன் மீண்டும் பெட்டியடி மேசையிடம் அடைக்கலம் புகுகிறன், நம்பியாபிள்ளை மாப், பிள்ளை'ப் பையனிடம் பேச்சுக் கொடுக்கிறர்.]

நம்பி : தம்பிக்கி இந்த வருசத்தோடே படிப்பு முடியு தின்னு கேள்வி, அப்படித்தானு ?

சபா : ஆமாங்க.

நம்பி : அப்படின்னு — அடுத்த வருசம் தொட்டே வீட்டோடே குடியும் குடித்தனமுமா இருந்திடலாம்.

சபா : இல்லே. ஏதாவது வேலே பார்க்கலாமின்னு உத்தேசம்.

நம்பி : வேலே என்ன தம்பி வேலே ? ஏதோ ஆண்டவன் குறையில்லாமக் கொடுத்திருக்கான். நாம நினேக்கிறபடி எல்லாம் மங்களமா முடிஞ்சா, அப்புறம் நீங்க இங்கேயே வேணும்ன்னலும் இருந்திரலாம்.

*[இந்தச் சந்தர்ப்பத்தில் பெட்டியடி மேசையிலிருந்து அம்மையப்பன் குரல் கொடுக்கிறன்,]*

அம்மை : அத்தான், அத்தான் !

நம்பி : (அம்மையப்பனே நோக்கி) என்ன மாப்பளே ?

அம்மை : (கணக்கைக் கூட்டுவதுபோல் முணு முணுத்து) நூத்தி இருபது, நூத்தி இருபத்தஞ்சு, நாநூற்றம்பது... அத்தான் ! போன மாசம் மேலப் பாளேயத்து சேக் மம்மூது நாலாயிரம் ரூபா கைமாத்தா வாங்கிக்கிட்டுப் போனுரே, அதைக் கணக்கிலே பதிஞ்சிரவா ? வேண்டாமா ?

நம்பி : அதை ஒண்ணும் பதிய வேண்டாம். அவரு கொண்டாந்திருவாரு.

அம்மை : உங்களுக்கென்ன ? நாலாயிரமும் ஐயாயிரமும் தண்ணிப்பட்ட பாடாயிருக்கு. இருந்தாலும் கணக்கிலே ஒரு வரி போட்டு வச்சாத்தானே நல்லது.

நம்பி : அதைப் போட்டு எழுதுவானேன்? அவர்ட்டே நாம வட்டி கூட வாங்கிறதில்லே.

அம்மை : எதுக்கும் நான் ஒரு எழுத்துப் போட்டு வச்சிடுதேன். (மாயாண்டியிடம்) டே மாயாண்டி இலே போட்டாச்சா இல்லியா?

மாயா : (கைகட்டி வாய்பொத்தி) போட்டாச்சு முதலாளி!

அம்மை : அதை வந்து சொன்னு என்னடா? வாயிலே கொழுக்கட்டையா கிடக்கு? (சபாபதியிடம்) சரி, வாங்க தம்பி. எழுந்திருங்க, சாப்பிடப் போகலாம். (மாயாண்டியிடம்) நாங்க சாப்பிட்டு வாரோம். அதுக்கிடையிலேபோயி, நான் சொன்ன வேலே யையும் முடிச்சிட்டு, வாரவழிலே நம்ம களத்து மேட்டிலே யிருந்து ரெண்டு குலே செவ்விளநி தள்ளிக்கிட்டு வா.

மாயா : ஆகட்டுங்க.

*[மாயாண்டி வெளியே செல்கிறுன், ஏனைய மூவரும் உள்ளே செல்கின்றனர்,]*

## காட்சி—3

*[நம்பியா பிள்ளையின் வீடு, மதியச் சாப்பாட்டை முடித்துவிட்டு, அம்மையப்பன், நம்பியாபிள்ளை. சபாபதி மூவரும் முற்றத்துக்கு வருகிறுர்கள். மாயாண்டி முற்றத்துத் தூண் ஓரத்தில் கைகட்டி நிற்கிறுன்.]*

அம்மை : (பலத்த ஏப்பம் ஒன்றை விட்டுக்கொண்டே. சபாபதியிடம் திரும்பி) தம்பி, கொஞ்சம் படுத்துக் கிடுதியளா? (மாயாண்டியிடம்) டே, மாயாண்டி நீ அந்தச் சப்ரமஞ்சத்திலே மெத்தையை எடுத்துப் போடுடா.

சபா : நான் பகல்லெ தூங்கமாட்டேன், பழக்கமில்லே.

அம்மை : நான் உங்களேத் தூங்கச் சொல்லலியே. ரயில்லே வந்த அலுப்பு இருக்கும், சாப்பிட்ட ஆயாசம் வேறெ, உடம்பைக் கொஞ்சம் கிடத்தி எடுத்தா, அந்தச் சுகமே தனி. அதுக்குச் சொன்னேன்.

சபா : இல்லே, வேண்டாம், (ஈசிச்சேரிலே சாய்கிருன்.)

அம்மை : மாயாண்டி, நம்ம மேலவயல் நாத்தங்காலுக்குத் தண்ணி பாஞ்சுதாடா ?

மாயா : இல்லிங்க.

அம்மை : என்னடா இல்லிங்க ? ஏன் அதுக்கு ஒருத்தனே அனுப்பிறு என்ன ? ஒண்ணுக்கு ஒம்பது பேர் இருக்கிறீங்க, அதைப் போய்ப் பாக்கிறதுக்கு முடியலியோ ?

மாயா : இல்லிங்க, பெரிய வீட்டுக்காரர் வயலுக்கு இன்னிக்குப் பாயுதாம். அதனுலே மடையை அடைச்சிட்டாங்க.

அம்மை : யாரு? பெரிய வீட்டாரு? அவனுக்கு என்ன கெட்ட காலமோ தெரியலெ நாற்பது கோட்டை நிலமிருந்தா மட்டும் போதுமா ? உடனே பெரியவனாய்ட்டதா நினைப்பு. அவனே ஒரு கை பார்த்தாத் தான் சரியா வருவான் !

நம்பி : (குறுக்கிட்டு) அம்மையப்பா, அவங்க விசயத்தை ஏன் பேசுதே?

அம்மை : இல்லெ அத்தான், உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசு. அதைத் தெரிஞ்சிட்டுதான் இந்த நண்டு நறுங்கெல்லாம் தலேகால் தெரியாம ஆட்டம் போடுது !

நம்பி : சரி, நீ டவுனுக்குப் போயிருந்தியே, வக்கிலேப் பாத்துட்டு வந்தியா ?

அம்மை : போனமட்டும் பார்க்காமலா வருவேன் ? அந்தப் பலவேசத்திட்டே பணம் லேசிலே வராது போலிருக்கு. அவன் சொத்துக்கு ஒரு டிக்கிரி வாங் கறதுக்கு ஏற்பாடு பண்ணிட்டேன்.

நம்பி : சரி சரி, எல்லாம் கவனிச்சிக்க. நான் உள்ளே போயி கொஞ்சம் தலையைச் சாய்க்கேன்.

(உள்ளே போகிறார்)

அம்மை : (சபாபதியிடம்) தம்பி, வாரீங்களா ? இப்படி வெளியே போயிட்டு வரலாம்.

சபா : எங்கே ?

அம்மை : சும்மாத்தான்—ஒரு சுத்து சுத்திப் பாத்துட்டு வரலாம்.

(சபாபதி இடத்தைவிட்டு எழுந்திருக்கிறான்)

சபா : சரி, போவோம்.

(இருவரும் போகிறார்கள்.)

## காட்சி—4

*மறுநாள் காலை. தேவானை சபாபதி இருவரும் ஊருக் குக் கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள் நம்பியா பிள்ளை வீட்டில் எல்லோரும் கூடி நிற்கிறார்கள்.*

தேவானை : பையன் இன்னிக்கே ஊருக்குப் போகணும் கிறான். காலை வண்டியிலேயே போகணுமாம்.

அம்மை : ஏன் தம்பி, ரெண்டு நா இருந்து போறுத்தான் என்ன ?

சபா : இல்லே, கொஞ்சம் வேலே இருக்கு.

அம்மை : (நம்பியா பிள்ளையிடம்) அத்தான், நான் போயி நம்ம ஐயரைக் கூட்டிட்டு வந்திடுதேன்.

சொர்ண : வார மாசமே நல்ல மாசமாத்தான் இருக்கு.

தேவானை : இல்லே, வேண்டாம். நாங்க ஊருக்குப் போய் கடுதாசி எழுதுகிறோம்.

அம்மை : சரி, அவுஹ இஷ்டம் (மாயாண்டியை நோக்கி டே, மாயாண்டி, வில்லு வண்டியைப் பூட்டிக் கொண்டாடா சீக்கிரம்.

மாயா : சரிங்க முதலாளி.

அம்மை : டேய் ! அத்தோட, நம்ம வாழைத் தோட்டத் திலே யிருந்து ரெண்டு ரஸ்தாளிக் குலே தள்ளிக் கொண்டாந்தியே, அதையும் வண்டியிலே ஏத்தி வய்யி.

(வாசலில் வண்டி பூட்டப்படும் சத்தம் கேட்கிறது. தேவானை சபாபதி இருவரும் புறப்படுகிறார்கள்.)

தேவானை : அப்ப, நாங்க வர்றோம்.

சபா : போயிட்டுவர்றோம்.

நம்பி : சரி, தம்பி போனதும் மறந்திராம கடுதாசி போடச் சொல்லுங்க.

அம்மை : டே, மாயாண்டி . வண்டியைச் சகுனம் பாத்து விடுடா. (சபாபதியிடம்) தம்பி, நீங்க வண்டியிலே போய்க்கிட்டே யிருங்க. நான் பின்னலேயே வந் திருதேன்.

(தேவானை சபாபதி இருவரும் வெளிச் செல்கிருர்கள்)

நம்பி : (அவர்கள் சென்றவுடன்) அப்பாடி! ரெண்டு நாளும் என்ன அமக்களம்'டா, அம்மையப்பா! ஆமா, நீ கடைசியிலே ரெண்டு ரஸ்தாளிக்குலே எடுத்து வைக்கச் சொன்னியே, ஏது அது?

அம்மை : அதெல்லாம் மாயாண்டியிடம் சொல்லி, நேத்து ராத்திரியே வாங்கிக் கொண்டாந்து வச்சிறச் சொல்லிட்டேன்.

நம்பி : நீ பலே ஆளுதாம்ப்பா.

அம்மை : அதுமட்டுமா அத்தான்! நேத்து சாப்பாட்டுக்கு மேலே மாப்பிள்ளையை மட்டும் தனியாக் கூட்டிக்கிட்டுப் போனேறு?

நம்பி : ஆமாம் போனே.

அம்மை : போனேறு? நேரா பெரிய பண்ணை பங்களாவுக்குப் போனேம். பங்களாவைத் திறந்து காட்டி அதுதான் உங்க பங்களான்னு சொல்லிப்பிட்டேன். பையன் மயங்கிப்பிட்டான் மயங்கி!

நம்பி : அடப்பாவி!

அம்மை : அத்தோடே விட்டேறு? பெரிய பண்ணை வயலெல்லாம் நம்ம வயல்தான்னு கண்ணெட்ற தூரம் வரையிலும் கையை நீட்டிக் காட்டியும் போட்டேன்.

சொர்ண : அது சரி தம்பி, அந்தப் புள்ளே மனசிலே என்ன நினைச்சிருக்குன்னு தெரிஞ்சிக் கிட்டியளா?

அம்மை : சம்மதந்தான். இருந்தாலும் வாய்விட்டுச் சொல்லுமா? அது சரி, அக்கா. நேரமாச்சு, நான் டேசன் வரையிலும் போயி, அவுகளெ வழியனுப்

பிச்சிட்டு, அந்தத் தேவானையம்மாவிடம் ஒரு நோக்கமும் தெரிஞ்சிக்கிட்டு வாரேன்.

**நம்பி :** சரி, போயிட்டு வா.

(அம்மையப்பன் போகிறன்.)

காட்சி—5

(தேவானையும் சபாபதியும் ரயில்வே ஸ்டேஷன் ரூமில் ஒரு பெஞ்சு மீது அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிருர்கள்.)

**தேவானை :** என்னடா சபாபதி? உனக்கு இந்த இடம் புடிச்சிப் போச்சாடா?

**சபா :** இல்லெ. வந்து—...

**தேவானை :** என்னடா, வந்தும் போயும்? எவ்வளவு பெரிய இடம். நான்கூட இப்படி நினைக்கலியே, அவுஹ வீட்டிலே தங்கமும் வெள்ளியும் தட்டு முட்டுச் சாமானும் புழங்குது. பொண்ணும் பரவா யில்லே. ஒத்தைக்கு ஒண்ணு. இந்த இடத்துக்கு என்னடா குறை?

**சபா :** அந்த வாயாடி—அவர்தான் வீட்டுக்காரர் மச்சி னன்- அவரு பட படான்னு மெஷின்கன் மாதிரி பொறிஞ்சி தள்றதைக் கண்டாலே எனக்குப் புடிக்கலேம்மா.

**தேவானை :** ஏண்டா? பொண்ணைப் புடிச்சிருக்கான்ணு, அவரைப் புடிக்கலேங்கிறியே.

**சபா :** இல்லேம்மா, அவங்க எல்லோருமே ஒரே பண மமதை புடிச்சித் திரியுதாங்க. அந்தப் பெரியவரு

பேசவே பணம் கேட்கிருரு. சின்னவரோ ஒரே பெருமையும் திமிரும் புடிச்சவராய் இருக்காரு.

தேவானை : அதனுல் என்ன? இந்தப் பொண்ணை மட்டும் நீ கல்யாணம் பண்ணிஞ, அத்தனை சொத்தும் உனக்குத்தான்.

சபா : இல்லேம்மா, இவ்வளவு பெரிய இடத்திலே சம்பந்தம் பண்ணிஞ, நமக்கு உள்ள மதிப்பும் போயிடும். பின்ஞல் நமக்குத்தான் கஷ்டம், இது வேண்டாம்மா.

தேவானை : சரி, உனக்கே இஷ்டமில்லேன்ஞ, நான் என்ன சொல்லக் கிடக்கு.

சபா : (ஜன்னல் வழியே பார்த்து, தூரத்தில் அம்மையப்பன் வருவதைக் கண்டு) அதோ பாரம்மா, அந்தச் சடசடாக் குச்சி மனுசன் வாராரு.

தேவானை : அதுவும் சரிதான், அவரிடமே சொல்லிட்டாப் போச்சி!

## காட்சி—6

[நம்பியா பிள்ளை வீடு. பிள்ளை கூடத்தில் அமர்ந்திருக்கிருர். சொர்ணம் பக்கத்தில் நிற்கிருள். மாயாண்டி வந்து சேர்கிருன்.]

மாயா : முதலாளி.

நம்பி : வாப்பா.

மாயா : முதலாளி, எப்படிங்க நம்ம வேலே? உங்க மச்சினப்புள்ளே என்னை உசிரைத்தான் எடுத்திட்டாரு. விரட்டு விரட்டுன்னு விரட்டி......

நம்பி : ஆமாம், காரியம் ஆகணுமின்ஞ எல்லாம்தான் வேண்டியிருக்கு.

மாயா : சரிங்க, நான் வேலை வெட்டியை யெல்லாம் விட்டுப் போட்டு, ரெண்டு நா இங்கேயே இருந்துட்டேன். இப்போ நீங்க ஏதாச்சும் கொடுத்தனுப்பிஞ நல்லது.

நம்பி : பொறப்பா, எம் மச்சினன் வந்திரட்டும்...... அடேடே! அதோ வந்துட்டானே.

(அம்மையப்பன் வந்து சேர்கிறுன்.)

அம்மை : அத்தான்!

நம்பி : அம்மையப்பனு? வா, வா, என்ன - தெரிஞ்சிக்கிட்டு வந்தியா?...என்ன பேசாமலிருக்கே?

அம்மை : (பரிதாபத்துடன்) அத்தான்! ஆனைக்கும் அடி சறுக்கும்'னது சரியாப் போச்சு அத்தான்!

நம்பி : (திடுக்கிட்டு) நீ என்ன சொல்றே?

அம்மை : பையனுக்குப் பொண்ணைப் புடிக்கலியாம்; இந்த இடமே புடிக்கலையாம்.

சொர்ணம் : இடமே புடிக்கலியா? அப்படியா சொன்ஞங்க?

நம்பி : அப்படின்ஞ இத்தனை நாடகமும் வீண்தானு? அட, தெய்வமே!

மாயா : முதலாளி! நான் போகணும், பணம்?—

அம்மை : போடா, பணமாவது, காசாவது? இங்கே இருக்கிற வயித்தெரிச்சல்'லெ—

மாயா : என்னங்க இது?

அம்மை : (எரிச்சலுடன்) போடான்ஞ? இன்னமா நிக்கே? எரியிற நெருப்பிலே எண்ணெயைக்

கோறி ஊத்திளுப்பிலே!—போடா, புடுங்கித் தின்னிப் பசங்களா!

மாயா: மரியாதையாப் பேசு, ஐயா. அப்புறம் மரியாதை கெட்டுப் போயிரும்! உழைச்சதுக்குக் காசை வச்சிட்டு மறுவேலை பாரு, ஆமா! நேத்து வாடா போடான்னு விரட்டுறப்போ எப்படி இருந்தது? இப்பக் காசுன்னு மட்டும் வலிக்குதோ?

நம்பி: (குறுக்கிட்டு) மாயாண்டி! இப்போ நிலைமை சரியில்லே, ரெண்டு நா கழிச்சி வா, நானே தாரேன்.

மாயா: உங்க மரிவாதிக்காகத்தான் போறேன், முதலாளி. இல்லாட்டி...

(மீசையில் கை போட்டுத் திருகியவாறே மாயாண்டி செல்கிறுன்.)

நம்பி: (சலித்து) இப்போ இவன் பாக்கிக்கு நிக்கான். நாளே பால், தயிர், நெய் எல்லாப் பயல்களும் வந்து நிக்கப் போறுன். அம்மையப்பா! உன் நாடகத்துக்கு இதுதானு பலன்?

அம்மை: என்ன செய்றது அத்தான்? செல்லத்துக்கு விதிச்சது அவ்வளவுதான்.

சொர்: பின்னே—? நாம இப்படி ஏமாத்தப் பார்த்தா தெய்வமாப் பார்த்து இதுவும் கொடுக்கும்; இன்னமும் கொடுக்கும். பெரிய இடத்துச் சம்பந்தமாம்! பெரிய இடம்! பெரிய இடம்! ரொம்பப் பெரிய இடம்!

(சொர்ணம் வெறிபிடித்ததுபோல் வாய்விட்டுச் சிரிக்கிருள்.)

— திரை —

1950

# அத்தான் வந்தார்!

**பாத்திரங்கள் :**

திருவாளர் பூதலிங்கம் பிள்ளை
நெல்லை வடிவு — ஷை யாரின் மனைவி
சபாபதியா பிள்ளை — ஷை பிள்ளையவர்களின் அத்தான்
சுப்பையா — மேல வீட்டுத் தம்பி

**காட்சி—1**

(திருவாளர் பூதலிங்கம் பிள்ளையவர்கள் வீடு. பிள்ளையவர்கள் முற்றிக் கனிந்த சிவப்பழம்போல் வெண்ணீறு துலங்கும் திருநுதல் திருமேனியோடு தம் வீட்டு ஊஞ்சல் பலகையில் அமர்ந்து, பக்கத்திலிருந்த அலமாரியை எட்டிப் பிடித்து, அதிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டுகிறார். புரட்டும்போதே அவரது நாவில் இசை கூடுகிறது.)

பூதலிங்கம் : (ஓதுவார் மூர்த்திகளின் தேவாரப் பண்ணிசையில்)

ஒருமையுடன் நினது
திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்...ம் —

உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்...ம்...

[பாட்டை நிறுத்திவிட்டு, உள்ளே திரும்பிப் பார்க்கிறார்.]

(உரத்த குரலில்) ஏளா ஏ வடிவு! (மீண்டும் புத்தகத்தில் கண்ணைத் திருப்பியவாறு அடங்கிய குரலில்) ஆள் அரவத்தையே காங்கலியே, எங்கே தொலைஞ்சி போனா?...ங்!......

[மீண்டும் பாடத் தொடங்குகிறார்.]

பெருமைசேர் அறநெறி
பிடித்தொழுக வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்...ம்—

[மீண்டும் பாட்டை நிறுத்துகிறார்.]

(உரத்து) ஏளா, ஏ வடிவு! (தணிந்து) கடைக்குத் தான் போனாளோ? கருப்பந்துறைக்குத்தான் போனாளோ? கூப்பிட்ட சத்தத்துக்கு என்னான்னு கேக்கதுக்கு நாதியெக் காணம்.

[கதவு தள்ளும் ஓசை கேட்கிறது. பிள்ளை தலையைச் சாய்த்து, சத்தத்தைக் காதில் வாங்குகிறார். வெளியிலிருந்து சுப்பையாவின் கூப்பிடு குரல் கேட்கிறது.]

சுப்பையா: (வெளியிலிருந்து) அண்ணாச்சி, அண்ணாச்சி யோவ்!

பூத: அதாரது? (சுப்பையா உள்ளே வருவதைக் கண்டு) சுப்பையாவா? வா தம்பி, ஒன்னை என்ன ஆளையே காணமே!

[பிள்ளையவர்கள் கண் மீண்டும் கையிலுள்ள புத்தகத்துக்குத் திரும்புகிறது.]

சுப் : எங்க அண்ணுச்சி ஒழியுது? விடிஞ்சாப் பொழுதடைஞ்சா வேலைக்கே நேரம் சரியாப் போவுது. இன்னிக்கு நாயித்துக்கிளமை, அதான் வந்தேன்.

பூத : சதி, இங்கே வா, மதினியையும் காணம். நீ இப்படி உக்காரு.

[சுப்பையா பக்கத்துத் திண்ணையில் அமர்கிறான்.]

சுப் : அதென்ன அண்ணுச்சி, பொஸ்தகம்?

பூத : இதுவா? திருக்குறளு! நேரம் போவலியே, சும்மா புரட்டலாமின்னு எடுத்தேன். அதுக்குள்ளே நீயும் வந்திட்டெ.

சுப் : (புத்தகத்தைக் கை நீட்டிப் பெற்றுக்கொண்டே) சரவணப் பெருமாள் உரையா? சதிதான். (புத்தகத்தைப் புரட்டுகிறான்.)

பூத : அந்தக் காலத்திலெ அப்படிப் பாடி வச்சிருக்காஹ பெரியவுக. இப்ப யாரு இப்பிடி...?

சுப் : ஆமண்ணுச்சி, இந்தக் குறளெப் பாத்தியளா?

பூத : எதெச் சொல்லுதே?

சுப் : அதான்'ஙெ. விருந்தோம்பல் அதிகாரத்திலே...

பூத : எங்கே, படி பாப்போம்.

சுப் : (குறளை நிறுத்திப் படிக்கிறான்.)

செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத் தவர்க்கு

பூத : (சலிப்புடன்) இதுவா? இதென்ன தம்பி பாட்டு?

சுப் : அதென்ன அப்படிச் சொல்லிட்டீஹ? வந்த விருந்தாளியைக் கெவுனிச்சி வரப்போற விருந் தாளியை எதிர்பார்த்திருந்தா, சொர்க்கத்திலே இடம் கிடைக்கும்'னுதானே சொல்லியிருக்கு!

பூத : (கசந்த குரலில்) ஆமாமா. சொர்க்கத்திலேதான் இடம் கிடைக்கும்!

சுப் : (வியந்து) என்ன அண்ணுச்சி?

பூத : பின்னே என்ன தம்பி? ஆனே கட்டிப் போரடிச் சாங்களாமே, அந்தக் காலத்துக்குச் சதி, இப்பத் தான் படியளந்து சாப்பிட வேண்டியிருக்கே, இப்ப இப்படியிருந்தா, ஓலைப்பெட்டியும் கையுமா ஓட வேண்டியதுதான் தம்பி.

சுப் : அதுக்கா—வார விருந்தைத் தூரத் தள்ளிற முடியுமா?

பூத : தள்ள முடியாட்டா, விதியேன்னு தலையிலே கைவைக்க வேண்டியதுதான்!

(இந்தச் சமயத்தில் முளைக்கிரைத் தண்டும் கையுமாக செல்லை வடிவு உள்ளே வருகிருள். அவளது காதுகளில் தொங்கும் பாம்படம் தோள் பலத் தில் துவண்டு கிடக்கிறது.)

சுப் : சதி அண்ணுச்சி, அந்தா மதினியும் வந்துட் டாஹ.

வடிவு : (பிள்ளையை நோக்கி) இந்தாங்க—உங்களைத் தானே.

பூத : ஏளா, இவ்வளவு நேரம் எங்கே போய்த் தொலைஞ்சே? கூப்பிட்டுக் கூப்பிட்டுத் தொண் டைத் தண்ணியெல்லாம் வத்திப் போச்சே!

வடிவு : போக்கிடம் ஏது? அதாங், அம்மன் கோயி லுப் பக்கம் கீரைத் தண்டு வித்துது, ஒரு விலே வாங்கியாரப் போனேன். சதி, வந்து...

பூத : என்னளா, வந்து ?

வடிவு : அருணுவரத்துச் சின்னியாவைப பார்த்தேன். எங்க அண்ணுச்சியை டவுன்'லெ சந்திச்சாகளாம். அண்ணுச்சி நாளைக்கி இங்கே வாரதாகத் தாக்கல் சொன்ஞர்களாம்.

பூத : யாரு? உங்க அண்ணுச்சியா ?

வடிவு : ஆமா, சபாபதி அண்ணுச்சி, காலையிலே காக்கா கூப்பிடயிலேயே நினைச்சேன்.

பூத : அண்ணுச்சி வராருன்னு ஒரே கொண்டாட்டமா யிருக்கு'ங்?......

வடிவு : வராதவுஹ வாராக...

பூத : வேண்டாமின்ஞு சொல்லுதேன். வாரவுஹ முங் கூட்டியே ரெண்டு நாளைக்கு முன்னேயே ஒத்தை வரி எழுதிப் போட்டுட்டு வாரது ?

வடிவு : அதுக்காக? வந்தாத் தள்ளிற முடியுமா ? நீங்களும் நல்லாத்தான் பேசுதிய. வரவர ஓங்க புத்தி ஏமிப்படிப் போவுதோ தெரியலெ.

சுப் : பாத்தியளா அண்ணுச்சி, நாம விருந்தோம்பலேப் பத்திப் பேச்சை எடுத்ததுமே...

பூத : (எரிச்சலுடன்) சதிசதி, பொஸ்தகத்தை மூடி வய்யி:

வடிவு : இந்தாங்க, வீட்டிலே உளுந்து, பருப்பு ஒன்னு மில்லெ. நீங்க கடைக்கிப் போயி ஏதாவது வாங்கி யாந்து போடுங்க.

பூத. சதிசதி, எல்லாம் எனக்குத் தெரியும்'ளா, தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணி கொண்டா, போ.

(வடிவு உள்ளே செல்கிறாள்.)

அப்பா! இந்த வூட்லெ எல்லாம் இவ வச்சது வரிசையாயிருக்கு...ங்!

('முருகா' என்று பிளந்த வாயில் கொட்டாவி வரவும் கையை உயர்த்தி வாய்முன் சொடக்கு விடுகிறார் பிள்ளை.)

## காட்சி—2

(பிள்ளையவர்கள் வீடு. வெளியிலிருந்து வண்டிச் சத்தம் கேட்கிறது. சத்தம் நெருங்கி வந்து வீட்டின் முன் நிற்கிறது. சத்தம் கேட்ட வடிவு அடுக்களையிலிருந்து அகப்பையும் கையுமாக, முகத்தைத் துடைத்தவாறு வெளி வருகிறாள். ஊஞ்சலில் தலைக்குக் கையை அணைகொடுத்துப் படுத்திருக்கும் பூதலிங்கம்பிள்ளை தலையை உயர்த்திப் பார்க்கிறார்.)

வடிவு: இந்தாங்க, உங்களைத்தானே. அண்ணாச்சி வந்துட்டாக போலிருக்கு.

(இதற்குள் சபாபதியா பிள்ளை பிரவேசிக்கிறார்)

சபா: (உரத்து) மாப்ளேய்!

பூத: (எழுந்து உட்கார்ந்து) வாங்க அத்தான் வாங்க, ஏது? வாரதாகக் கடுதாசி கூடக் காணம். சதி, வண்டிக்காரனுக்குச் சில்லறை கொடுத்தாச்சா? (வடிவிடம்) ஏளா, வடிவு, திருநாத்துச் சம்புடத்திலே சில்லறை கிடக்கான்னு பாரு. (மெதுவாக) சில்லறையா இருக்கோ என்னமோ?

சபா : அதுக்கென்ன மாப்ளே! யாரு கொடுத்தாஎன்ன?

பூத : சேச்சே ! நீங்க கொடுக்கதாவது ?

சபா : பரவா யில்லெ.

(சபாபதியா பிள்ளை மடியிலிருந்து சில்லறையை எடுத்துக்கொண்டு வெளியில் சென்று வருகிறார். வண்டிச் சத்தம் சென்று மறைகிறது.)

பூத : சதி, அத்தான். நின்னுக்கிட்டே இருக்கியளே, உட்காருங்க.

(சபாபதியா பிள்ளை ஊஞ்சலில் உட்காருகிறார்.)

வடிவு : அண்ணாச்சி, ஊரிலே மதினி புள்ளை ஹ எல்லாம் சவுரியம்தானே.

சபா : சவுரியம்தான். அது சதி, மருமகப் பிள்ளையை எங்கே காணம் ?

வடிவு : இப்ப அவனுக்கு ரசாவில்லெ. அண்ணன் வீட்டுக்குப் போயிருக்கான்.

சபா : (பூதலிங்கம் பிள்ளையிடம்) மாப்ளே! உடம்புக்கு என்ன ? ஆளு முன்னெப் பாத்ததுக்கு இப்ப ரொம்ப வாட்டமால்'லெ இருக்கு !

பூத : (நிர்விசாரமாய்) உடம்புக்கு என்ன ? ஒண்ணும் இல்லெ. பனிக்காலம்—இருமலு; சதி. உக்காந்து வெத்திலெ போடுங்க. (வடிவிடம்) ஏளா, அந்த வெத்திலெச் செல்லத்தை எடுத்திட்டு வா.

சபா : அதுக்கென்ன போட்டாப் போவுது !

வடிவு : நல்லாச் சொன்னிய, வந்தவுஹளைக் காலெக் கையைக் கழுவிட்டுச் சாப்பிடச் சொல்லுதியளா ?

பூத : (செல்லக் கோபத்துடன்) அண்ணாச்சி வாரஹ ளேன்னு நீ ஆக்கிப் பெருக்கி வச்சிருக்கியா? ங் !

வடிவு : பளயது இருக்கு. தோசைக்கு அறைச்ச மாவு வேறெ இருக்கு. சுட்டாப் போவுது.

பூத : சதிதான், அண்ணாச்சி தலையைப் பாத்து, கல்லெப் போடணும்ணு இருந்தியாக்கும் !... நான் இந்த மோர் முளகாய்க்கு ஆசைப்பட்டுல்லா பள யது போடச் சொன்னேன், அத்தான் பளயது சாப் பிடுவாகளா ?

சபா : அதுக்கென்ன மாப்ளெ, உள்ளதை வச்சிமுறை யைக் கழிச்சாப் போவுது, ஆனா, எனக்கு இப்போ பசியே இல்லெ.

வடிவு : அப்ப, நான் தோசையே சுட்டுருதேன்.

(உள்ளே சென்று வெற்றிலைச் செல்லத்தைக் கொண்டு வந்து வைக்கிறாள்.)

இந்தாங்க வெத்திலெ, நான் போயி தோசையைச் சுட்டுருதேன்.

பூத : சதி. உன்னிஷ்டம் போலச் செய்யி. (சபாபதியா பிள்ளையிடம்) அத்தான் ! நீங்க காலைக் காப்பிக் காரங்கள்'லெ. அதிலெயும் உங்களுக்குச் சீனிக் காப்பிதான் புடிக்கும். இங்கே கருப்பட்டிதானே ! ஒங்க தங்கச்சி—...

சபா : எதானா என்ன மாப்ளெ !

பூத : சதி, வெத்திலெயைப் போடுங்க.

(சபாபதியா பிள்ளை முன்பு வெற்றிலைப் பெட்டியைத் தள்ளிவைக்கிறார். சபாபதியா பிள்ளை வெற்றி லையை முனை காம்பு கிள்ளிப் போட முனைகிறார்.)

## காட்சி—3

*(பிள்ளையவர்கள் வீட்டு உட்புறம். வடிவு இலைகளைக் கழுவிப் போட்டுவிட்டு, இலைக்கு இரண்டிரண்டு தோசைகள் பரிமாறுகிறுள். கைகால் கழுவ ஒருபுறத்தில் செம்பில் தண்ணீரும் எடுத்து வைக்கிருள்.)*

வடிவு: (உரத்து!) இந்தாங்க ஒங்களைத்தானே இலை போட்டாச் சில்லெ.

பூத: (வெளியிலிருந்து) வரத்தானே செய்தோம்! இங்கெ என்ன றெக்கையா முளைச்சிருக்கு. சதி, சொம்பிலே தண்ணி வச்சிருக்கியா?

வடிவு: எல்லாம் இருக்கு, வாங்க.

*(சபாபதியா பிள்ளையும் பூதலிங்கம் பிள்ளையும் வருகிருர்கள்.)*

பூத: வாங்க அத்தான் வாங்க. நீங்கள்ளாம் டவுண் சைடுக்காரரு. சாப்பாடு சாப்பிடுத வேளை. உங்க தங்கச்சி என்னுன்னு, இப்பதான் காப்பி பலகாரம் பரிமாறுதா!

*(இருவரும் கைகால் அலம்பிவிட்டு வருகிருர்கள்)*

சபா: வார போற இடத்திலே அதையெல்லாம் கவனிச்சா முடியுமா, மாப்ளெ.

பூத: (இலையில் அமர்ந்தவாறே) அதுதானே. நீங்க வாரதே இல்லெ. அப்படியே தப்பித்தவறி இங்'னெக் கூடி வந்தாக் கூட, ஓட்டல்'லெ சாப்பிட்டுப் போயிருதிய.

சபா: (இலை முன் அமர்ந்து) என்ன மாப்ளே! என்னைக்கோ ஒரு நா அப்படி நடந்தா...

பூத: உங்களைச் சொல்லக் குத்தமில்லெ, அத்தான்! இங்கே தங்கச்சியும் தங்கச்சி புருசனும் குடியும் குடித்தனமுமா இருக்காகளேன்னு நினைப்பு இருக்கா? என்னமோ எங்களை யெல்லாம் ஏதோ ஆகாத சாதியாத் தள்ளி வச்சிட்டீஹ.

வடிவு: (குறுக்கிட்டு) சதிசதி, தோசை ஆறுது, சாப்பிடுங்க.

பூத: அத்தான்! உங்களைச் சாப்பிடச் சொல்லவே பயமா யிருக்கு.

சபா: அதென்ன மாப்ளெ?

பூத: இல்லெ. நம்ம வீட்டுச் சாப்பாடு உங்களுக்குப் புடிக்குதோ என்னமோ? அப்படியே சாப்பிட்டா லும் இலேக்கடியிலே அரை ரூபாயை வச்சிட்டுப் போயிருவீஹ! (சிரித்துவிட்டுக் குரலை மாற்றி) நாங்க என்ன கிளப்புக் கடையா நடத்துதோம்? இல்லெ—கேக்கேன்?

சபா: (சிரித்துக் கொண்டே) என்னவே மச்சினப் புள்ளே! என்ன பிரமாதமாக் கதை அளக்கிறிய? நான் எப்ப அப்படி வச்சிட்டுப் போனேன்?

வடிவு: (கணவனிடம்) நீங்க ஏன் இப்படிப் பேசுதீக? அருணாவரத்துச் சின்னியாதான் அப்படிப் பண்ணிருகன்னு, அண்ணாச்சியுமா பண்ணுவாஹ?

பூத: (சாப்பிட்டுக் கொண்டே) எல்லாம் ஊரு ஒண்ணு தானே. இவுக காசை இலேக்கடியிலே வைக்காட்டி, ஓம் புள்ளே கையிலே குடுத்துட்டுப் போவாக. போன தடவை நம்ம முருகையா கையிலே இவுக ஒத்தை ரூபாயைக் குடுத்துட்டுப் போனாகளே, அது எதுக்கு?

சபா: ஏதோ ஆசைப் பாட்டுக்குக் கொடுத்தா—

பூத: ஆசைப் பாடு என்ன? உங்க. ஊரு வளக்கம்! இல்லெ—அந்த ஒத்தை ரூவாயைக் கொடுத் தாக்'லெ எல்லாம் சரியாப் போயிடுமா?

வடிவு: சதிசதி, வாயை மூடுங்க. பேசாமல் சாப் பிடுங்க...என்ன அண்ணுச்சி? இன்ஞெரு தோசை...

[வடிவு பரிமாற முனைகிருள்.]

சபா: (கையிஞல் தடுத்துக் கொண்டே) வேண்டாம். வடிவு.

பூத: (குறுக்கிட்டு) என்னளா! இன்ஞெரு தோசையா? இங்கே முதல்லெ போட்ட தோசையையே திங்க முடியாம, மனுசன் திணறிக்கிட்டு வாரான். இன் ஞெரு தோசையாமில்லெ; இனிமே தொண்டைக் குழியிலே உலக்கைக் கொழுந்தை வச்சி இடிக்க வேண்டியதுதான்.

வடிவு: நல்லாத்தான் பேசுதிய! உங்களுக்கு அன்ன தோசமோ, என்னமோ? இப்ப வரவர உங்களுக்கு ஒண்ணுமே இறங்கக்காணம். அண்ணுச்சிக்குப் பசியிராதா?

பூத: (சலிப்புடன்) போடு போடு, நாங்க என்ன மாடா, மனுசஞ? எத்தனை தோசைதான் திங்கது?

வடிவு: நீங்க திங்காட்டி?

[வடிவு தோசையைச் சபாபதியா பிள்ளையின் இலை யில் போடுகிருள்.]

பூத: அத்தான்! வேணுமின்ஞு கூச்சப்படாம, கேட்டு வாங்கிச் சாப்பிடுங்க. மச்சினப்புள்ளெ என்னமோ ஏதோ சொல்தானேன்னு வெட்கப்படாதிங்க. வீஞ வாங்கி இலையிலே போட்டிறக் கூடாதேயின்னு தான்......

சபா: மாப்ளே! தோசை ரொம்ப நல்லாயிருக்கு!

வடிவு: நம்ம கன்னடியன் கால் நாத்தங்கால்'லெ விளைஞ்ச அரிசியில்லெ. பூவா இருக்குமே!

சபா: ஆமா, ஆமா!

பூத: பூவா யிருக்குன்னு நீதான் சொல்லணும்; ஒங்கண்ணுச்சி தான் மெச்சிக்கிடணும். ஒரு முளகாப்பொடி இடிச்சி வையிளான்னு, அதுக்கு உனக்குத் தொலெயலெ! பழங்கறி வச்சிருக்காள்'லெ பழங்கறி!

சபா: முளகாப் பொடியைவிடப் பழங்கறிதானே மாப்ளெ நல்லாயிருக்கும்!

பூத: உங்க நாக்கு என்ன நாக்கோ தெரியலே. அத்தான்! முளகாப் பொடிக்கு வருமா?

வடிவு: இன்னொரு தோசை போடட்டுமா, அண்ணுச்சி?

பூத: ஏளா, மத்தியானச் சாப்பாட்டையும் இதிலியே தள்ளிறலாம்னு பார்க்கியா? அத்தான்! எந்திரிங்க, ம்...எந்திரிங்க.

(சபாபதியா பிள்ளையின் கையைப் பிடித்துத் தூக்கி விடுகிறார் பூதலிங்கம் பிள்ளை. சபாபதியாபிள்ளை இலையைப் பார்த்தவாறே கை கழுவச் செல்கிறார்.)

## காட்சி—4

(பிள்ளையவர்கள் வீடு. இரவு மணி பத்துக்கு மேலிருக்கும். கூடத்துத் தாரிசாவில் இருள் கவிந்து நிற்கிறது. தூரத்தில் சொப்பனம் கண்டெழுந்த தெரு நாய் ஒன்று ஒற்றைத் தனிக்குரலில் ஊளையிடுகிறது. இருட்டில் வெளிவாசல் கதவு தட்டும் ஓசை கேட்கிறது.)

சபா : (வெளியிலிருந்து) மாப்ளே, மாப்ளேய்!

[கதவு தட்டும் ஓசை கேட்டுக் கூடத்தில் படுத்திருந்த பூதலிங்கம் பிள்ளை விழித்தெழுகிறார்.]

பூத : அதாரது? இன்னேரத்திலே போட்டு, கதவை லொட்டு லொட்டுன்னு இடிச்சிக்கிட்டு!

வடிவு : (எழுந்து) வேறெ யாரு? அண்ணாச்சியாத்தா னிருக்கும். எந்திரிச்சி தாப்பாளைத் தள்ளுங்க.

பூத : (உரத்த குரலில்) அடடே! அத்தானா? கொஞ்சம் நில்லுங்க. ஏளா வடிவு, அந்தக் கோழி முட்டை விளக்கைக் கொஞ்சம் தூண்டு.

சபா : (வெளியிலிருந்து) மாப்ளேய்!

(கதவு தட்டும் ஓசை. வடிவு விளக்கை ஏற்றுகிறாள்.)

பூத : வந்துகிட்டே யிருக்கேன் அத்தான்!

(எழுந்து சென்று நாதாங்கியைத் தள்ளுகிறார். சபாபதியா பிள்ளையுடன் வருகிறார்.)

இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீங்க? எங்கே சொல்லாமக் கொள்ளாமல் போயிட்டியளோன்னு நினைச்சேன்!

சபா : அப்படியெல்லாம் போவனா மாப்ளே. மேலக் கொட்டாகியிலே படம் பார்க்கப் போனேன்.

பூத : என்ன படம்?

சபா : என்ன எழவோ படம்! அறுத்தவர்களுக்குக் கல்யாணம் செஞ்சி வைக்கிற படம்! படமா, அது?

பூத : சதி சதி. உள்ளே வாங்க. ஆளைக் காணமே யின்னு இப்பதான் தலையைச் சித்தே சாச்சேன்! (மனைவியிடம்) ஏளா வடிவு! அத்தானுக்கு ஒரு பாயும் தலகாணியும் எடுத்துப் போடு. அவு ஹள்

ளாம் இந்நேரம் வரையிலேசாப்பிடாமலா இருப் பாஹ? வார வழியிலே பிரமநாயகம் பிள்ளை கடை இட்டலியை ஒரு கை பார்த்துப்பிட்டுத்தான் வந் திருப்பாஹ!

சபா : (பதறிப்போய்) சாப்பிடறதாவது? உங்க ஊரிலே தான் எட்டு மணிக்கே கடையை இழுத்துப் பூட் டிட்டுப் போயிடுதாங்களே, எங்கே சாப்பிட? உங்க ஆவலாதிக்குப் பயந்தே—

பூத : (குறுக்கிட்டு) அடேயப்பா! ரொம்பப் பயந்த வுஹ! மச்சினப்புள்ளே என்னமும் நினைச்சிக்கிடக் கூடாதே யின்னு இப்படிச் சொல்லுதியளாக் கும்!

சபா : இல்லே யில்லே!

பூத : அட, பாவமே! அப்படியா விஷயம்? இவ்வளவு நேரமாகக் காணலியேன்னு இப்பதான் சோத்துக் குத் தண்ணி ஊத்தச் சொன்னேன், ச்...ச்... சூ.

வடிவு : அதுக்கென்ன? சோத்தைப் புளிஞ்சி வச்சாப் போவுது. வென்னிப் பளயதுதானே!

பூத : நல்லாச் சொன்னே, போ. அத்தானுவது, வென் னிப் பளயதைச் சாப்பிடறதாவது? நீ பாட்டுக்கு வாயை வச்சிக்கிட்டுச் சும்மா கிட'ளா!

வடிவு : பிறவு—வெறும் வயத்தோடேயா படுக்கது?

பூத : அதுக்காக? இந்தப் பனிநேரத்திலே பளயதைத் தின்னுட்டு உடம்புக்கு ஒண்ணுல்லாட்டா ஒண்ணு வந்து தொலேக்கவா? நீ பாயை எடுத்துப் போடு'ளா.

(வடிவு பாயை விரிக்கிருள்,)

சபா : மாப்ளே!

பூத : அத்தான். எல்லாம் காலையிலே பேசிக்கிடலாம். தூக்கம் கண்ணைச் சுத்துது! (கொட்டாவி விடுகிறார்) அப்பனே, முருகா, ஆண்டவர், ஞான பண்டிதா!

*(மீண்டும் கொட்டாவி விட்டவாறே தலையைச் சாய்கிறார்)*

வடிவு : என்ன, நீங்க பாட்டுக்குப் படுக்கிய?

பூத : ஏளா, விளக்கை அணைச்சிட்டுப்படு. அண்ணாச்சி சாப்பிடலை யேன்னு கவலையாயிருக்காக்கும்! வெருவாக் கெட்ட மூதி! அந்தக் கூறு இருந்தா கொஞ்சம் சோத்தை எடுத்து வச்சிருக்க மாட்டியா! இப்ப அண்ணாச்சின்னா முடியுமா, தம்பின்னா முடியுமா?

*(கையால் எட்டி விளக்கை அணைக்கிறார்.)*

சபா : மாப்ளே! வந்து...

பூத : தூங்குங்க அத்தான்! சாமக்கோழி கூவுது?

*(சில விநாடிகளில் பூதலிங்கம் பிள்ளையின் குறட்டை ஒலி இருளைப் பிளந்து கொர கொரக்கிறது.)*

## காட்சி—5

*(பிள்ளையவர்களின் வீடு. வெளியே சென்றிருந்த சபாபதியா பிள்ளை திரும்ப வருகிறார். அவர் கையில் ஒரு துணிமூட்டை; அதனுள் இருக்கும் ஓலைப் பெட்டி சரசரக்கிறது. கூடத்தில் பூதலிங்கம் பிள்ளையும் வடிவும் இருக்கிறார்கள்.)*

சபா : (உள்ளே வந்ததும்) மாப்ளே! அப்ப நான் இன்னிக்குப் பதினொண்ணரை மணி வண்டிக்கே புறப்படலாமின்னு இருக்கேன்.

வடிவு : என்ன அண்ணாச்சி? ரெண்டு நா இருந்து போனா என்ன?

சபா : எங்கே இருக்கது ? ஊரிலே சோலி கிடக்கு ?

பூத : ஆமாமா. பல சோலிக்காரரு. இருந்தாலும் வந்த வுஹ அதுக்குள்ளேயே—...ஆ௵, சோலியிருந்தாப் போகாம முடியுமா? இல்லெ. போறவுஹளைக் கையைப் பிடிச்சி நிறுத்த முடியுமா? (கையிலிருக்கும் மூட்டையைப் பார்த்து) அதென்னது? மறைச்சி மறைச்சி எடுக்கியளே ; ங்!...

(சபாபதியா பிள்ளை வேறு விதியின்றி ஓலைப் பெட்டியை வெளியே எடுக்கிருர்.)

சபா : (மெல்லத்தயங்கி) இல்லெ. பசார்ப் பக்கம் போயிருந்தேன். ஊரிலே புள்ளை குட்டிகள்ளாம்-...

பூத : (குறுக்கிட்டு) ஊரிலே என்ன? எல்லாம் எனக்குத் தெரியும், அத்தான்! இதை ஏம் போட்டு வாங்கியாந்தீஹ? (மனைவியிடம்) ஏளா, வடிவு! பார்த்தியா, உங்க அண்ணுச்சி செஞ்சிக்கிற காரியத்தை? போன தடவை புள்ளை கையிலே ரூவாயைத் திணிச்சாக, இந்தத் தடவை என்னுன்னு மிட்டாசிப் பெட்டி வாங்கியாந்திட்டாஹ!

சபா : (திகைத்து) ஏன் ? நீங்க திங்க மாட்டியளோ?

பூத : திங்காம என்ன? வாங்கியாந்ததைத் தூரவா போடுவாஹ? இல்லே—ஒரு சொல்லுக்குச் சொன்னேன். இப்படி வருவானேன், பிறவு, இப்படி வாங்கிக் கொடுப்பானேன்? ங்!...

வடிவு : அண்ணுச்சி! அவுஹ அத்தாஞச் சேன்னு அப்படிச் சொல்லுதாக. அவுஹள்ட்டெ போயி வாயைக் குடுக்கியளே!

பூத : சதி சதி, வடிவு! அதை வாங்கிக்க, வேண்டாமின்னாலும் பொல்லாப்பு. அவுஹ யாரு. நம்ம

யாரு? அவுஹ சொத்து நம்ம சொத்து? நம்ம சொத்து...... எல்லாம் ஒண்ணுக்குள்ளே ஒண்ணு தான்!

(சபாபதியா பிள்ளை வேறு வழியின்றி மிட்டாய்ப் பெட்டியை வடிவிடம் தூக்கிக் கொடுக்கிறார்.)

சபா: சதி, மாப்ளே, நான் புறப்படுறேன். வாரேன் வடிவு!

வடிவு: அடிக்கடி கடுதாசி போடுங்க அண்ணாச்சி. மதனிக்கு வாரதுதானே மாசம்?

சபா: அபபடித்தான் தெரியுது. மாப்ளே, வரட்டுமா?

பூத: சதி, செய்யுங்க.

(சபாபதியா பிள்ளை புறப்படுகிறார்.)

வடிவு: சகுனம் பாத்துப் போங்க அண்ணாச்சி.

சபா: ஆகட்டும்மா.

(சபாபதியா பிள்ளை வெளிச் செல்கிறார். அவர் சென்றதைத் தொடர்ந்து மேல வீட்டுத் தம்பி சுப்பையா வந்து சேர்கிறான்,)

சுப்: (உள்ளே வந்துகொண்டே) அண்ணாச்சி!

பூத: யாரு? சுப்பையாவா? வா வா.

சுப்: என்ன—? மாப்ளே வந்துட்டுப் போராக போலிருக்கு!

பூத: ஆமாமா, ஒருநா விட்டா ஒருநா இங்கே யாராவது தொயங்கட்டிக் கிட்டுத்தானே வாராஹ. ஒம் மதினிக்கு இப்பிடி யாராவது வந்து வாணளே வாங்கலேன்னுத்தான் மோரை தொங்கிப்போவுதே தொங்கி!

வடிவு : (செல்லக் கோபத்துடன்) உங்க திருவாயை வச்சிக்கிட்டுச் சும்மா இருங்க. உங்களுக்குச் சொந்தமும் தெரியலெ; அசலும் தெரியலெ. உங்க வாய்க்குப் பயந்துதான் அண்ணுச்சி அதுக் குள்ளே புறப்பட்டுட்டாஹ! இல்லேண்ணு—

பூத : வாயுள்ள பிள்ளெ தாம்'ளா இந்தக் காலத்திலே புழைக்கும்! தெரிஞ்சிதா?

(வெளியே காகம் கரையும் சத்தம் கேட்கிறது.)

வடிவு : பாத்தியளா? இன்னிக்கிக்கூட, காக்கா கத்துது.

சுப் : ஆமண்ணுச்சி, நேத்து நாம படிக்கலெ? போற விருந்து போனு, வார விருந்து...

வடிவு : ஆமா...இன்னிக்கி யாரு வருவா? (யோசிக் கிறுள்.)

பூத : (எரிச்சலுடன்) சின்னக் கிளவன் வருவான்! விரட்டு'ளா காக்காயை! காலம் கிடக்கிற கிடை யிலே...!

—திரை—

—1949

# பெண்ணாய்ப் பிறந்தால்—

**பாத்திரங்கள் :**

| | | |
|---|---|---|
| சங்கர் | — | |
| சங்கரின் மனைவி | — | கௌரி |
| சங்கரின் நண்பன் | — | மணி |
| கௌரியின் தந்தை | — | அருணாசலம் |
| கௌரியின் தாய் | — | தங்கம் |

## காட்சி—1

(சங்கரின் வீட்டில், சங்கரும் அவன் மனைவி கௌரியும் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் பேச்சு நிகழ்கிறது.)

**சங்கர் :** இந்தப் பெண்களே இப்படித்தான்!

**கௌரி :** எப்படி?

**சங் :** ஒரு ராஜகுமாரி இருந்தாளாம். அவளை ஒரு ராஜகுமாரன் கட்டிக்கொண்டு போனானும். போய், அவன் அவளுக்காக ஒதுக்கி வைத்திருந்த அந்தப் புரத்தைக் காட்டினானும். உடனே அவள் சொன்னாளாம்...

**கௌரி :** என்ன சொன்னாள்?

சங் : அரண்மனையா இது? எங்க அப்பாவிடம் வேலை பார்க்கும் வேலைக்காரன் வீடுகூட நல்லாயிருக்கும், அப்படின்னுளாம். அதுதான் சொன்னேன்!

கௌரி : அப்பாவுக்கு ஏன் காயிதம் போடலேன்னு கேட்டதுக்கு, இத்தனை கதையை யார் கேட்டா?

சங் : பின்னே—? 'ஊரிலே திருவிழா, வந்துட்டுப் போ'ன்னு உனக்கு எழுதினுங்களா? இல்லை எனக்கா ?

கௌரி : யாருக்கு எழுதின என்ன ? நீங்க வேறு நான் வேரு ?

சங் : உங்க அப்பா வீட்டைப் பொறுத்தவரை நீ வேறு நான் வேறுதான்.

கௌரி : இந்த ஆண்களே இப்படித்தான்.

சங் : இப்படின்ன எப்படி ?

கௌரி : மாமனுர் வீட்டைக் குறைச்சிக் குறைச்சிப் பேசறது !

சங் : உள்ளதைச் சொன்னல் உனக்கேன் எரியுது?

கௌரி : உள்ளத்தை என்ன கண்டுட்டீங்க ?

சங் : இல்லெ. உங்க அப்பா மருமகனை வச்சிருக்கும் வரிசையைத்தான். தீபாவளிக்கு ஒரு வைர மோதிரம் உண்டா? அதுதான் போகட்டும். ஒரு ரிஸ்ட் வாட்ச்தான் உண்டா? என்னமோ எங்க வீட்டு மருமகனும் தீபாவளிக்கு வந்துட்டுப் போனுர் – அப்படீங்கிறதுக்கா?

கௌரி : வருஷம் ரெண்டாச்சு, இன்னம் அதை மறக்கலையா? என்னமோ அப்பாவுக்கு அந்த வருஷம் அறுவடை ஒண்ணும் சரியாயில்லெ. இல்லேன்ன ..—

சங் : இல்லேன்னு, அறுத்துப்பிடுவார் அறுத்து !

கௌரி : இதோ பாருங்க. நீங்க இப்படி எப்போப் பார்த்தாலும் எங்க அப்பா அம்மாவைக் குறைச்சிப் பேசறது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலெ. மட்டு மரியாதை இல்லாம ..

சங் ; யாருக்கு இல்லே ? எனக்கா, உங்க அப்பாவுக்கா ?

கௌரி : எங்க அப்பாவுக்கு என்ன ? அவங்க பேரைச் சொன்னு, ஊரே நடுங்குமே.

சங் ; ஏன், அத்தனை துஷ்டரோ ?

கௌரி : உங்க துஷ்டத்தனத்துக்கு அப்பா ஒண்ணும் கூட்டாளியில்லெ. அவங்க மரியாதை அவங்களோடே. அது யாருக்கு வரும் ? எங்க வீட்டுச் சீரும் சிறப்பும் ஊரறிஞ்சது, அது நீங்க சொல்லியா மாறப்போவுது ?

சங் : (கோபத்துடன்) கௌரி, நானும் பார்த்துக் கிட்டே வர்ரேன். நீ எப்போப் பார்த்தாலும் உங்க வீட்டைப் பத்தியே புராணம் பாடிக்கிட்டே வர்ரது எனக்குக் கொஞ்சம்கூடப் புடிக்கலெ.

கௌரி : நீங்கமட்டும் தினம் தினம் அப்பா மேலே வசை பாடலாம் போலிருக்கு !

சங் : அது என்னிஷ்டம்.

கௌரி : இதுவும் என்னிஷ்டம் !

சங் : இங்கே உன்னிஷ்டத்துக்கு ஒன்றும் நடக்காது தெரியுமா ? இது என் வீடு, நீ என் மனைவி !

கௌரி : இல்லேன்னு யாராவது சொன்னுங்களா ?

சங் : அப்படின்னு, இனி நீ உங்க வீட்டைப்பத்தி என் னிடம் பேசவே கூடாது !

கௌரி: நல்லாயிருக்கே உங்க பேச்சு! என்னைப் பெத்து வளர்த்த அப்பா அம்மாவைப் பத்திப் பேசாமல், பின்னே யாரைப் பத்திப் பேசறதாம்?

சங்: பெத்து வளர்த்து விட்டாலும், இன்னிக்கி நீ எனக்கு வாழ்க்கைப்பட்டவள். அது ஞாபகமிருக்கட்டும்.

கௌரி: தாலி கழுத்திலே விழுந்து விட்டால், உடனே தகப்பன் வீட்டை அடியோடே மறந்திடணுமோ? அது முடியாது.

சங்: முடியலேன்னு, நீயும் இங்கே இருக்க முடியாது!

கௌரி: ரொம்ப நல்லதாப் போச்சு! நான் எங்க வீட்டுக்குப் போய் சௌக்கியமா இருக்கேன்.

சங்: உங்க வீட்டுச் சௌகரியத்தை நீ தான் மெச்சிக்கிடணும்.

கௌரி: இந்தா பாருங்க, பழையபடியும் எங்க வீட்டைப் பத்தி இழிவாப் பேசினு—?

சங்: பேசினு என்ன?

கௌரி: என்னுல் ஒரு க்ஷணம் இங்கே இருக்க முடியாது.

சங்: போயேன்!

கௌரி: விளையாட்டில்லையே!

சங்: விளையாடறதுக்கும் சமயம் உண்டு, கௌரி. இப்போ நீ தான் சமயம் தெரியாமல் விளையாடுகிருய்!

கௌரி: உங்களோடு தானே!

சங்: அதனுல்தான் சொல்கிறேன். உன் வீட்டைப் பத்தி நீ பெருமை யடிக்கிறதைக் கேட்க என்னுல் சகிக்கலெ.

கௌரி : பெண்ணுப் பிறந்தாலே...

சங் : பெண்ணுப் பிறந்தாலே பிறந்த வீட்டைப் பத்தித் தினம் தினம் பிலாக்கணம் வச்சாகணும், அப்படித் தானே !

கௌரி : இன்னிக்கு நீங்க ஏன் இப்படிக் கரிச்சிக் கொட்றீங்க? இப்போதே நீங்க பேச்சை நிறுத்த லேன்னு, நான் அம்மா வீட்டுக்கு இன்னிக்கே கிளம்பிடுவேன். நிஜம்மா !...

சங் : கௌரி, சும்மா விரட்டாதே. பெண்டாட்டிக்கும் பெண் கொடுத்த மாமனுருக்கும் பயந்து நான் ஒண் ணும் என் வாயைப் பூட்டி ஸீல் வைக்கமாட்டேன். தெரிஞ்சிக்கோ.

கௌரி : உங்களுக்குப் பயந்து நானும் எங்க குடும்பத் துச் சீரையும் சிறப்பையும் ஒளிச்சிச் சொல்ல மாட் டேன். தெரிஞ்சிக்குங்கோ.

சங் : (கோபம் கொப்பளிக்க) கௌரி!

கௌரி : (சிறிது மௌனம்)

சங் : இனிமே இந்தப் பேச்சை எடுத்தே—

கௌரி : அப்படி யெல்லாம் என்றால் இருக்க முடியாது. இன்னிக்கே என்னை ஊருக்கு அனுப்பிடுங்கோ.

சங் : மகராஜியாப்போ. இங்கே யாரும் உன்னைக் கையைப் பிடித்து நிறுத்தத் தயாரில்லே.

கௌரி : நானும் இருக்கலே.

சங் : போ போ.

கௌரி : நீங்கதான் பழைய படியும்...

சங் : போறியா, இல்லையா ?

(கௌரி விசுக்கென்று எழுந்து உள்ளே போகிறாள்)

(தனக்குள்) அப்பப்பா! கேட்கவே நாராசமா யிருக்கு. எப்போப் பார்த்தாலும் அப்பாவுக்கு வருமா, அம்மாவுக்கு வருமா? ஊருக்குப் போறா ளாம். போறாப் போகட்டும். கொஞ்சநாளாவது நிம்மதியாயிருக்கலாம்!

காட்சி—2

(கௌரியின் பெற்றோர் வீடு. கௌரியின் தாயும் தந்தையும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

அருணாசலம்: இருந்திருந்து நல்ல இடம் பார்த்துப் பெண்ணைக் கொடுத்தோம். தலைத்தீபாவளிக் கோபம் எத்தனை தீபாவளிக்கு? சுகக்ஷேமத்துக் காவது ஒரு கடுதாசி உண்டா?

தங்கம்: வீணா அவங்களை ஏன் குறைச்சிப் பேசறீங்க? எங்கே இருந்தாலும் நல்ல படியா, ஒரு காய்ச்சல் மண்டையிடின்னு இல்லாமே, கண்ணைக் கசக் காமே இருந்தாச் சரிதான்.

அருணா: இந்தப் பெண்களே இப்படித்தான். பெத்த மகனைவிட., மகள் மேலே பிரியம்; மகளைவிட மருமகன் மேலே பிரியம்.

தங்: என்னமோ அவங்க சுகமாயிருந்தாத்தானே அவளும் சுகமாயிருப்பாள்.

அருணா: எப்படியிருக்காளோ, யார் கண்டா? என் னமோ நாலு எழுத்துப்படிச்சவனேன்னு கொடுத் தோம். மற்றபடி பூஸ்திதியா, நிலங்கரையா உண்டா? இதிலே அவருக்கு நம்மமேலே கோபம். மாமனாரின்னா, காசாக் காய்ச்சிக் கொட்டற மரம்னு நினைப்பு போலிருக்கு!

தங் : தலைவலியும் திருகுவலியும் தனக்கு வந்தாத் தெரியும். அந்தக் காலத்திலே நீங்க எங்க அப்பா மேலே கரிச்சிக் கொட்டினது எனக்கில்லெ தெரியும். என்னமோ எங்க அப்பா உங்களைப் போல அடாபிடி ஆளில்லாததாலே, எல்லாத்தையும் பொறுத்துக் கிட்டிப் போனுங்க.

அருணு : உங்க அப்பா செஞ்ச மரியாதையை நினைச்சா, இன்னிக்கும் என் மனசு ஒரு மாதிரியாத்தானிருக்கு.

தங் : ஒரு மாதிரியாவும் இருக்கும், ஒன்பது மாதிரியாவும் இருக்கும். என்னமோ எங்க வீட்டுச் சிறப்புக்கும் செல்வத்துக்கும் நான் மட்டும் பொண்ணுப் புறக்காம, புள்ளயாய்ப்பிறந்திருந்தா......

அருணு : பிள்ளையாய்ப் பிறந்திருந்தா, உங்க அப்பா வச்சிட்டுப் போன அத்தனை குட்டிச்சுவரையும் கட்டி ஆளலாம்... பைத்தியம் !

தங் : பைத்தியம்தான். பேரன் பேத்திதான் எடுக்கட்டுமே, இந்தப் பிறந்த வீட்டுப் பைத்தியம் எங்களை விட்டுப் போகவா போறது ?

அருணு : உனக்குத்தானே. உன் மகளுக்குக் கொஞ்சமேனும் இருக்கா ?

தங் : இல்லாமே எங்கே போகும் ?

(இந்த நேரத்தில் திடீரென்று கௌரி உள்ளே வருகிறுள்.)

கௌரி : அம்மா!... அப்பா !

தங் : (எழுந்து மகளைவரவேற்று) கௌரியா ? வாம்மா வா. ஏது, வாரதாக ஒரு கடிதம்கூடப் போடலியே?

கௌரி : நேரம் கிடைக்கலே. அவங்களுக்கு ஒரே வேலை. இல்லேன்னு அவங்க கூட வந்திருப்பாங்க. அதனாலே என்னை மட்டும் திருவிழாவுக்கு அனுப் பிச்சாங்க... அப்பா ! உங்க உடம்பு தேவலையா ?

தங் : அப்பாவுக் கென்ன ? எப்பவும் போலத்தான் இருக்காங்க. சரி உன் மாப்பிள்ளை சவுக்கியமா ?

கௌரி : சௌக்கியம்தான்.

அருணு : மாப்பிள்ளை சௌக்கியத்தை மகளைப் பார்த்த வுடனே தெரியலையா ? என்ன கௌரி, ஏன் இப் படி மெலிஞ்சிருக்கே ?

கௌரி : மெலிஞ்சிருக்கேனு ?

அருணு : ஆமாம், கௌரி. அது எனக்கில்லெ தெரியும். என்னமோ தெரியாத்தனம்மா உன்னை அங்கே கட்டிக் கொடுத்துட்டேன்.

தங் : கட்டிக் கொடுத்ததிலே என்ன குறைஞ்சி போச் சாம் ?

அருணு : குறைவு என்ன ? கொஞ்சம் சீரும் சிறப்பு மான இடத்தில் கட்டிக்கொடுத்திருந்தா......ஹூம் ......

கௌரி : ஏம்ப்பா !...உங்க கோபம் இன்னம் போக லையா ?

அருணு : போகாம என்ன ? இல்லெ, கொஞ்சம் நல்ல இடமா இருந்தா ...

தங் : நடந்து போனதைப் பத்தி இப்போ என்ன பேச்சு?

கௌரி : அப்பா, சாகிறபோது சொத்தும் சுகமுமா கூட வரப்போவுது ?

அருணு : கௌரி. உன்னை நான் வாழத்தான் அனுப்பி னேனே தவிர, சாக அனுப்பலே.

கௌரி : இப்போ என் வாழ்க்கைக்கு என்ன குறைவு ?

அருணு : உன் குறைதான் உடம்பிலேயே தெரியுதே. ஒரு நல்ல சாப்பாடு உண்டா ? ஒரு நல்ல துணி மணி நகை நட்டுதான் உண்டா? என்னமோ போக்கத்துப் போயி, வக்கத்தவனுக்குக் கட்டிக் கொடுத்த கதையாப் போச்சி.

கௌரி : அப்பா, இதோ பாருங்க. என்னைப்பத்தி ஆயிரம் சொல்லுங்க. பெத்த பிள்ளை. கேட்டுக்கறேன். ஆனு,—அவங்களைப்பத்தி ஒரு சுடு சொல் சொன்னுலும் என்னுல் தாங்க முடியாது.

அருணு : உன்னை எதுக்கம்மா சொல்லப்போறேன். உன் விதியைத்தான் நொந்துக்கிறேன்.

தங் : நல்ல நாளும் கிழமையுமா லக்ஷ்மிபோலே வந்து இறங்கியிருக்கா, அவளிடம் போய் வகை தொகை தெரியாமல் வாய் கொடுக்கிறீங்களே, உங்க வாயைச் சித்தே மூடுங்க.

அருணு : தங்கம், நீ என்ன வேணுமானுலும் சொல்லு என் மனசு...

தங் : உங்க மனசு எனக்குத் தெரியும். இம்போ நிறுத்துங்க. கௌரி வாம்மா.முதல்லே குளிச்சிட்டு வா.

அருணு : போங்க போங்க. தாயும் மகளுமா, மருமகப் பிள்ளையோடே பெருமையைத் தாளிச்சிக் கொட்டுங்க.

தங் : சரி சரி. பொண்ணுப் புறந்தா அப்படித்தான். உங்களைக் குறைச்சி யாராவது பேசினு எனக்குப் பொறுக்குதா ? அன்னைக்கி மேல வீட்டு அண்ணுச்சி வந்து, சுப்பம்மா அக்காவிடம்...

அருணு : சரி சரி, நீ உடனே கதை படிக்க ஆரம்பிக்காதே. இங்கே எனக்கு வயிறு காயுது. சீக்கிரம் ஆகட்டும்.

(கௌரியும் தங்கமும் வீட்டினுள் செல்கிறார்கள்)

## காட்சி—3

[சங்கரும் அவன் நண்பன் மணியும் வீதியில் சந்திக்கிறார்கள்.]

மணி : சங்கர். ஏண்டா, இன்னம் ஹோட்டல் சாப்பாடு தானு ? உன் மனைவி என்ன, பிரசவத்துக்குப் போயிருக்காளா ?

சங் : பிரசவமாவது, ஒண்ணுவது ? என்னமோ போனுள். வரணும்.

மணி : இல்லெ. ரெண்டு மாசம் இருக்கும் போலிருக்கே. அதுதான் கேட்டேன். அப்படின்னு நீ போய் அழைச்சிட்டு வர்ரதுதானே.

சங் : (இழுத்தாற்போல்) போகணும்.

மணி : என்னடா, இழுத்தாற்போல் பேசுகிறாய் ? ஏதாவது......

சங் : தகராறுதான். அவளை நாஞக அனுப்பலே. அவளாகத்தான் போனுள்.

மணி : கோபித்துக் கொண்டா ?

சங் : ஆமாம்.

மணி : நீ கோபித்தாயா, இல்லே, அவளா ?

சங் : நானும் கோபிக்கத்தான் செய்தேன். இல்லாமல் போவாளா ?

மணி : சங்கர், நான் சொல்வதைக் கேள். புருஷன் பெண்ஜாதி சண்டையிலே ஆண்பிள்ளைதான்

முதல்லே கோபிப்பான். இவன் கோபித்தாலே அவள் கோபம் கொப்பில் ஏறிக்கொள்ளும். நம்ம தான் கொஞ்சம் சுதாரிச்சுப் போகணும்.

சங் : சரி சரி, உன்னிடம் நான் தீட்சை பெற வரலே.

மணி : அது சரி. நீங்க ரெண்டு பேரும் அன்னியோன் னியமா இருந்ததைப் பார்த்து எங்களுக்கெல்லாம் ஒரே ஆனந்தமாயிருந்தது. உங்களுக்குள்ளே என்ன சச்சரவு ?

சங் : அபிப்பிராய பேதம்தான்.

மணி : அபிப்பிராய பேதமா ? எதில் ?

சங் : மணி, இதோ பார். நான் கௌரியை எந்த விதத்திலும் குறைத்துச் சொல்லமாட்டேன். ஆனால், அவளிடம் உள்ள ஒரே குறை...

மணி : அதென்ன குறை ?

சங் : ஒண்ணுமில்லே. அவள் எப்போப் பார்த்தாலும் தன் பிறந்த வீட்டைப் பத்தியே பெருமையடிப் பாள். அதைக் கேட்க என்றால் சகிக்கவே முடிவ தில்லே. சண்டைக்கு அதுதான் காரணம்.

மணி : இதைப் போய்க் குறை என்று சொல்லலாமா ? இது பெண்களுக்குள்ள குணம்தானே ?

சங் : நல்ல குணம் வந்தது. கட்டிய புருஷனை விடவா பெத்துப்போட்ட தகப்பன் வந்துட்டார்.

மணி : சங்கர், உனக்கு ஒண்ணுமே புரியலே. நீ நேற்று வந்தவன். அவளை இத்தனை வயசுவரைக்கும் பேணிப் பாதுகாத்து வளர்த்து உருவாக்கிய தாய் தகப்பனைப் பற்றி அவள் பெருமைப் படாமல் இருக்க முடியுமா? அவர்கள் வளர்க்காவிட்டால், உனக்கு கௌரி ஏது?

சங் : நீ என்னை அவள் கட்சியில் இழுத்துவிடப் பார்க்கிறாயா மணி ?

மணி : அது உன்னிஷ்டம். ஆனால் ஒன்றுமட்டும் சொல்கிறேன். பெத்து வளர்த்த பெற்றோருக்கும் பெண் விசுவாசமானவள் ; தொட்டுத் தாலிகட்டிய புருஷனுக்கும் விசுவாசமானவள். எல்லாப் பெண்களும் அப்படித்தானப்பா இருப்பார்கள்.

சங் : இல்லையே, அவள் என்னைப்பற்றி என்னிடமே குறை கூறுகிறாளே.

மணி : அது உன் கண்முன்னால்தானே. அதுவும் பெண்களின் குணம்தான். ஆனால், உன்னைக் கணவனாக அடைந்ததுபற்றி, அவள் உள்ளுக்குள்— ஊருக்குள் எவ்வளவு பெருமையடையக்கூடும் தெரியுமா ?

சங் : அதை யார் கண்டார்கள் ?

மணி : காண முடியாதுதான். அவள் உன்னிடம் உரிமையோடு எதையும் பேசலாம்; குறை கூறலாம். ஆனால் உன்னைப்பற்றி அவளிடம் யாராவது குறை கூறினால் அவள் சும்மா கேட்டுக்கொண்டிருப்பாள் என்கிறாயா ?

சங் : அவள் அம்மாவும் அப்பாவும் என்னைப்பற்றிப் பேசுவதை அவள் கேட்காமலா இருப்பாள் ?

மணி : ஒருக்காலும் இருக்காது.

சங் : அப்படியா சொல்கிறாய் ?

மணி : ஆமாம். முட்டாள்தனமாய், உன் மாமனார் மீதுள்ள கோபத்தையெல்லாம் உன் மனைவிமீது காட்டிக் கொண்டிராதே. நாளை ஞாயிற்றுக் கிழமைதான். ஒருநாள் வழிபோய் அவளைக் கூட்டிக்கொண்டு வா, தெரிந்ததா ?

சங் : மணி, யோசித்துப் பார்த்தால் தவறு என்மேல் தானோ என்று அடிக்கடி சங்கடப்பட்டிருக்கேன். எத்தனையோ தடவை மானம் மரியாதையை விட்டுட்டு, அவளைப்போய் அழைச்சிட்டு வந்திடலாமான்னுகூடத் தோணும், ஆனால் ?

மணி : ஆனாலாவது ? பெண்டாட்டி புருஷன் ரெண்டு பேருக்குள்ளே என்னப்பா மானம் மரியாதை ! அதெல்லாம் இடம் பொருள் ஏவலைப் பொருத்த விஷயம். தெரிந்ததா ?

சங் : மணி நீ சொல்கிறபடியே நான்போய் அவளைக் கூட்டிட்டு வர்ரேன். ஆனால், நீயும் என்கூட வரணும்.

மணி : ஏன், இத்தனை நாள் கழித்துத் தனியாப் போறதுக்குக் கூச்சமாயிருக்கா ? இல்லே, பழியையெல்லாம் என்மேலே போட்டுத் தப்பிக்கலாமின்னு நினைப்பா ?

சங் : எல்லாம்தான். வருகிறாயா இல்லையா ?

மணி : பேஷாய் ! மாப்பிள்ளைத் தோழனாக வருவதில் எனக்கு என்னைக்கும் ஆட்சேபணை இல்லை.

சங் : அப்போ நான் வரட்டுமா ? நாளைக் காலை வண்டிக்கே போகலாம். சரிதானே.

மணி : ரெடி, ரெடி—எவர் ரெடி ! போதுமா ?

[சங்கர் விடைபெற்றுச் செல்கிறான்.]

## காட்சி—4

[கௌரியின் பெற்றோர் வீட்டில் அருணாசலமும் தங்கமும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

அருணா : என்ன தங்கம், கௌரி வந்து மாசம் ரெண்டாச்சே. இன்னும் மாப்பிள்ளையிடமிருந்து ஒரு தகவலும் காணமே. என்ன விஷயம் ?

தங் : கௌரி எல்லாம் சொன்னாள். அவங்க ரெண்டு பேருக்குள்ளே ஏதோ சின்னத் தகராறு. கோபம் ஆறினா தானா வருவாங்க அப்படின்னு ஒருநாள் சொன்னா

அருணா : பார்த்தாயா? நான் சொன்னது சரியாப் போச்சா? அந்த மனுஷன் எப்பவுமே இப்படித் தகராறு பிடிச்ச மனுஷன்தான். ஒரு தகராறா, ரெண்டு தகராறா?

தங் : உங்க மருமகன் இல்லே? பின்னே எப்படி இருப்பாங்க?

அருணா : என்னை ஏன் சொல்றே?

தங் : பின்னே? இங்கே நீங்க அவங்களைக் கரிச்சிக் கொட்றீங்க. அங்கே அவங்க உங்களைக் கரிச்சிக் கொட்றாங்க. இடையிலே கிடந்து இழுபடுவது கௌரி. வேறென்ன?

அருணா : கௌரி அதனாலேயா இங்கே வந்தா? அவள் பேசறதைப் பார்த்தா—?

தங் : அதுக்காகக் கட்டின புருஷனை விட்டுக் கொடுப்பாளா என்ன? மற்றப்படி அவளுக்கு அங்கே ஒரு குறையும் இல்லையாம்.

அருணா : இல்லேன்னு நீ என்னத்தைக் கண்டே? அவள் புருஷனுக்கு வக்காலத்து வாங்கி, ஆயிரம் சொல்வா. அதை யார் நம்புறது?

தங் : அதை யார் நம்பச் சொன்னா? அது அவங்க பாடு.

அருணா : (பெருமூச்சுடன்) கௌரி என்னமாத்தான் அந்த மனுஷனோடே காலம் தள்ளுறாளோ?

[இந்தச் சமயத்தில் கௌரி வெளியிலிருந்து உள்ளே ஓடி வருகிறாள். அவளைத் தொடர்ந்து பின்னால் சங்கரும், மணியும் வருகிறார்கள்.]

கௌரி : (உள்ளே ஓடி வந்து) அம்மா! அவங்க வந்துட்டாங்க.

தங் : உன் மாப்பிள்ளையா? அதாரது? கூட ஒரு புள்ளை யாண்டான்.

கௌரி : அது அவங்க சிநேகிதர்.

சங்கர் : (உள்ளே வந்து மாமாவை நோக்கி) நமஸ்காரம். கௌரியைக் கூட்டிட்டுப் போக வந்தேன்,

அருணு : ஏன், இத்தனை நாள் கண்ணு தெரியலையோ? கூட்டிட்டுப் போக வந்தாராமில்லெ. ஏன்? கூட்டிட்டுப் போயி, திரும்பவும் விறட்டியடிக்கிறதுக்கா?

தங் : ஐயோ, உங்களைத்தானே, ஏன் இப்படிக் கத்துறீங்க? என் தலை விதி.

சங் : அதைப்பத்தி உங்களுக்கு ஒண்ணும் கவலை வேண்டாம். கௌரி என் மனைவி. அவளை அனுப்புறீங்களா, இல்லையா?

அருணு : அவள் என் மகள். அவளை அனுப்புவதும் அனுப்பாததும் என் இஷ்டம். உங்களுக்குக் கட்டிக் கொடுத்து அவள் பட்டது போதும்.

கௌரி : (குறுக்கிட்டு) அப்பா! நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம்!

தங் : ஐயோ! எதுக்கு இந்த வீண் வார்த்தை? உடையவன் வந்தா, மூச்சுப் பேச்சுக் காட்டாமல் பொண்ணை அனுப்பி வைக்கிறதைவிட்டுப்புட்டு... இதென்ன, கடவுளே!

அருணு : தங்கம்! நீ சும்மா இருக்கிறியா, இல்லையா? கௌரி! நீ வீட்டுக்குள்ளே போ!

சங் : மணீ! பார்த்தாயாடா, மரியாதையை!

மணி: (அருணுசலத்திடம்) என்னங்க......என்னமோ சின்னஞ் சிறிசுகள். எப்படியாவது போகட்டும்ணு விடாம, நீங்க என்ன? பெரியவங்க பொறுத்துப் போக வேண்டாமா?

அருணு: பொறுமைக்கும் அளவுண்டு, தெரியுமா? வருகிறவன் போகிறவனிடமெல்லாம் என்னைப்பத்தி அவதூறு பேசிஞ. யாருக்கையா பொறுக்கும்?

சங்: நீங்க மட்டும் என்னவாம்?

அருணு: உன்னிடம் பேசவே நான் தயாரில்லை. வந்த வழியைப் பார்த்துப் போ.

சங்: போகாமல் நிற்கவா போகிறேன், கௌரி—?

அருணு: கௌரியை நான் ஒண்ணும் அனுப்ப முடியாது.

கௌரி: அப்பா! என்னைப்பற்றி நீங்கள் ஒண்ணும் பேச வேண்டாம்.

சங்: கௌரி! நீ வருகிருயா, இல்லையா?

அருணு: கௌரி! உள்ளே போ!

கௌரி: முடியாதப்பா முடியாது! என் கண் முன்னுலேயே என் புருஷனை மரியாதைக் குறைவாகப் பேசும் உங்கள் வீட்டில் இனி என்னுல் ஒரு க்ஷணம் கூட இருக்கமுடியாது. நான் போகிறேன்.

அருணு: கௌரி, உள்ளே போ என்ருல்—

கௌரி: முடியாது அப்பா, என்னை என்ன வேண்டுமானுலும் சொல்லுங்கள். அவங்களைப்பத்தி எதுவும் சொல்ல நான் விடமாட்டேன். அவ்ங்க என் புருஷன்!

அருணு: புருஷன்! அவன் என்ன வானத்திலேயிருந்து குதிச்சவனே?

கௌரி : அவர் நரகத்திலிருந்து வந்தாலும் சரி, அவர் தான் என் சொர்க்கம் !

சங் : கௌரி ! வா புறப்படு.

கௌரி : இதோ வந்துவிட்டேன். [வீட்டினுள் சென்று தன் பெட்டியை எடுத்துக்கொண்டு வந்து சேர் கிறாள்.]

மணி : பெரியவங்களாயிருந்தும் சுமுகமாப் பேசி வழி யனுப்புறதை விட்டுட்டு, வீணா இப்படி விவகாரம் பண்ணினா, யாருக்கு லாபம் ?

அருணா : (எரிச்சலுடன்) அட, போய்யா ! நீங்க வக் காலத்து வாங்கறதுக்குன்னு அங்கேயிருந்து பொட்டணம் கட்டிட்டு வந்தியளாக்கும் !

கௌரி : (தாயை நோக்கி) அம்மா. நான் போயிட்டு வர்ரேன்.

அருணா : வருவானேன் ! போ. போ. அப்படியே போ.

[சங்கர், மணி, கௌரி மூவரும் வெளியேறு கிறார்கள்.]

(அவர்கள் சென்று மறைந்ததும்) நினைச்சாலே எரி யுது ! அந்தப் பயலுக்குத்தான் என்ன திமிரு ? என் நடையேறி வந்து என் மகளையே இழுத்துக் கிட்டுப் போறானே !

தங் : உங்க மனசை நீங்கதான் மெச்சிக்கிடணும். புரு ஷன் வந்து கூப்பிட்டா, பொண்ணை அனுப்புறதை விட்டுட்டு......எதுக்கு இந்தத் தொந்தரவெல்லாம் ?

அருணா : தொந்தரவா ? கடைசியிலே பெத்தவங்களைக் கூட மதிக்காமல் புருஷனே பெரிசுன்னு புறப் பட்டுட்டாளே, அவ—அந்த கௌரி !

தங் : புறப்படாம இருந்தா அவ கதி? அன்னைக்கி உங்களுக்காக அவங்களிடம் பேசி இங்கே வந்தா; இன்னைக்கி அவங்களுக்காக உங்களிடம் பேசி அவங்களோடே புறப்பட்டுட்டா. வேறே விதி?

அருண : இந்தப் பெண்களே இப்படித்தான். புருஷனுக்குத்தான் எப்போதும்—

தங் : இல்லவே இல்லை. பொண்ணுக்குப் புறந்த வீடும் வேணும்; புகுந்த வீடும் வேணும். அதில் எதைக் குறைவாப் பேசினாலும் அவளுக்குத் தாங்காது.

அருண : உனக்கு உங்க வீட்டு வாய் மட்டும் இன்னும் போனபாடில்லை!

தங் : இதோ பாருங்க. என்னைப்பத்தி என்னமும் சொல்லுங்க. எங்க வீட்டைப் பத்திச் சொன்னிங்கன்ன—

அருண : சொல்லலை தாயே; உங்க சுபாவம்தான் தெரிஞ்சி போச்சே!

— திரை —

—1951

# லட்சியமும் நடைமுறையும்

பாத்திரங்கள் :

| | | |
|---|---|---|
| சுந்தரம்<br>ராமசாமி | } | ஆண்கள் |
| செல்லம்<br>ராஜி | } | பெண்கள் |

**காட்சி—1**

*[ராமசாமியும் சுந்தரமும் சந்தித்துப் பேசுகிறார்கள்.]*

சுந்தரம் : என்ன ராமசாமி. ஒரு செய்தி கேள்விப்பட்டேனே, வாஸ்தவம்தானா ?

ராமசாமி : என்ன செய்தி ?

சுந் : எல்லாம் உன்னைப் பற்றித்தான். நீ சீக்கிரமே புது மாப்பிள்ளையாகப் போகிறாயாமே ?

ராம : ஆ...மாம் !

சுந் : என்ன, ஆ—மாம் என்று இழுக்கிறாயே.

ராம : இல்லை, உனக்கு எப்படித் தெரிந்தது ?

சுந் : ஊரில் எத்தனையோ அந்தரத் தபால்கள். ஒரு ஊர்க்குருவி என் காதில் ரகசியமாகச் சொல்லிற்று. தெரிந்ததா ?

ராம: அழைப்பிதழ் அச்சானவுடன் திடீரென்று உன்னிடம் நீட்டி உன்னைத் திகைக்க வைக்க வேண்டும் என்றிருந்தேன்.

சுந்: இப்போது நீ தான் திகைத்துப் போனுய், அப்படித்தானே. சரி, பெண் யார்?

ராம: ஏன், அந்த ஊர்க்குருவி உனக்கு அதை மட்டும் சொல்லாமல் போய்விட்டதா? பெண் யாராயிருந்தால் என்ன? உனக்கு அது தெரியாத வரை நான் உன்னைத் திகைக்க வைக்க முடியுமல்லவா?

சுந்: ஏன், கல்யாண விஷயம் தெரிந்தது போல் அதுவும் இன்றில்லாவிட்டால் நாளை நீ சொல்லாமலே தெரிந்து விட்டுப் போகிறது.

ராம: அழைப்பிதழ் அச்சான பிறகா?

சுந்: உன் குறும்பை யெல்லாம் என்னிடமே காட்டாதே. நான் எதற்காகக் கேட்டேன் என்ருல்?

ராம: எதற்காகக் கேட்டாய்?

சுந்: இல்லை—நீ பெரிய லட்சியவாதி ஆயிற்றே, இந்த லட்சியவாதிக்கேற்ற அந்த லட்சியவதி யாராய் இருக்கும் என்றுதான் கேட்டேன்.

ராம: நீ தான் சொல்லேன் பார்ப்போம்.

சுந்: சரி. எனக்கு ஆருடம் சோசியம் எதுவும் தெரியாது. உன் நவ நாகரிகப் புரட்சி லட்சியத்துக்கு ஆளாகப் போகும் அந்தப் பெண்ணரசி யார்.

ராம: அவளா? அவள் தான் செல்லம்.

சுந்: என்ன, செல்லமா?

ராம: என்ன யோசிக்கிருய்?

சுந் : இல்லை, அவளைப் பார்த்தால் பெரிய கட்டுப் பெட்டி மாதிரி இருக்கிறாளே. அவளை நானும் பார்த்திருக்கிறேன். உன் நாகரிக இலட்சியத்துக்கு அவள் ஒத்து வருவாளா என்ன ?

ராம : ஒத்து வரும்படிச் செய்துவிட்டால் போகிறது. அன்று அவளை நான் நேருக்கு நேர் பார்த்த வுடனே...

சுந் : உன் மனம் அவளிடம் பறிபோய் விட்டதாக்கும்!

ராம : சுந்தரம் கேலி பண்ணாதே. உனக்கு அவளைத் தெரியாது.

சுந் : கேலி பண்ணவில்லையப்பா. ஆனால் ஒரே ஒரு சந்தேகம். அவளிடம் உன் மனம் மட்டும்தான் பறி போயிற்று ? இல்லை—லட்சியமும் பறிபோய் விட்டதா ?

ராம : இதோ பார், சுந்தரம். எனக்குப் படித்த பெண் தான் வேண்டும் ; ஆனால் படித்துவிட்டோம் என்ற மமதையில் வில்லாய் நிமிர்ந்து நடக்கிறாளே'... அவள் வேண்டாம்.

சுந் : ம், அப்புறம் ?

ராம : நாகரிகம் என்று சொல்லிக் கொண்டு நேரத் துக்கு ஒரு உடையும் நிமிஷத்துக்கு ஒரு அலங்கா ரமும் செய்து கொள்ளும் கொலுப் பொம்மையும் எனக்குப் பிடிக்காது.

சுந் : சரி சரி. உன் லட்சியம் தான் எனக்குத் தெரி யுமே. பழையபடியும் 'லெக்ஸர்' அடிக்க ஆரம் பித்து விடாதே. சரி, உன் லட்சியத்தை எப்படி நிறைவேற்றப் போகிறாய் ?

ராம : நடைமுறையில்.

சுந் : அதுதான்—எப்படி ?

ராம : செல்லத்துக்கு நான் சகல சுதந்திரமும் கொடுக்கப் போகிறேன். கணவன் என்றால் தன்னை அடக்கியாளப் பிறந்தவன் என்ற எண்ணத்துக்கே அவளுக்கு இடம் கொடுக்க மாட்டேன். அவரவர் காரியங்களை அவரவர் இஷ்டம் போலவே பார்த்துக் கொள்ள வேண்டும். இப்போது நீயும் நானும் பழகுகிறோமே, அதுமாதிரி நாங்களும் சிநேகிதர்கள் போலவே இருப்போம்.

சுந் : லட்சியம் என்றுமே உயர்ந்ததுதான், ராமசாமி. இருந்தாலும் அது ஒரு மாய மானைப் போன்றது. நடைமுறை வாழ்க்கை அந்த லட்சியத்தின் வேகத்தோடு போட்டி போட்டுக் கொண்டு ஓடமுடியாது.

ராம : நீ என்ன சொல்கிறாய் ?

சுந் : நீ செல்லத்தை மனைவியாகத் தேர்ந்தெடுத்ததற்கு ஆயிரம் சபாஷ் போடுகிறேன். அவளை நான் அறிவேன். நல்ல குணம். அடக்கம், ஒழுக்கம் நிறைந்தவள். பெண்மைக்குரிய குணங்கள் எல்லாம் பெற்றவள். பாரத தேசத்து ஸ்திரீ லட்சியத்துக்கு ஒரு உதாரணம்.

ராம : பரவாயில்லையே. என்னைவிட, நீயே அவளை நன்கு தெரிந்து வைத்திருக்கிறாயே, பின் ஏன் முதலில் அப்படி......

சுந் : அப்படித்தான் ராமசாமி. உன் லட்சியம், தாம்பத்திய வாழ்வு பற்றிய உன் அபிப்பிராயம் எல்லாம் சிறந்ததுதான். இருந்தாலும், பாரத தேசத்துப் பழைய சம்பிரதாயம் பல்லாயிரம் ஆண்டுகளாக நம் பெண்களின் மனத்தில் உரமேறிப் போயிருக்கிறது.

பெண் என்பவள் கணவனின் அடிமையாகத்தான் இருக்க விரும்புகிருள்.

ராம : யாருக்கு யார் அடிமை? நீ என்ன சொல்கிருய்?

சுந் : அடிமை என்பது ஆதிக்கத்துக்கல்ல; அன்புக்குத்தான்! திடீரென்று அவளுக்குச் சுதந்திரமளித்தால் அதைத் தாங்கி நிற்க அவளுக்குச் சக்தியற்றுப் போய் விடும். பகீரதன் கங்கையை வரவழைத்தான் என்ருலும், அதன் வேகத்தைத் தாங்க பரமசிவன் தானே வந்தான். கதை தெரியாதா உனக்கு?

ராம : நன்ருக்த்தான் பேசுகிருய். நீந்தத் தெரியாது என்பதற்காக நீரிலேயே இறங்காமல் இருக்க முடியுமா?

சுந் : வாஸ்தவம். மெதுவாகத்தான் நீந்திப் பழக வேண்டும். திடீரென்று ஆழத்தில் குதித்துவிடக் கூடாது.

ராம : இதோ பார், சுந்தரம். எனக்கு எல்லாம் தெரியும். சரி பஸ்ஸுக்குப் போக வேண்டும். நான் வரட்டுமா?

சுந் : இப்போதே இப்படி ஓடுகிருயே, கல்யாணமாகி விட்டால், ஆளையே காண முடியாதோ?

ராம : அவ்வளவு மோசமாய் நினைக்காதே. சரி. நான் வரட்டுமா?

சுந்: சரி, போய்வா. சீக்கிரமே கல்யாணப் பிராப்திரஸ்து.

(ராமசாமி சிரித்துக் கொண்டே சென்று விடுகிருன்)

## காட்சி—2

[செல்லத்தின் வீட்டில், செல்லமும் செல்லத்தின் தோழி ராஜியும் அந்தரங்கமாகச் சந்தித்துப் பேசுகிறார்கள்.]

**ராஜி :** என்னடி செல்லம். முகூர்த்தம் நிச்சயமானதிலிருந்து யார் கண்ணிலும் படக்கூடாது என்று வைராக்கியமா ? இல்லை, வரப்போகும் புருஷனைப் பற்றி ஆசைக் கனவுகாண ஆரம்பித்து விட்டாயா?

**செல்லம் :** ராஜி, போதுமடி கேலி. எனக்கென்னவோ கல்யாணம் என்றாலே பயமா யிருக்கிறது.

**ராஜி :** அடி அசடு ! கல்யாணமென்றால் சந்தோஷப்படுவார்களா ? நல்ல வேடிக்கைதான்.

**செல் :** சந்தோஷம் இல்லாமலா ? இருந்தாலும் அவர் எப்படிப்பட்டவரோ ? நானோ பழைய பசலி. ஏதோ படிச்சிருக்கேன். அவர் மாதிரி பெரிய படிப்பு ஒன்றும் படிக்கவில்லை.

**ராஜி :** அதைப்பற்றி உனக்கென்ன ? நீ என்ன அவரோடு உத்தியோகமா பார்க்கப் போகிறாய் ? வீடு உண்டு நீ உண்டு என்று இருக்கப் போகிறாய்.

**செல் :** இருந்தாலும்—

**ராஜி :** என்ன, இருந்தாலும் ?

**செல் :** அவரோ நாகரிக மனுஷர். அவர் போக்குக்கு என்னால் ஒத்துப் போக முடியுமோ என்னவோ ? என்னால் இந்த நாகரிகப் பெண்களைப்போலெல்லாம் நடந்துக்கத் தெரியாது. மேலும், அவர் குணம் எப்படிப் பட்டதோ ?

ராஜி : அதைப்பற்றி.யெல்லாம் இப்போதென்ன கவலே? கல்யாணமாகி விட்டால் எல்லாம் சரியாகிவிடும். உன் அழகுக்கு அவர் உன்னைச் சுற்றிச் சுற்றி வந்து கும்பிட மாட்டாரா?

செல் : எனக்கென்னவோ பயமாய்த்தான் இருக்கு. அவரோடு வாழ்க்கை நடத்துவது எப்படியென்று திகைப்பாத்தான் இருக்கு.

ராஜி : செல்லம். இந்தத் திகைப்பெல்லாம் எனக்கும் ஏற்படத்தான் செய்தது. கல்யாணமான பிறகு வாழ்க்கை நடத்துவது ரொம்பச் சுலபம் எல்லாம் அவர் இஷ்டப்படியே விட்டு விட்டு, நாம் அவர் சொல்கிறபடி காரியத்தைக் கவனிச்சோம் என்ருல், தகராறே கிடையாது.

செல் : நானும் அப்படித்தான் நினைத்தேன்.

ராஜி : நீ நினைத்தது ரொம்பச் சரி. வீட்டுக்கு அதிகாரி அவர். நாம் அவர்களுக்கு அடிமை. அவர்களுடைய இஷ்டசித்திதான் நமக்கும் இஷ்டசித்தி........சரி. நீ அதைப்பற்றி ஒன்றும் கவலேப்படாதே. தைரியமாயிரு. எல்லாம் தாலிக்கயிறு கழுத்திலே ஏறி, நீங்க ரெண்டுபேரும் தனிக் குடித்தனமும் பண்ண ஆரம்பிச்சுட்டா, எல்லாம் சரியாய்ப் போயிடும். அப்புறம் நீ எனக்கே பாடம் படிப்பாய். சரி, நான் வரட்டுமா? அவர் வரும் நேரமாச்சு.

செல் : சரி, ராஜி. அப்புறமா வாயேன்.

ராஜி : அப்புறமா வருவது அவரிஷ்டமடி. நம்ப இஷ்டமில்லே. தெரிந்ததா?

[ராஜி போகிருள்]

## காட்சி—3

*[ராமசாமியின் திருமணம் முடிந்து, தம்பதிகள் இருவரும் தனிக் குடித்தனமும் தொடங்கிய பின்னர் சுந்தரம் ராமசாமியைச் சந்திக்கிருன்.]*

சுந்தரம் : ராமசாமியா, வாப்பா வா, ஏது? கல்யாணம் ஆனாலும் ஆச்சு, ஆளைக் கண்ணிலேயே காண முடியவில்லையே. பெண்டாட்டியாத்தா பெரியாத்தா, பிழைக்கும் மதியைச் சொல்லாத்தா என்று ஆரம்பித்து விட்டாயா?

ராமசாமி : போதுமே கேலி. உன் கண்ணில் படவில்லை யென்றால், அதற்காக –

சுந் : எனக்கென்ன? மாலைக்கண்ணா, இல்லை கண் குருடா? உன்னைத்தான் காணவே முடியவில்லை சரி, உன் இல்லற வாழ்க்கை இலட்சிய பூர்வமாக இனிது நடைபெற்று வருகிறதா?

ராம : எல்லாம் நடைபெறத்தான் செய்கிறது.

சுந் : என்ன, 'இத்தான்' நடைபெறுகிறது என்று நீட்டுகிருயே. என்ன விஷயம்?

ராம : சுந்தரம், உன்னிடம் சொல்வதற்கென்ன? நான் செல்லத்துக்குச் சகல சுதந்திரங்களும் கொடுத்திருக்கத்தான் செய்கிறேன். பழைய கட்டுப் பெட்டிக் கட்டுப்பாடுகள் எதையும் நான் அவள் மீது சுமத்தவில்லை. வீட்டு நிர்வாகத்தை யெல்லாம் அவளிடமே விட்டு வைத்திருக்கிறேன். அவள் இஷ்டம்போல் எதையும் செய்ய, எதையும் வாங்க அனுமதித்திருக்கிறேன். இருந்தாலும்—

சுந் : இருந்தாலும்—என்ன?

ராம: செல்லத்தை என்ஞல் புரிந்துகொள்ளவே முடிய வில்லே.

சுந்: அப்படி என்ன நடந்துவிட்டது?

ராம: ஒன்றுமற்ற விஷயத்திலெல்லாம் அவள் என் அபிப்பிராயத்துக்காகக் காத்து நிற்கிருள், வீட்டில் என்ன கறிவைப்பது, என்ன குழம்பு வைப்பது என்பதற்கெல்லாம் கூடவா என் அபிப்பிராயம் தேவை?

சுந்: பின்னே? உன் வாய்க்கு ருசியாக இருக்க வேண்டும் அல்லவா?

ராம: அவள் கையால் எது வைத்தாலும் நன்ருகத் தான் இருக்கிறது. நான் அதைச் சொல்லவில்லே. அவளேக் கொண்டு வாழ்க்கை நடத்துவது சொல் வதைச் செய்யும் வேலேக்காரியை வைத்துக் குடி வாழ்வது மாதிரி இருக்கிறது.

சுந்: நீ சொல்வது எனக்கு விளங்கவே இல்லே. நீ என்னதான் சொல்ல விரும்புகிருய்?

ராம: இல்லே. அவளுக்கு நான் சர்வ சுதந்திரமும் கொடுத்திருந்தபோதிலும், அவளுக்கு அவற்றை அனுபவிக்கத் தெரியவில்லே. பழைய கட்டுப் பெட்டி மாதிரியே நடந்துகொள்ளுகிருள்.

சுந்: ராமசாமி, உன் மனத்திலே என்னவோ புரியா தது மாதிரி இருக்கிறது. இல்லேயா? அதனுல் தான் உன் பேச்சும் எனக்குப் புரியவில்லே. அப்படி அவள் என்ன செய்து விட்டாள்?

ராம: கேளேன். அன்ருெருநாள் அவள் ஜாக்கெட் டுக்குத் துணி எடுக்க வேண்டுமென்ருள் எடுத்துக் கொள் என்று பணத்தை எடுத்துக் கொடுத்தேன். கடைக்கு நீங்களும் வாருங்கள் என்ருள்.

சுந் : நீ போனாயா, இல்லையா ?

ராம : போனேன். கடையில் போய் நின்றுகொண்டு, எந்தத் துணி எனக்குப் பிடித்திருக்கிறது என்று கேட்டாள். போட்டுக் கொள்ளப் போகிறவள் அவளா, நானா ? உன் இஷ்டம் என்றேன். கடைசியில் என்ன நடந்தது தெரியுமா ?

சுந் : அவள் துணியே வேண்டாமென்று திரும்பிவிட்டாள். அப்படித்தானே ?

ராம : ஆமாம். அதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நீ சொன்னாயே, நாம் சுதந்திரம் கொடுத்தாலும் அவர்களுக்கு அனுபவிக்கத் தெரியாது என்று. செல்லமும் அப்படித்தான் இருக்கிறாள்.

சுந் : போடா, முட்டாள் ! நீ கொடுத்தது சுதந்திரமா ?

ராம : என்னது ? நீ என்ன சொல்கிறாய் ?

சுந் : உனக்கு இல்வாழ்க்கையின் நடைமுறையே தெரியவில்லை. உன் லட்சியம் இருக்கிறதே, அது உயர்ந்ததுதான். ஆனால் நடைமுறையில் அதை எடுத்துக் கொடுத்து உன்னால் நிறைவேற்ற முடியாது. தெரியுமா ?

ராம : நிறைவேறுவது எப்படியும் இருக்கட்டும். ஆனால் செல்லம் என்னிடம் ஒரு அடிமை மாதிரியல்லவா நடந்துகொள்கிறாள் ! அடிமை என்று அவள் வாய்விட்டுச் சொல்லவில்லையே தவிர...

சுந் : நீ இன்னும் இப்படியே இருந்தால், ஒருநாள் அப்படியும் அவள் உனக்கு வாய்விட்டுச் சொல்லித்தான் காட்டுவாள். அது அவள் கடமை.

ராம: சுந்தரம், உன் நடைமுறை என் லட்சியத்துக்கே மாறுபட்டது. மனைவி என்பவள் கணவனுக்கு அடிமையா என்ன?

சுந்: ஆம், அடிமையேதான். இதை நான் முன்பே சொல்லியிருக்கிறேனே.

ராம: உளறுதே.

சுந்: ஆம். மனைவி உனக்கு அடிமைதான், உன் அன்புக்கு; ஆதிக்கத்துக்கல்ல.

ராம: அன்பு பரஸ்பரம் இருவருக்கும் உள்ளதுதானே, இதில் யார் அடிமை, யார் ஆண்டான்? நீ சொல்வது புதிராய் இருக்கிறது.

சுந்: இல்லை ராமு. பக்தன் ஏன் தெய்வத்துக்கு அடிமையாகிறான்? அடியார்க்கு அடியனுகவும் தாஸானு தாஸனுகவும் அவன் ஏன் மாறவேண்டும்? தேசபக்தன் தன்னை ஏன் தொண்டன் என்று வர்ணித்துக்கொள்கிறான். இவ்வாறு சொல்லிக் கொள்வதில் அவர்களுக்கு என்ன மகிழ்ச்சி? உன் மனைவியும் அப்படித்தான். அவள் உன் ஆசைக்குப் பரிபூரணமாக அடிமையாயிருக்கவே விரும்புகிறாள்.

ராம: நீ பேசுவதுதான் விசித்திரமாயிருக்கிறது. கணவன் என்பவன் மனைவிக்கு அதிகாரி என்ற பழைய பத்தாம்பசலி மூடக் கொள்கையைத் தானே நீ வற்புறுத்துகிறாய். இதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்.

சுந்: ராமு, வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாதவரை எல்லாமே விசித்திரம்தான்.. ஒன்று மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள். நடைமுறையைப் புரிந்து

கொண்டு லட்சியம் உருப்பெற வேண்டும். பெண்ணுக்குச் சுதந்திரம் என்று உன்போன்ற சிலர் வேண்டாததற்கெல்லாம் சுதந்திரம் கொடுக்கிருர்கள். அபிப்பிராயம கூறுவதைக்கூட சுதந்திரத்துக்கு முரண்பட்டது என்று உன்னைப் போலத்தான் முட்டாள்தனமாய் சிலர் நினைக்கிருர்கள்.

ராம: அபிப்பிராய சுதந்திரம் சுதந்திரமில்லையா? அவள் இஷ்டத்துக்கு விட்டுக் கொடுப்பதுமா தவறு?

சுந்: வாஸ்தவம். ஆனுல் நம் நாட்டுப் பெண்கள் அலாதியான கலாச்சாரத்தில் வளர்ந்து வந்திருக்கிருர்கள். அவர்களுக்குச் சுதந்திர உணர்ச்சியைக் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் உருவேற்ற வேண்டும். சுதந்திரம் கொடுக்கலாம். அதற்கு முன் அந்தச் சுதந்திரத்தை நடைமுறையில் தாங்கிக் கொண்டு செலுத்தக்கூடிய தைரியமும், உணர்வும் அவர்களுக்கு ஏற்பட்டுவிட வேண்டும்.

ராம: நீ என்ன மனைவியைச் சிறு குழந்தை என்ரு சொல்கிருய்?

சுந்: சுதந்திர உணர்ச்சியைப் பொறுத்தவரை உன் மனைவி சிறுமிதான். மெத்தப் படித்த பெண்கள் சுதந்திரம் என்ற பெயரால் தான்தோன்றித்தனமாய் அடக்குவாரற்றுத் திரிவதையும் நீ பார்க்கத்தானே செய்கிருய். அதுதான் சுதந்திரமா? சுதந்திரம் என்பது அராஜகமல்ல... உன் மனைவியோ உன்னிடம் அன்போடு ஒண்ட வருகிருள். நீதான் அவளைச் சுதந்திரம் சுதந்திரம் என்று ஒதுக்கித் தள்ளுகிருய்.

ராம: நீ எவ்வளவுதான் சுற்றி வளைத்துப் பேசினுலும் உன் பேச்சைப் புரிந்துகொள்ள எனக்குத் தெரியும். மனைவியை அதிகாரம் பண்ணு என்றுதானே சொல்கிருய்!

சுந் : ராமு, உன் லட்சியத்தை நான் குறை கூற வில்லை; மனைவியை அடக்கியாண்டு அதிகாரம் பண்ணு என்றும் சொல்ல வரவில்லை. உன் லட்சியம் எதிர்காலக் கனவு. உன் மனைவி செல்லமோ கடந்த கால கலாச்சாரத்தில் ஊறி வளர்ந்த பெண். நீங்கள் நிற்பதோ இடைக்கால நடைமுறை, எனவே இன்றைய நடைமுறையை அனுசரித்துத் தான் நீ எதிர்காலத்தில் காலடி எடுத்து வைக்க முடியும். அப்போதுதான் செல்லம் முன்னேற முடியும். நீ அவளுடைய கையைப் பிடித்து முன்னேறிச் செல்ல வேண்டியவன். அதற்குப் பதிலாக, நீ எங்கோ எட்டாத தூரத்தில் இருந்து கொண்டு, உன் கைகளை நீட்டினல் மட்டும், அவள் உன்னை எட்டிப் பிடித்துவிட முடியாது. இப்போது செல்லம் தவிப்பதற்கெல்லாம் காரணம் இன்றைய நடைமுறைக்கும் நாளைய லட்சியத்துக்கும் உள்ள இடைவெளிதான். உனக்கு இதை உணர்ந்து கொள்ளத்தான் திராணியில்லை.

ராம : உன் பேச்சுத்தான் எனக்குப் புரியவில்லை, சுந்தர்.

சுந் : இன்றில்லாவிட்டால் நாளை உனக்குப் புரியத் தான் செய்யும்.

ராம : சரிசரி, உன்னேடு குதர்க்க வாதம் புரியத் தயாராயில்லை, நான் வருகிறேன்.

## காட்சி—4

*[செல்லத்தின் தனிக் குடித்தனத்துக்குப் பின்னர் செல்லமும் ராஜியும் சந்திக்கிருர்கள். ராஜி வருகிருள்.]*

**செல்லம் :** ராஜியா? வா. நல்ல வேளை, நீயே வந்து விட்டாய், உன்னைப் பார்க்க வரலாம் என்றிருந்தேன், வீட்டில் இருக்க நிலையே கொள்ளவில்லை.

ராஜி : ஏன், உன் புருஷர் இல்லாமல் தனியே இருப்பது சங்கடமாயிருக்கிறதா? என்ன இருந்தாலும் மனசு கேட்குமா ? என்னடி செல்லம்?

செல் : ராஜி, கிண்டல் போதுமே. எனக்குக் கொஞ்ச நாளாய் மனசே சரியில்லே.

ராஜி : உனக்கென்னடி குறை? கல்யாணத்துக்கு முன்னுல்தான் புருஷர் எப்படியிருப்பாரோ என்று பயந்து கொண்டிருந்தாய். இப்போதுதான் உன் புருஷர் உனக்குச் சகல சுதந்திரமும் கொடுத்திருப்பதாகப் பெருமைப் பட்டுக்கொண்டாயே.

செல் : அது என் முட்டாள் தனம். அந்தச் சுதந்திரத்தை விட, முதலில் நான் பயந்த மாதிரியே இருந்தால் தேவலே என்று தோன்றுகிறது.

ராஜி : ஏன் அப்படி ?

செல் : கேளடி, அன்று ஒருநாள் எனக்கு ஜாக்கெட் துணி எடுக்க வேண்டியிருந்தது. கடைக்குப் போனேம். கடைக்கு அவரைக் கிளப்புவதே பெரும்பாடாகி விட்டது.

ராஜி : நீ சொல்வது எனக்குப் புரிகிறது, அப்புறம்?

செல் : சாப்பிடுவதில்கூட எனக்குச் சுதந்திரமாம். அவருக்காகக் காத்திராமல் நான் சாப்பிட வேண்டுமாம். அவர் சாப்பிடாமல் நாம் மாத்திரம் சாப்பிட மனசு வருகிறதா? இருந்தாலும், அவருக்காகக் காத்திராமல் அவர் உத்தரவுக்குப் பயந்து சாப்பிட்டு விடுவேன். ஒருநாள் அவர் வர வெகு நேரம் ஆகிவிட்டது. ஹோட்டலில் சாப்பிட்டு வருவார் என்று எண்ணி, நான் சாப்பிட்டுவிட்டுத் தண்ணீரும் விட்டுவிட்டேன். அவர் வந்தார்.

சாதம் வைக்கச்சொன்னுர். விஷயத்தைச் சொன்னேன். ஒரே கோபம்.

ராஜி : நல்ல பசி போலிருக்கு.

செல் : ஆமாம். உன் பாட்டைக் கவனித்துக் கொண்டாய், என்னைப்பற்றி நினைப்பு இருந்ததா என்று கோபித்துக் கொண்டார். ஹூம்........அன்று ராத்திரி முழுதும் நான் அழுதது தான் மிச்சம்.

ராஜி : நல்ல சுதந்தரமடி இது. அவரவர் இஷ்டப்படி நடப்பது என்கிறது, பிறகு கஷ்டம் வந்தால் கோபப்படுகிறது. இந்தப் புருஷாளுக்கே நம்மைப் புரிந்துகொள்ளத் தெரியவில்லை. புதுமை புதுமை என்று பழமையை வெறுக்கிறுர்கள். ஆனுல் பழமையைப் புரிந்துகொள்ளாமல் புதுமையை எப்படி உண்டாக்கி விட முடியும்? அப்படியில்லாத சுதந்திரம்...

செல் : ராஜி, நான் சொல்லத் தவித்ததை நீயே சொல்லிவிட்டாய். இந்த மாதிரி நிலைமையில் நான் என்னதான் செய்கிறது? நீயே சொல்.

ராஜி : சொல்வது என்ன? இனிமேல், நீ அவர் எவ்வளவு நேரம் கழித்து வந்தாலும் காத்திரு. அதுவரை சாப்பிடாதே. உன் கஷ்டம் அவருக்குத் தெரியும் வரை பட்டினி கிடக்கவும் தயங்காதே. அவர் தானுக வழிக்கு வந்துவிடுவார்.

செல் : ராஜி, உன் யோசனை நல்ல யோசனைதான். ஆனுல் அவர் அதைக் கண்டு கோபப்பட்டு விட்டால்?

ராஜி : படட்டுமே. கோபம் தணிந்த பிறகாவது அவருக்கு உண்மை புரியாதா, என்ன?

செல் : ராஜி, கொஞ்சம் இரு. நான் அடுப்பைப்பற்ற விட்டுவிட்டு வருகிறேன்.

ராஜி : இல்லையடியம்மா, எனக்கும் வேலை இருக்கு. நான் வருகிறேன். நான் சொன்னதைமட்டும் மறந்து விடாதே.

*[ராஜி புறப்பட்டுச் செல்கிருள்.]*

## காட்சி—5

*[ராமசாமியின் வீடு. வெளியிலிருந்து கதவு தட்டும் ஓசை கேட்கிறது.]*

ராமசாமி : (வெளியிலிருந்து) செல்லம், செல்லம்!

*[செல்லம் எழுந்து சென்று, கதவைத் திறக்கிருள். ராமசாமி உள்ளே வருகிருன்,]*

செல் : ஏன் இத்தனை நாழி? மணி பன்னிரண்டாகப் போகிறதே.

ராம : என்னமோ நேரம் ஆயிடுத்து. சரி, நீ சாப்பிட்டாச்சா ?

செல் : இல்லை. நீங்கள் ?

ராம : நான் ஹோட்டலில் சாப்பிட்டேன். நீ ஏன் சாப்பிடவில்லை ?

செல் : உங்களுக்காகக் காத்திருந்தேன்.

ராம : எனக்காகக் காத்திராதே என்றேனே.

செல் : என்னவோ காத்திருந்தேன். நீங்கள் சாப்பிடாமல் என்னுல் சாப்பிடவே முடியவில்லை.

ராம : (கோபமாக) செல்லம். அன்று உன்னைக் கோபித்ததற்காக, இன்று என்னைப் பழிவாங்க நினைக்கிருயா ?

செல் : (முட்டிவரும் உணர்வோடு) நீங்கள்தான் என்னைப் பழி வாங்குகிறீர்கள் !

ராம: நீ என்ன சொல்கிருய் செல்லம் ? உன்னை என்னுல் புரிந்துகொள்ளவே முடியவில்லையே.

செல்: புரியாது; புரியாது; புரியாது. புரியாத வரையிலும எனக்குத்தான் வாதனை !

[செல்லத்துக்கு அழுகை முட்டிக்கொண்டு வருகிறது, அடக்கமாட்டாமல் அடக்கிக்கொண்டு, குமுறிக் குமுறி அழுகிருள்.]

ராம: (பதறிப்போய் அவளை அணுகி ஆசுவாசப் படுத்தியவாறு) என்ன செல்லம் இது ? எதற்கு ? ஏனிப்படி ? நான் உனக்கு என்ன செய்து விட்டேன்; உனக்குச் சகல சுதந்திரமும் தானே கொடுத்திருக்கிறேன் !

செல்: உங்கள் சுதந்திரமே எனக்கு வேண்டாம். நான் உங்கள் அடிமை !

ராம: செல்லம், நீ என்ன சொல்கிருய் ?

செல்: சொல்வதென்ன ? நம்மைத் தனிப்பட்டவர்களாகப் பிரித்து வைக்கும் அந்தச் சுதந்திரத்தை விட்டுத் தள்ளுங்கள். அந்தச் சுதந்திரமே வேண்டாம்.

ராம: (சிறிது நேரம் பேசாதிருக்கிருன்) செல்லம் நீ சொல்வது புரிகிறது. பெண்ணுக்குக் கொடுக்கும் சுதந்திரத்துக்கும் மனைவிக்குக கொடுக்கும் சுதந்திரத்துக்கும் இன்றுதான் எனக்கு வித்தியாசம் புரிந்தது. நீ என் மனைவி; என் மனைவி !

செல்: (கண்களைத் துடைத்துக் கொண்டு) என்ன சொன்னீர்கள் ?

ராம: இல்லை......சுந்தரம் சொன்னதுதான் சரி. வா, சாப்பிடலாம், நானும் உன்னுடன் சாப்பிடுகிறேன்!

[செல்லத்தின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, சமையலறைக்குள் நுழைகிருன்.]

— திரை —

—1950

# படிப்பினை

பாத்திரங்கள் :

| | |
|---|---|
| சந்தானம்<br>நடராஜன்<br>ரகுபதி<br>சோமையா | கல்லூரி ஹாஸ்டல் மாணவர்கள் |

வேதநாயகம் — சந்தானத்தின் தந்தை

கல்லூரி பிரின்ஸ்பால்

வேலுசாமி — கல்லூரி பியூன்.

## காட்சி—1

*(கல்லூரி ஹாஸ்டலில் ஒருஅறை. அடுத்துள்ள கல்லூரியில் வகுப்பு ஆரம்பமாவதற்குரிய மணியோசை கேட்கிறது. ரகுபதி தனது அறையில் ஆழ்ந்த கவலையோடும் சிந்தனையோடும் அமர்ந்திருக்கிறான். வெளியே யாரோ சீட்டியடித்துக் கொண்டு வரும் சப்தம் கேட்கிறது. பிறகு கதவு தட்டும் ஓசை)*

**நடராஜன் :** (வெளியிலிருந்து) ரகுபதி, ரகுபதி.

**ரகுபதி ;** (தலை நிமிர்ந்து) யாரது ?

**நட :** (வெளியிலிருந்து) நான்தான் நடராஜன். கதவைத் திறப்பா.

ரகு : சும்மாதான் சாத்தியிருக்கேன். கொஞ்சம் பல மாத் தள்ளு.

(நடராஜன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வருகிறான்.)

நட : (வியப்போடு) ஏண்டா, ரகு! இதென்ன இது? இன்னும் புறப்படாமெ? தலையைக்கூட வாரிக்காமெ? மணி யடிச்சது காதிலே விழலியா? காது மந்தமாப் போச்சா?

ரகு : காது ஒண்ணும் மந்தமாகலெ. புத்திதான்......

நட : உன் புத்திக்கு என்ன வந்தது? பரீக்ஷை நெருங்குகிறதே என்ற பயமா?

ரகு : பரீட்சை கிடக்கு. எனக்கே சந்தேகம். ஞாபக மறதிதான் அதிகமாய்ப் போய்ச்சா இல்லெ, நான் தான் தொலைத்து விட்டேனா?......

நட : எதையடா தொலைத்தாய்? பணமா?

ரகு : பணமென்றால்தான் கவலை இல்லையே, அப்பாவுக்கு எழுதினால் தானே வர்ரது.

நட : பின் என்னத்தையடா போக்கடித்தாய்?

ரகு : 'ஸாகா'ஸ் மாடர்ன் பிஸிக்ஸ்' புத்தகத்தைத் தான்.

நட : ஏகப்பட்ட விலையாச்சே! நீ எப்போது வாங்கினாய்? மார்க்கெட்டில் கூட 'அவுட் ஆப் பிரிண்ட்' ஆச்சே!

ரகு : எப்படியோ வாங்கினேன்! அதைச் சொல்லி என்ன பயன்?

நட : ஹாஸ்டலிலும் வேறு யாரிடமும் அந்தப் புத்தகம் கிடையாது. வேண்டுமென்றால் லைப்ரேரியில்தான்

எடுத்துப் படிப்பார்கள். அதையா தொலைத்து விட்டாய்?

ரகு: ஆமாம்.

நட: எப்படியடா தொலையும்? அதென்ன சின்னப் புஸ்தகமா? பெரிய தலையணை மாதிரி இருக்குமே. அதை எப்படி?—

ரகு: நானும் அதைத்தான் யோசிக்கிறேன். அந்தப் புஸ்தகம் எங்கே போயிற்றென்பதுதான் தெரிய வில்லை.

நட: கைத்தவறுக எங்காவது—

ரகு: புத்திக்கு எட்டினமட்டும் புலப்படக் காணும். ரூம் பூராவும் அலசிப் பார்த்தாச்சு. யானை பார்க்க வெள்ளெழுத்தா?

நட: காலேஜிலே எங்காவது—

ரகு: காலேஜுக்கே கொண்டு போகவில்லையே!

நட: அப்படியானல் யாராவது?

ரகு: அதுதான் நானும் நினைத்தேன். அந்தப் புத்தகம் நிச்சயம் தொலைய முடியாது. யாராவதுதான் எடுத் திருக்க வேண்டும்.

நட: வீணுக யார்மீதும் சந்தேகப்படாதே. ஒருவேளை, நீயே யாருக்காவது இரவல் கொடுத்துவிட்டு—

ரகு: இரவலா? அந்த வழக்கமே என்னிடம் கிடை யாதே. யாராவதுதான்—

நட: அப்படியானல் உன் ரூமுக்கு யார் யார் வரு கிருர்கள்?

ரகு: எல்லாரும்தான் வருகிருர்கள். நீயும்தான் வரு கிருய்!

நட : ஏது? (சிரித்து) என்னையே சந்தேகிக்கிருயா?

ரகு : இல்லை, சொன்னேன். வருகிறவர்கள் எல்லோருமே நண்பர்கள், யாரைச் சந்தேகிப்பது?

நட : அதுதான் நானும் சொல்கிறேன். எதற்கும் நீ வார்டனிடம் சொல்லி, புத்தகம் காணுமல் போன விவரத்துக்குப் 'புல்லட்டின் போர்'டில் போடச் சொல்லு. தப்பித் தவறி இரவல் கொடுத்திருந்தால்கூட வந்துவிடக் கூடும்.

ரகு : அதுவும் நல்ல யோசனைதான். இருந்தாலும், பலன் கிடைக்க வேண்டுமே.

நட : கிடைக்கிறது, கிடைக்கவில்லை. அதைப்பற்றி இப்போதென்ன கவலை? போட்டுவை...சரி, நீ காலேஜுக்கு வரவில்லையா? 'ஸெகண்ட் பெல்' அடிப்பதற்குக்கூட நேரமாகிவிட்டதே.

ரகு : இல்லை. மனசே சரியில்லை. நீ போ. முடிந்தால் மத்தியானம் வருகிறேன்.

[கல்லூரியில் இரண்டாவது மணியடிக்கும் சப்தம் கேட்கிறது.]

நட : சரி. மணி அடித்துவிட்டது. நான் வருகிறேன். வீணுய் மனசை அலட்டிக் கொள்ளாதே.

[நடராஜன் அவசர அவசரமாக வெளிச் செல்கிருன்.]

## காட்சி—2

*(ரகுவின் அறை. ரகு தனிமையில் இருக்கிறான். சோமையா பிரவேசிக்கிறான்.)*

**சோமையா :** ஏண்டா, ரகு? உன் புஸ்தகத்தை காணோமென்று நோட்டீஸ் போர்டிலே போட்டிருக்கே?

**ரகு :** ஆமாம் சோமு.

**சோமை -** (மேஜை விளிம்பில் ஏறி அமர்ந்தவாறு) முந்தாநாள் கூட, நீ அதை வைத்துப் படிப்பதைப் பார்த்தேனடா. நேற்று 'ஸண்டே', இன்றோ நீ காலேஜுக்கே வரவில்லை. பின் புத்தகம் எங்கேடா போய் விடும் ?

**ரகு :** அதுதான் எனக்கும் தெரியவில்லை.

**சோமை :** இறக்கை முளைத்துப் பறந்தா போய்விடும்? எவனோ மெள்ளக் கை வைத்துவிட்டான். அவ்வளவுதான்!

**ரகு :** யார் எடுப்பார்கள்? நமக்குள்ளேயே திருடுவார்களா?

**சோமை :** இந்தக் காலத்திலே யாரையப்பா நம்புகிறது? பார்த்தால் பசுதான். பாய்ந்தாலோ—? அது சரி. நீ கடைசியாகப் புத்தகத்தை எப்போது பார்த்தாய்?

**ரகு :** நேற்றுக் காலையில் பாத்ரூமுக்குப் போனபோது?

**சோமை :** அப்போது உன் ரூமிலே யார் இருந்தார்கள்?

**ரகு :** சந்தானம் தான் வந்தான் ; இருந்தான்.

**சோமை :** குளித்துவிட்டு வரும் வரையிலா?

**ரகு :** வரும்போது அவனில்லை ; எதிரே போனான்.

சோமை: அவன் கையில் புத்தகம் இருந்ததா?

ரகு: என்ன சோமு? இருந்திருந்து சந்தானம் மீதா பழி சுமத்தப் பார்க்கிறாய்?

சோமை: எனக்கு யார் மீதும் பழிசுமத்த விருப்பம் கிடையாது, தம்பி. உண்மை வெளியாக வேண்டுமே. சந்தானம் உன் ரூமுக்கு வரும்போது பத்து மணி இருக்குமா?

ரகு: இருக்கும். மணிக்கூண்டில் பத்து அடித்த பிறகு தான் நான் குளிக்கப் போனேன்.

சோமை: எதற்காகக் கேட்டேன் தெரியுமா? பத்து மணி சுமாருக்கு சந்தானம் என் ரூம் முன்னால் கூடிச் சென்றான். அப்போது அவன் கையில் ஒரு புத்தகம் இருந்தது.

ரகு: என் புத்தகமா?

சோமை: யார் புத்தகமோ? புத்தகம் இருந்தது. அவ்வளவுதான்.

ரகு: ஒரு வேளை அவன் கையில் கொண்டு வந்த புத்தகமா யிருந்தால்?

சோமை: கொண்டு வந்ததை நீ பார்த்தாயா?

ரகு ஞாபகமில்லை.

சோமை: பின்னே—? எதற்கும் நீ சந்தானத்தைக் கேட்டுப்பாரேன்.

ரகு: எப்படிக் கேட்பது? நோட்டீஸ் போர்டில் போட்ட பிறகா? அவன் என்ன நினைத்துக் கொள்வான்?

சோமை: கேட்டால் என்ன நட்டம்? எனக்கென்னவோ அவன் மீதுதான் சந்தேகம். பிறகு உன்னிஷ்டம். இழக்கப்போவது நானா?

ரகு : நீ என்னதான் செய்யச் சொல்கிறாய் ?

சோமை : வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும், கேட்டுப் பார். இல்லையென்றால் பிரின்ஸிபாலுக்கு ஒரு ரிப்போர்ட் பண்ணு. ஆசாமி தானே வழிக்கு வந்திடுவான்.

ரகு : காரணமில்லாமல் சந்தேகப்பட்டு 'பிரண்ட்ஷிப்' பை முறிச்சிடக் கூடாதப்பா ?

சோமை : உனக்கு வேண்டியது பிரண்ட்ஷிப்பா? இல்லை புத்தகமா ?

ரகு : சந்தானம்—...

சோமை : நான் சொன்னால் நீ எங்கே நம்பப் போகிறாய் ? உனக்கு வெளுத்ததெல்லாம் பால். பிறகு உன்பாடு, அவன்பாடு. எனக்கென்ன வந்தது ? நான் வருகிறேன்.

(சோமையா புறப்பட்டுச் செல்கிறான்.)

## காட்சி—3

(ஹாஸ்டல் மைதானம். மரத்தடியிலுள்ள சிமெண்ட் பெஞ்சின் மீது சந்தானம் தன்னந்தனியே உட்கார்ந்திருக்கிறான், நடராஜன் வந்து சேர்கிறான்.)

நடராஜன் : என்னடா சந்தானம் ? ஏது தன்னந்தனியே வந்து உட்கார்ந்திருக்கே ? ஏதாவது நிஷ்டையா ? இல்லே—கவி கிவி பாடி எங்களை யெல்லாம் பயமுறுத்தப் போறியா ?

சந்தானம் : (மௌனம் சாதிக்கிறான்)

நட : என்னடாது ? பேசக்கூட மாட்டியா ? மௌன விரதமா ?

சந்தா : நடராஜ், கேலி போதும். எனக்கு மனசே சரி யில்லை. சரி, இப்படி உட்கார்.

நட : (சந்தானத்தின் அருகே அமர்ந்தவாறே) ஏன், என்ன விஷயம் ? ஊரிலே யிருந்து ஏதாவது கடிதம் வந்ததா ?

சந்தா : ஒன்றுமில்லை.

நட : என்னடா மென்று விழுங்குகிறாய்? ஏன் என்ன நடந்துவிட்டது ?

சந்தா : நீயும் என் நண்பன் தான். உன்னிடம் சொல்லக் கூட எனக்கு வெட்கமாயிருக்கிறது.

நட : அப்படி என்ன காரியம் செய்து விட்டாய் ?

சந்தா: ஒன்றும் செய்யாதபோதே என்னைப் பற்றி இப் படிப் பேசினால்—?

;ட : யார் பேசினார்கள் ? விஷயத்தைச் சொல்லடா.

சந் : ரகுபதியின் புத்தகத்தைக் காணோமாம்.

நட : அதுதான் போர்டிலே போட்டிருக்கானே.

சந்தா : நானும்தான் பார்த்தேன். ஆனால், எனக்கு, நடராஜ்! (உணர்ச்சிவசப்பட்டு) எனக்குத்திருட்டுப் பட்டம் சூட்டுகிறான் நடராஜ்.

நட : என்னது ? நீ திருடினாயா ? அவன் உன்னிடம் கேட்டானா ?

சந்தா : கேட்டிருந்தால் மனசு ஆறிப்போயிருக்கும், நடராஜ். ஆனால்—

நட : சந்தானம், அவன் புத்தகத்தைத் தொலைத்து விட்டான் என்பதை என்னிடமும் சொன்னான்.

ஆனால் நீ எடுத்ததாக அவன் சந்தேகம் கூடப்பட வில்லையே! வேறு யாராவது தூண்டி விட்டிருப் பானோ?

சந்தா: நடராஜ், என்னை உனக்குத் தெரியாதா? எனக் கா திருட்டுப் பட்டம் கிடைக்க வேண்டும்?

நட: கவலைப் படாதே, உன்மீது திருட்டுப்பட்டம் சூட்டுகிறான் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?

சந்தா: நானே என் காதால் கேட்டேன். என்னிடம் நேரில் கேட்டால் தானா தெரியும்? ஜாடை மாடை யாகப் பேசினால் தெரியாதா?

நட: யார் பேசினார்கள்?

சந்தா: இன்று ரகுபதி ரூமுக்குப் போனேன். அங்கு சோமு, ரகுபதி எல்லோரும் இருந்தார்கள். ஏதோ ரொம்பக் குஷியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் கப்சிப்பென்று பேச்சை நிறுத்தினார்கள்.

நட: உனக்குத் தெரிய வேண்டாத விஷயத்தைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்திருக்கலாம்.

சந்தா: அவர்களுக்குள் ஆயிரம் ரகசியம் இருக்கட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் வந்து உட் கார்ந்தவனைக் கொஞ்சங்கூடப் பொருட்படுத்தா மல் அவர்கள் பாட்டுக்கு ஏதேதோ பேசிக் கொண் டிருந்தார்கள்.

நட: அவர்கள் 'இண்டிபிரெண்டாய்' நடந்தால் நீ ஏன் அங்கு செல்ல வேண்டும்?

சந்தா: நேற்றுவரை இல்லாத 'இண்டிபிரெண்ஸ்' எங்கிருந்து வந்தது? அவர்கள் பேச்சைக் கவ னித்தேன். என்னைத்தான் ஜாடை மாடையாய்ப் பேசுகிறார்கள் என்று தெரிந்து கொண்டேன்.

நட : நீ திருடினாய் என்று காட்டினார்களா ?

சந்நா : நல்ல பாட்டுக்கு ஒரு சூடு. அவ்வளவுக்கு எனக்கு விவேக மில்லையா ? மனசு குமைந்தது. ஹாஸ்டலில் திருட்டு அதிகமாய்ப் போச்சாம். உண்ட வீட்டிலேயே கெண்டி தூக்குகிறார்களாம். எதைத்தான் பேசுவது என்றில்லை. நடுத்தெருவில் சண்டைபோடுபவன் கூட கொஞ்சம் நாசூக்காகப் பேசுவான். இவர்கள் ?

நட : இவர்கள் படித்த முட்டாள்கள். அவர்களைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய் ?

சந்தா : நடராஜ். அந்தப் பேச்சைச் சகிக்க முடியாமல் நான் எழுந்து வந்தபோது அவர்கள் சிரித்த அந்தச் சிரிப்பு......

நட : சிரித்தார்களா ?

சந்தா : ஆம், அந்தச் சிரிப்பு என் நெஞ்சையே பிளக்கிறது நடராஜ். எனக்கு வந்த வேகத்தில் நான் திருடவில்லை என்று சொல்லி விடலாமா என்று நினைத்தேன்.

நட : நல்ல வேளை, நீ சொல்லாமல் வந்தது இல்லையென்றால், குற்ற முள்ள நெஞ்சு குறுகுறுக்கப் போய்த்தான் நீ இல்லையென்று சொல்கிறாய் என அவர்கள் நினைக்கலாம்.

சந்தா : நீ சொல்வது வாஸ்தவம். ஆனால் அப்படிச் சொல்லியிருந்தால் கூட, என்மனசு ஆறியிருக்கும். ஆனால் அவர்கள் மறைமுகமாகப் பேசுவதைக் கேட்டு விட்டும், அந்தக் குற்றச் சாட்டை நெஞ்சுக்குள்ளேயே போட்டு வைத்திருக்க முடியுமா ? என் நெஞ்சு வேகிறது, நடராஜ்.

**நட :** சந்தானம், பதருதே. உண்மை வெளிப்படும் போது அவர்கள் தாமே வெட்கப்படுவார்கள். அதற்குள் நீயாக முந்திக்கொண்டு, அவர்கள் சந்தேகத்தைப் பலப்படுத்துவானேன்?

**சந்தா :** உண்மை வெளிப்படும் வரை நான் வேதனைப் பட வேண்டுமா, நடராஜ்? யாரோ செய்த தவறுக்கு நானு துன்பப்படவேண்டும்? நண்பர்களுக்கே நம்பிக்கை இல்லை யென்றால் யாரைத்தான் குறை கூறுவது? நீயே சொல்.

**நட :** கவலையை விடு. எல்லாம் சரியாய்ப் போகும்.

**சந்தா :** கறைபட்ட மனசில் கவலை நீங்குமா? எனக்கு நம்பிக்கை இல்லை.

**நட :** சரி சரி, அதையே நினைத்துக்கொண்டு உயிரை விடாதே. வா, போய் ஒரு கப் காப்பி சாப்பிடலாம்.

[நடராஜன் எழுந்திருக்கிறன்]

**சந்தா :** இல்லை, நடராஜ்.

**நட :** அட, சரிதாம்ப்பா, வா என்றால்?

[சந்தானத்தைக் கையைப் பிடித்து இழுத்துச் செல்கிறன்]

## காட்சி—4

[ரகுபதியின் அறை. அறையில் சோமு, ரகுபதி இருவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறர்கள்]

**சோமையா :** அது கிடக்கட்டும். ஏண்டா ரகு? 'இண்டர் காலேஜியேட் டோர்னமெண்ட்'டுக்கு நாள் நெருங்குகிறதே. இன்னும் நீ 'பிளேயர்ஸ்' குறித்து அனுப்பவில்லையா?

ரகு: குறிப்பதென்ன? நமது 'லெவன்ஸ்' இருக்கவே இருக்கிறது. அனுப்பவேண்டியதுதானே.

சோமை: என்ன காப்டன் ஸார்? எனக்கு இடமுண்டல்லவா?

ரகு: என்னடா சோமு கேள்வி? உனக்கில்லாமலா? உன்னைத்தான் 'ஆப் பேக்'காகப் போட்டிருக்கிறேன்.

சோமை: வேறு யார் யாரெல்லாம்?

ரகு: நீ ஒண்ணு, நான் ஒண்ணு, இன்னும் ரத்தின சாமி, நடராஜன்......

[இந்தச் சமயத்தில் நடராஜன் வருகிறான்]

நட: (வந்துகொண்டே) என்னப்பா! நான் இல்லாத வேளையிலே என்னைப்பற்றி என்ன பேசுறீங்க?

ரகு: நடராஜனா! வா வா, உன்னைப்பற்றி என்ன பேசறது? இல்லாத வேளையிலே ஏதாவது பேசறத்துக்கு நீ என்ன சந்தானத்தைப் போல் திருட்டுக்குந்தாணியா?

நட: (அழுத்தத்தோடு) ரகு! சந்தானத்தை உனக்குத் தெரியாது. அவன் திருடமாட்டான்.

சோமை: திருடமாட்டான்! (சிரித்து) என்ன நடராஜா, நீயும் ரகுபதியைப் போல் என்றைக்காவது பறி கொடுத்தால் தெரியும்.

நட: இதோ பார் சோமு, சந்தானமே என்னிடம் சொன்னான். நீங்கள் ஜாடையாகப் பேசியதை—

சோமை: (குறுக்கிட்டு) அதைக் கேட்டு அவன் நெஞ்சு குறுகுறுத்த தாக்கும்! அவன் முழிக்கிற முழியே

தெரியுதே. அவன் வந்ததும் போனதும், அவன் எடுத்திருக்காவிட்டால், என்னமோ இப்போதுதான் பெரிய கோபக்காரன் மாதிரி எழுந்து போவானேன் ?

ரகு : சோமு, அந்தப் பேச்சை விட்டுத்தள்ளு. எல்லாம் பிரின்ஸ்பாலிடம் ரிப்போர்ட் செய்திருக்கேன். கூப்பிட்டு விசாரிச்சா, சாயம் வெளுத்துப்போவுது.

நட : (வியப்போடு) பிரின்ஸ்பாலிடம் ரிப்போர்ட் பண்ணியிருக்கிறயா ?

ரகு : அதெல்லாம் பண்ணி நாலுநாள் ஆச்சேப்பா. சரி சரி, கிண்டின குப்பையைக் கிளறுதே, அவன் பேச்சை விடு.

சோமு : அது சரி, ரகு. 'மாச்' விஷயத்தையே மறந்துட்டியே. வேறு யாரெல்லாம் ?

ரகு : நடராஜன் ஒண்ணு; பிறகு ராமலிங்கம்...... பிறகு.

நட : என்ன ரகு ? சந்தானத்தைப் போடவில்லையா ?

ரகு : (விறைப்பாக) இல்லை !

நட : அவன்தானே நமது 'பெஸ்ட் புல் பாக்". அவனில்லாமல் என்ன விளையாட்டு ?

ரகு : அவனை 'ஸப்ஸ்டிட்டியூட்'டாகப் போட்டிருக்கிறேன்.

நட : (அழுத்தமாக) ரகுபதி, உன் சொந்த விரோதம் ஆயிரம் இருக்கலாம். அதற்காக, 'காலெஜ் டோர்னமெண்ட்'டில் ஒரு சிறந்த 'ப்ளேயரை' ஒதுக்கித் தள்ளலாமா ? ஒதுக்கித் தள்ளியிருந்தால் கூட, பரவாயில்லை. ஆனல் அவனைப் போன்ற ஒரு 'ஸ்போர்ட்ஸ்மானை' 'ஸப்ஸ்டிட்டியூட்'டாகப் போடுவது அவனை அவமானப்படுத்துவதாகும்.

சோமை : பெரிய மானி! திருடும்போது மட்டும் மான மும் வெட்கமும் இல்லையோ? பெரிய ஸ்போர்ட்ஸ் மானும்! திருட்டில்தான் ஸ்போர்ட்ஸ்மான்!

நட : சோமு, நீ பேசுவது சரியில்லை. அவன்தான் திருடினுன் என்பதை நிச்சயம் செய்வதற்குள் அவனைப்பற்றி நிந்திப்பது சரியல்ல.

ரகு : இதோ பார் நடராஜ். அவன் புத்தகத்தை எடுத் துச் சென்றதை, இவன் (சோமுவைக் காட்டி) தன் கண்ணுலேயே பார்த்திருக்கிருன்.

நட : அப்படியா சோமு?

சோமை ; ஆம், நான் பார்த்தேன்!

நட : சோமு, இனி உன்னுடன் நான் பேசுவதில் பய னில்லை. தெய்வம்தான் இனி சந்தானத்துக்குச் சாட்சி கூறவேண்டும்.

சோமை : திருடனுக்கு எந்தத் தெய்வமும் சாட்சி கூருது நடராஜ், இது அணு குண்டு யுகம்! வன் னியையும் கிணற்றையும் சாட்சிக்கு அழைக்கக் கூடிய திருவிளையாடல் காலமல்ல, அப்பனே! தெரியுமா?

நட : ரகு. நான் வருகிறேன், இனியும் நான் பேசினுல் வார்த்தை தான் தடிக்கும்.

(நடராஜ் போகிருன்.)

சோமை : (நடராஜன் போனபின்பு) போய் விட்டானு? அவனுக்கு இவன் சிபாரிசு, பார்த்தாயா ரகுபதி?

ரகு : புத்தகம் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டா லும் சரி, நான் சந்தானத்தின் மானத்தை வாங்கா மல் விடப்போவதில்லை. ஸப்ஸ்ட்டிட்யூட்டாகத் தான் அவனைப் போடுவேன். அது காப்டன் இஷ்டம்!

சோமை : சபாஷ்டா, பாண்டியா!

(ரகுபதியின் தோளில் தட்டிக் கொடுக்கிறன் சோமையா.)

## காட்சி—5

(சந்தானத்தின் அறை, நடராஜனும் சந்தானமும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறர்கள்.)

நடராஜன் : சந்தானம், இதற்கெல்லாம் வருத்தப்பட லாமோ? நீ இஷ்டப்பட்டால் விளையாடுகிறுய். இல்லையென்றுல்...

சந்தானம் : இல்லை, நடராஜ், வேண்டு மென்றே அவர் கள் என்னை 'ஐஸலேட்' பண்ணுவதை நீயும்தானே பார்த்தாய்?

நட : நான்தான் நேரிலேயே கேட்டேனே. குரோதம் உண்டாவதற்குக் காரண காரியம் இருக்கிறதா?

சந் : ஆனுல், எனக்கு அவர்கள் மீது எந்தக் குரோத மும் ஏற்பட வில்லையே.

நட : அது உன் குணம்.

சந் : நீ உணர்ந்த அந்தக் குணத்தை அவர்களும் ஏன் உணரவில்லை, நடராஜ்? அவர்களும் எனக்கு நண்பர்கள் தானே! என்னிடம் பேசாமல் அவர்கள் ஒதுங்குவதைக் கண்டு வருந்தவில்லை. ஆனுல் என்னை ஒரு 'ப்ளேய'ராகக்கூட மதிக்க வில்லை யென்றுல்?......

நட : அவர்கள் மதிக்க வில்லை யென்றுல் நீ ப்ளேயரில் லாமல் போய் விடுவாயா? காலேஜ் முழுவதும் உன் திறமை தெரியுமே.

சந் : நான் விளையாட வில்லையென்றால், நமது காலேஜ் மட்டுமல்ல, மற்ற காலேஜ் மாணவர்களும் ஏன் என்று நினைக்கமாட்டார்களா ?

நட : வாஸ்தவம்.

சந் : அப்படி நினைத்தால், நான் விளையாடாததற்குக் காரணம இந்தத் திருட்டுப்பட்டம்தான் என்று அவர்களுக்குத் தெரிந்து விட்டால், எனக்கு வேறு அவமானமே தேவையில்லை நடராஜ். ஸப்ஸ்டிட்டியூட்டாகப் போவதைவிட விளையாடப் போகாம லிருப்பதே மேல்; விளையாடாமல் இருப்பதைவிடச் சாவதே மேல்!

நட : அசட்டுத்தனமாய்ப் பேசாதே. எப்படியும் பிரின்ஸிபால் உன்னைக் கூப்பிட்டு விசாரிக்கவே செய்வார். அப்போது நீ உண்மையைச் சொல்லி விட்டால் போச்சு.

சந் : சொன்னால் மட்டும் அவமானம் போய்விடுமா ?

நட : வருவதற்கு முன்பே வந்ததாய் ஏன் கவலைப்படுகிறாய் ?

சந் : இன்னும் என்ன பாக்கி ? எனக்கு ஒன்றுமே ஓட வில்லை. மனசு எரிகிறது !

(கதவு தட்டும் ஓசை கேட்கிறது )

சந் : யாரது ?

வேலுசாமி : (வெளியிலிருந்து) நான்தான் சாமி, ப்யூன் வேலுசாமி.

சந் : வேலுசாமியா ? (எழுந்திருந்து கதவைத்திறக்கிறான்) வாப்பா உள்ளே.

(வேலுசாமி உள்ளே வருகிறான்.)

எங்கே வந்தே ?

வேலு : உங்களைப் பிரின்ஸிபால் கூட்டியாரச் சொன்ஞரு.

சந் : சரி, நீ போ. நான் வருகிறேன்.

வேலு : இல்லீங்க. கையோடே கூட்டியாரச் சொன்ஞரு.

நட : எதிர்பார்த்தது வந்தேவிட்டது. சந்தானம், போ. தைரியமாகப் போ.

சந் : (எழுந்துகொண்டே) சரி வா, வேலு.

[வேலுசாமியும் சந்தானமும் வெளிச் செல்கிறுர்கள்.]

## காட்சி—6

*[பிரின்ஸிபாலின் அறை. பிரின்ஸிபால் தமது ஆசனத்தில் அமர்ந்திருக்கிறுர். பக்கத்தில் கிடக்கும் நாற்காலியில் வேதநாயகம் அமர்ந்திருக்கிறுர். சந்தானம் உள்ளே வருகிறுன்.]*

சந்தானம் : (வணக்கம் செலுத்தியவாறே) குட்மார்னிங். ஸார்.

பிரின்ஸிபால் : குட்மார்னிங். வா இப்படி, உட்கார்.

*[சந்தானம் அங்கு கிடந்த பெஞ்சில் உட்காரப் போகுமுன் தன் தந்தையைப் பார்த்துவிடுகிறுன்.]*

சந் : (வியப்போடு) அப்பா, நீங்கள் எப்படி—?

வேதநாயகம் : திருட்டுப்பயலே ! அப்பா என்று அழைக்காதே.

சந் : (திடுக்கிட்டு) இதென்ன அப்பா, நீங்களும்—

வேத : ஏன் என்னை இங்கு பார்ப்பது ஆச்சரியமாயிருக்கிறதோ உனக்கு ? இங்கே படிக்கத் தானேடா உன்னை அனுப்பி வச்சேன் ! இல்லெ—அடுத்தவன் சாமானைத் திருடப் படிக்க வந்தாயா ?

சந் : அப்பா! நீங்களுமா என்னை—

வேத : அப்பாவாவது, அம்மாவாவது? கேட்டதுக்குப் பதில் சொல்லடா.

சந் : அப்பா!......நான் திருடினேன் என்று நீங்களும் நினைக்கிறீர்களா?

வேத : இல்லை. நீ பரமயோக்கியன். நீ திருடியதற்குச் சாட்சி இருக்கிறபோது?

சந் : சாட்சியா? இது அநியாம்! அபாண்டம்!

வேத : இனிமேல் உன்னிடம் சாட்சியைக் கொண்டு வந்து நேரில் நிரூபிக்க வேண்டுமோ? கொஞ்சமாவது மானம் ஈனம் ஏதாவது இருந்தால்தானே! நீ எடுக்காமலாடா இவ்வளவு பெரிய ரிப்போர்ட்?

சந் : அப்பா! அந்தப் புத்தகத்தை நான் கண்ணால் கூடப் பார்த்ததில்லை!

வேத : கையால் எடுத்தாய்போலிருக்கு!

சந் : இப்படியெல்லாம் கேட்டு என்னை வதைக்க வேண்டாம். எல்லோரும் சேர்ந்துகொண்டு என் மேல் அபாண்டப் பழி சுமத்தினால்—

வேத : அதெப்படி? அவ்வளவு மாணவர்களும் வீணாக உன்மீது பழி சுமத்துவார்கள், இது நிஜமில்லையானால்?

சந் : அப்பா! இல்லவே இல்லை, வீணாக என் மானத்தைக் குலைக்கிறார்கள்.

வேத : என் மானத்தையல்லவா நீ குலைத்துவிட்டாய்! நெருப்பு இல்லாமல் புகை எப்படியடா வரும்? காரணமில்லாமல்—

சந் : காரணமிருந்துவிட்டால் மட்டும் பொய் உண்மையாகிவிடுமா ?

வேத : உன்னிடம் வாதாட நான் இப்போது என் வேலைகளை யெல்லாம் போட்டுவிட்டு இங்கு வரவில்லை. நீ தானேடா எடுத்தாய் ?

சந் : இல்லை, அப்பா இல்லை !

வேத : சரி, உன்னிடம் பேசிப் பிரயோஜனமில்லை. உடனே புறப்படு.

சந் : எங்கே அப்பா ?

வேத : எங்கேயா ? வீட்டுக்குத்தான். உன்னைக் கையோடு அழைத்துக்கொண்டு போகத்தான் வந்திருக்கேன். இது நான் படிச்ச காலேஜேயின்னு உன்னை இங்கே எவ்வளவு சிரமப்பட்டுச் சேர்த்தேன், தெரியுமா ? எனக்குப் பெருமையைச் சம்பாதித்துத் தந்துவிட்டாய் நீ !

சந் : அப்பா ! அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரக்கூடாது. நான் குற்றவாளியல்ல, நான் நிரபராதி என்று எல்லோரும் தெரிந்துகொள்ளப் போகிறார்கள். பாருங்கள்.

வேத : பரமயோக்கியன், இவன் ! பிரின்ஸிபால் பெரிய மனசு பண்ணியிருக்கிறார். உன்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து உன்னை 'டிஸ்மிஸ்' பண்ண வேண்டியதிருக்க, என் சொல்லுக்காக 'டிரான்ஸ்பர் சர்ட்டிபிகேட்' தந்திருக்கிறார்.

சந் : டிரான்ஸ்பர் சர்டிபிகேட்டா ? அப்பா, ஒருநாளும் முடியாது. என்மேல் ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்க முடியாது. என்னைக் காலேஜை விட்டும் அனுப்ப முடியாது !

வேத : என்னடா சட்டம் பேசுகிருய்? பெரிய அரிச்சந்திரன். வா. வேறே காலேஜிலே சேர்க்கப் பார்க்கிறேன். இடம் கிடைத்தால் சரி. கிடைக்காவிட்டால் உன் தலைவிதி!

சந் : அப்பா! இந்தக் காலேஜைவிட்டு நான் அசைவேன் என்று மட்டும் எண்ணுதீர்கள். என் படிப்பைப்பற்றி எனக்கு அக்கறையே இல்லை. ஆனல் நான் குற்றவாளி அல்ல என்பதை நிரூபிக்கும் வரை நான் வரப்போவதில்லை.

வேத : செய்வதையும் செய்துவிட்டு முரண்டு பண்ணுதேடா முட்டாள்! எனக்கும் உனக்கும் அவமானச் சின்னமாக நடமாடித் திரிய வேண்டாமடா, இங்கே.

சந் : அவமானச் சின்னம் இல்லையப்பா, இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்திருக்க முடியாது என்பதை என் நண்பர்கள் அறியும்வரை நான் இங்கிருந்து விலகிப்போவது என் மனச்சாட்சிக்கே விரோதம். அப்பா.

வேத : மனச்சாட்சியாவது, மண்ணுங்கட்டியாவது?

சந் : எனக்கு ஏற்பட்ட அவமானத்தைக் கழுவாமல் நான் வரமுடியாது. என் நண்பர்களே இந்தக் கெடுதியைச் செய்தார்கள். அவர்கள் அதை உணரும் வரை நான் வரமாட்டேன். என்மீது சுமத்தப்பட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டு நான் வரமாட்டேன்; வரமாட்டேன். இது நிச்சயம்!

வேத : வீசி விளாசி மட்டும் பேசத் தெரிகிறது.

சந் : (முட்டிவரும் உணர்ச்சியோடு) அப்பா! உங்கள் பிள்ளை திருடனல்ல; திருடனல்ல! இதை நம்புங்கள் அப்பா! நம்புங்கள்! (விம்முகிருன்; கண்ணில் நீர் கசிந்து வழிகிறது.

வேத : வெறும் மாய்மாலக் கண்ணீர் !

பிரின்ஸி : மிஸ்டர் வேதநாயகம், பொறுங்கள். (சந்தா னத்திடம்) சந்தானம், நீ கிளாசுக்குப் போ.

வேத : இல்லை. ஸார்: இவனை—...

பிரின்ஸி : பொறுங்கள், மிஸ்டர் வேத நாயகம். குற்ற வாளியாக இருந்தால், அவன் இவ்வளவுதரம் வாதாடி யிருக்கமாட்டான். இதுவே சரியான நிரூபணம். சரி கிளாசுக்குப் போ சந்தானம்.

[சந்தானம் ஒன்றும் பேசாமல் கண்களைத் துடைத்தவாறே வெளியேறுகிறான்.]

வேத : (சந்தானம் போகும்போதே) இல்லை ஸார். அவ னுக்கு ஒரு பாடம் கற்பித்தால்தான் சரி.

பிரின்ஸி : இல்லை, வேத நாயகம். உங்கள் மகன் திருட னில்லை. இல்லாவிட்டால், இப்படி மனம் கொதித் துப் பேசியிருக்க மாட்டான். நாம் அவனுக்கு ஒரு பாடமும் கற்பிகக வேண்டாம். அவனிடமிருந்து தான் நாம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்கள் போய்வாருங்கள், மற்றவற்றை நான் கவனித்துக் கொள்கிறேன்.

— திரை —

—1950

# பலி

**பாத்திரங்கள் :**

அக்பர் பாதுஷா — மொகலாயச் சக்கரவர்த்தி

ஸலீம் — அக்பரின் மகன் (ஜஹாங்கிர்)

மேஹர் உன்னிஸா — ஸலீமின் காதலி (நூர்ஜஹான்)

அபுல் பஸல் — அக்பரின் மந்திரி.

## காட்சி—1

*[அரண்மனை நந்தவனம். மேஹர் உன்னிஸா ஒரு பளிங்கு ஆசனத்தின்மீது அமர்ந்திருக்கிருள். மாந்தளிர்களை அலகால் கோதும் கருங்குயிலின் நாதம் கேட்கிறது. ஏக்கம் நிறைந்த குயிலின் குரலைக் கேட்டு அந்தத் திசையில் மேஹர் திரும்புகிருள்.]*

**மேஹர் :** கூ; கூ; கூ! (குயிலைப் போலவே தானும் கூவிக் காட்டுகிருள் ; குயிலும் எதிரொலிப்பது போல் கூவுகிறது.)

ம்...அப்படித்தான்! எங்கே கூவு. கூ; கூ; கூ.
(குயில் கூவுகிறது)

குயில் எவ்வளவு அழகாகக் கூவுகிறது! கூ; கூ;

[பக்கத்துச் செடியில் சலசலப்புக் கேட்கிறது. செடி மறைவில் ஒளிந்து நின்ற ஸலீம் வெளியே வருகிருன்]

ஸலீம் : குயிலா கூவுகிறது ? இல்லை. வசந்தமல்லவா பாடுகிறது ?

மேஹர் : யாரது ?......ஸலீம் !

ஸலீம் : மேஹர் !

மேஹர் : இளவரசரா ? ஏது பொய்கூடச் சொல்லக் கற்றுக் கொண்டீர்கள் போலிருக்கிறதே. வசந்தமாவது, பாடவாவது ?

ஸலீம் : வசந்தம்தான் பாடுகிறது ! பொய்தான் கவியின் ஜீவநாடி. தெரியுமா ?

மேஹர் : ஏது ? இளவரசர் ஸலீம் கவியரசராகி விட்டாற் போலிருக்கிறதே.

ஸலீம் : மேஹர், உன் கண்களில் ஊறித் ததும்பும் அழகைப் பருகிஞல், கவிதைமட்டுமா வரும் ? காவியங்களே கரை புரளுமே !

மேஹர் : போதும், கவிஞரே ! என்னிடம் பேச வந்தீர்களா ? இல்லை, என் கண்களிலிருந்து கவிதையைக் களவாட வந்தீர்களா ?

ஸலீம் : ஏது ? நீயும் கூடப் பொய் சொல்ல ஆரம்பித்து விட்டாயா ? என் உள்ளத்தையே திருடி வைத்துள்ள நீயா என்னைத் திருடன் என்கிருய் ?

மேஹர் : கவி மழை நிற்கட்டும், ஸலீம். சரி வேட்டைக்குப் போஞல் எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டுமா ? நேற்றே வருவதாய்க் கூறினீர்கள், எப்போது வந்தீர்கள் ?

ஸலீம் : இன்று காலையில்தான். இமயச்சாரலில் வேட்டை யாடுவதென்றால் எவ்வளவு ஆனந்த மாக இருக்கிறது தெரியுமா ? நேற்றுக் காலையில் நடந்ததை நினைத்தால், அந்த ஸலீம்தானா உன் முன் நிற்கிறேன் என்று தோன்றுகிறது.

மேஹர் : ஏன் ? என்ன நடந்தது ?

ஸலீம் ; புலி !

மேஹர் : என்னது புலியா ?

ஸலீம் : ஆம். பதினாறடி வேங்கை. ஆனால், அதன் மரணம் தான் என் வீரத்துக்குப் பெருமை தேடித் தந்தது ?

மேஹர் : கொன்றுவிட்டீர்களா ?

ஸலீம் : இல்லாவிடில், உனக்கு நான் இந்தப் பரிசைக் காணிக்கை செலுத்த முடியுமா ?

[புலி நகம் கோத்த மாலையை அவள் மார்பில் அணி விக்கிறான்]

மேஹர் : (மாலையைத் தொட்டுப் பார்த்து) என்ன இது? அதன் நகங்களா ? அப்பா ! எவ்வளவு அகலம் ! முனையைத் தொட்டாலே ரத்தம் வந்துவிடும் போலிருக்கிறதே. எத்தனை கூர்மை !

ஸலீம் : மேஹர், உன் மார்பை நினைத்தேன். உன் மார்பை இந்தப் புலி நகம் அலங்கரித்தால் என்று எண்ணினேன். அவ்வளவுதான், என் தோள்களில் எங்கிருந்து புதுச் சக்தி வந்து புகுந்தது என்றே புரியவில்லை.

மேஹர் : நன்றாயிருக்கிறது, இந்த ஏழையின் மார்பை அலங்கரிக்க, தாங்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஒரு புலியுடன் போராடுவதா ?

ஸலீம் : மேஹர், உனது அன்புக்காக நான் எதுவும் செய்வேன். நேற்று வரை அந்தப் புலி இந்த நகங்களைக் கொண்டு எத்தனை உயிர்களைக் கிழித்தெறிந்ததோ?, இன்றோ அதன் மரணம் உன் மார்பை அலங்கரிக்கும் புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொடுத்து விட்டது.

மேஹர் : பக்கத்துச் செடியிலிருந்து ஒரு மாதுளம் பூவைப் பறித்துக் காட்டி) ஸலீம்! இந்த மாதுளம் பூவைப் பார்த்தீர்களா? ரத்தத்தில் தோய்ந்தது போல் அத்தனை சிவப்பு!
(ஸலீம் மௌனம் சாதிக்கிறான்)

மேஹர் : ஸலீம்! என்ன இது? ஏன் உங்கள் முகம்?...

ஸலீம் : மேஹர்,.தெளிந்திருந்த என் மனத்தைக் கலக்கி விட்டு விட்டாயே! அனார்க்கலியை நினைவூட்டும் இந்த மலரை — இந்த மாதுளையை ஏன் என் முன் காட்டினாய்?

மேஹர் : மன்னிக்கவேண்டும், ஸலீம். ஆனால்... உங்கள் மனதை என்னால் இன்னும் அறியமுடியவில்லையே ஸலீம்.

ஸலீம் : ஏன்? என் இதயக் கதவுகளை உனக்காக எப்போதும் திறந்துதானே வைத்திருக்கிறேன்!

மேஹர் : அதைச்சொல்லவில்லை, அனார்கலியின் நினைவு இன்னும் தங்களுக்கு மறக்கவில்லையா?

ஸலீம் : அதெப்படி மறையும் மேஹர்? என் உயிருக்கு உயிராய்......(பெருமூச்சு) ஆனால் பாதுஷா அவளுக்கு இழைத்த கொடுமையை நினைத்தால் இன்னும் என் நெஞ்சம் படபடக்கிறது!

மேஹர் : ஸலீம், அனார்கலியைக் காதலித்த தாங்கள் மீண்டும் என்னைக் காதலிப்பதன் அர்த்தம்?

ஸலீம் : அர்த்தமா? அதை உன் அழகிடம் கேள்.

மேஹர் : என் அழகா? 'மலர் மலராய்த் திரியும் வண்டுக்கும் உன் இளவரசருக்கும் என்ன வித்தியாசம்?' என்று அது பதில் கேள்வி கேட்டால்?

ஸலீம் : மேஹர் வீணுக ஏன் கவலைப்படுகிருய்? இனி யாரையும் காதலிக்க மாட்டேன்,

மேஹர் : அனூர்க்கலியைப் போல் நானும் பிரிய நேரிட்டால்—?

ஸலீம் : அனூர்கலியைக்கூட நான் பிரிந்திருக்கமாட்டேன். ஆனுல், அப்போது உரமேருத என் இளம் இதயத்தில் பாதுஷாவுடன் உரிமைக்காகப் போராடப் போதிய தைரியமில்லை.

மேஹர் : இப்போது மட்டும் அந்தத் தைரியம் வந்து விட்டதா ஸலீம்?

ஸலீம் : வந்து விட்டதாகவே எண்ணுகிறேன். மேஹர், இந்த வாலிப வயதில் நான் யார் மீதாவது அன்பு செலுத்த வேண்டியவன். அது நாடாயினும் சரி, நங்கையாயினும் சரி. அந்த அன்பு மட்டும் இல்லையென்ருல், நான் என்றே சமாதிக்கடியில் தூங்கிப் போயிருப்பேன்.

மேஹர் : நல்ல வார்த்தை சொல்லுங்கள் ஸலீம்! சரி, ஒரு விண்ணப்பம்.

ஸலீம் : ஒன்ரு? ஒன்பதாயிரம் வேண்டுமானுலும் கேள். இந்த ஸலீம் உன் காதலுக்காக எதுவும் செய்வான்.

மேஹர் : தாங்கள் என் மீது காட்டும் கருணைக்காகத் தான் ஸலீம்.

ஸலீம் : என்ன அது?

மேஹர் : இனிமேல் இந்த வேட்டை விளையாட்டு என்றெல்லாம் தாங்கள் என்னை விட்டு பிரிந்துவிடக் கூடாது.

ஸலீம் : மேஹர், என்ன இது? நான் வேட்டைக்குச் செல்லாவிடில் இந்தப் புலி நகத்தைப் பரிசளிக்க முடிந்திருக்குமா ?

மேஹர் : எனக்குப் பரிசு எதற்கு? உங்கள் அன்பு மட்டும் மாருதிருந்தால் அதுவே போதும்.

ஸலீம் : மேஹர், உன் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லையே, அதன் மர்மம் ?

மேஹர் : மர்மமொன்றுமில்லை அரசே. இந்த அரண்மனையின் கோலாகலமும் கலகலப்பும் எனக்குப் பிடிக்கவில்லை. தாங்கள் மட்டும் அருகில் இருந்தால், எனக்கு ஒரு ஆறுதல்.

ஸலீம் : இந்தச் சலிப்பிற்கு என்ன காரணம் மேஹர் ?

மேஹர் : காரணம் ? ஸலீம், அரண்மனையில் எங்கு திரும்பினாலும் இளவரசிகள். அவர்களோடு பழகும்போது எனக்கென்னவோ போலிருக்கிறது. என்ன இருந்தாலும் நான் ஒரு அனாதை; பணிப்பெண்.

ஸலீம் : பணிப்பெண்ணா ? ஸலீமின் இதயத்துக்கு உரிமையான பின், நீ நாளைய மொகலாய சாம்ராஜ்யத்தின் ராணி.

மேஹர் : இல்லையரசே. வரப்பைத் தாண்டச் சக்தியற்றவள் வாய்க்காலைத் தாண்ட முடியுமா ? உங்களுக்கும் எனக்கும் இடையில் அகண்ட பள்ளமல்லவா இருக்கிறது !

ஸலீம் : பள்ளமானால் என்ன? இந்த ஸலீமின் அரவணைப்பில் நீ பள்ளங்களை மட்டுமென்ன—காற்றிலேறி விண்ணையும் சாடமாட்டாயா?

மேஹர் : இல்லை யரசே, உங்கள் மனம் மிகவும் இளகியது, சமயத்தில் நழுவ விட்டுவிடுவீர்கள்!

ஸலீம் : மேஹர், இதென்ன குற்றச்சாட்டு? உன் பேச்சுப் புதிராயிருக்கிறதே?

மேஹர் : ஆம், மறைப்பதில் பயன் என்ன? பாதுஷாவுக்கு நம் உறவு தெரிந்து விட்டது.

ஸலீம் : ஏன் வீணாகக் கவலைப்படுகிறாய்? அரசனுக்கு உலகத்து மூலையில் நடக்கும் விஷயங்கள் எல்லாம் தெரியலாம்; ஆனால் தன் அரண்மனை ஜனானாவுக்குள் நடப்பதெல்லாம் தெரியுமா? தன் முதுகைத் தானே பார்த்துக்கொள்ள முடியுமா?

மேஹர் : ஸலீம், நீங்கள் சூதுவாது அறியாதவர்கள். அரண்மனைக்குள்ளும் ஒற்றர்கள் உண்டு என்பதைத் தாங்கள் மறந்து விடுகிறீர்கள்.

ஸலீம் : இருந்தால் என்ன? என்றும் நீ எனக்கே உரியவள்.

மேஹர் : அந்த உரிமைக்குத்தான் பங்கம் விளைந்து விடுமோ என்று அஞ்சுகிறேன். அனார்க்கலியின் கதியை நினைத்தால்—? அவளைப்போன்ற அனாதை தானே நானும்? என்னையும் அரசர் கொன்று விட்டால்!?

ஸலீம் : மேஹர், நான் முன்மாதிரி கோழையல்ல; என் வாளும் தூங்கிப் போகவில்லை.

(உறையில் கை போடுகிறான்.)

மேஹர் : என்ன இது? கையை எடுங்கள். பெற்றெடுத்த தந்தை மீதா வஞ்சம்?

ஸலீம் : நீயும் போய்விட்டால், பின்னர் நான் மட்டும் உயிர் வாழ முடியுமா? நீதானே என் உயிர்!

மேஹர் : ஸலீம். நம் அன்பு என்றும் இப்படியே நிலைத்திருக்க அல்லா அருள்புரிய வேண்டும்.

[திடீரென்று பெண்களின் கலகலப்பும் சிரிப்பொலியும் கேட்கிறது]

ஸலீம் : அதென்ன கலகலப்பு?

மேஹர் : இளவரசிகளின் குதூகலம். அவர்கள் நந்தவனத்துக்கு வருகிறார்கள்.

ஸலீம் : சரி, மேஹர். அப்போது நான் வரட்டுமா? நாளை உன்னை எப்போது சந்திப்பது?

மேஹர் : நாளை மாலை; ராணி மஹாலில்.

ஸலீம் : எங்கே?

மேஹர் : ராணி மஹாலில். இனி நமது சந்திப்பெல்லாம் அங்கேதான்.

ஸலீம் : நான் வருகிறேன் மேஹர்.

[ஸலீம் செல்கிறான். பாதக்குறடின் ஒலி தேய்ந்து மடிகிறது]

மேஹர் : (தனக்குத்தானே) அதிகாரத்தால் அரசர்கள் உலகை ஆளட்டும். நான் என் அழகாலேயே உலகை ஆண்டு விடுவேன். நான் நூர்ஜஹான்! பணிப்பெண்ணல்ல!

## காட்சி—2

[மாலை நேரம். யமுனைக் கரையில் அமைந்த அக்பர் பாதுஷாவின் அரண்மனை. தங்க வெயில் அரண்மனைச் சாளரங்களில் தொங்கும் மக்மல் திரைகளை மின்வெட்டச் செய்கிறது. 'கொட கொட' வென்று இரையும் ஹுக்காவின் புகையை ஜீரணிக்க முயன்று கொண்டிருக்கிறார் பாதுஷா. பக்கத்திலே அபுல் பஜல் அமர்ந்திருக்கிறார் ]

அக்பர்: அபுல் பஜல்! என் ராஜ்யத்தை ஒரு பணிப் பெண் ஆள்வதா?

பஜல்: ஆனால், ஸலீமை நினைத்தால் விட்டுக்கொடுத்தால் என்ன என்றுதான் ஒரு சமயம் தோன்றுகிறது.

அக்: என்ன இப்படிச் சொல்கிறீர்? ஸலீம் பணியாளனல்ல; அக்பர் சக்கரவர்த்தியின் தலைமகன்.

ப: உண்மை. ஆனால் மேஹரின் காதலன் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

அக்: பஜல்! ஸலீமின்மீது உமக்கு ஏன் அத்தனை அனுதாபம்?

ப: அனுதாபமில்லை அரசே. காதல் முறிவு வாழ்வில் கசப்பை ஊட்டிவிடும். ஏற்கெனவே அனார்கலியின் முடிவு ஸலீமை மிகவும் பாதித்திருக்கிறது.

அக்:- அனார்க்கலியின் கதியை நினைப்பூட்டாதீர்! அவளை அவ்வாறு சமாதி செய்ய என் நெஞ்சம் இரும்பாய்த்தான் இருந்திருக்க வேண்டும். உண்மையில் நான் பாதகம்தான் இழைத்துவிட்டேன்.

ப: அந்தப் பாதகத்திற்குப் பிராயச் சித்தமாகவாவது மேஹரை ஸலீமுக்குக் கொடுத்து விடலாமல்லவா?

அக் : பஜல்! வார்த்தைகளால் என் வாயைப் பிடுங்கப் பார்க்காதே, மேஹர் ஸலீமுக்கு உரியவளல்ல; ஏற்றவளுமல்ல!

ப : ஷா இன் ஷா? என்ன இது?

அக் : ஆம் பஜல். ஸலீம் மேஹரை மறந்து விட வேண்டும்.

பா : அரசே! உங்கள் மனத்திலுள்ள மர்மம்தான் என்ன? அனார்க்கலியைப் போல்,—

அக் : (லேசாகத் தனக்குள் நகைத்து) பயப்படாதீர். அதிகார வெறி குறையாத வேளையில் அனார்க்கலியின் முடிவு நேர்ந்தது. இபபோதோ வயோதிகத்தின் நடுக்கம். கொலைக்கு என் மனம் இடம் தராது.

ப : தங்கள் முடிவுதான் என்னவோ?

அக் : மேஹருக்கு மணம் முடித்துவிடப் போகிறேன்.

ப : அந்தப் பாக்கியசாலி யாரோ?

அக் : ஷேர் கான்!

ப : ஷேர்கானா? சாதாரணப் படைத்தலைவன்தானே!

அக் : பணிப்பெண்ணுக்குப் படைத்தலைவன் சக்கரவர்த்திதான்.

ப : மேஹர் வெறும் பணிப் பெண்ணல்ல; அழகின் ராணி!

அக் ; அழகின் ராணியென்றால் அந்தஸ்துக்கும் ராணியாகிவிடலாம் என்று அர்த்தமில்லையே!

ப : பாதுஷா! மேஹர் உண்மையில் தப்பிப் பிறந்து விட்டாள். அவளுடைய அழகுக்கும் அறிவுக்கும் அவள் ஒரு இளவரசியாகப் பிறந்திருந்தால்—

அக் : அப்போது, ஸலீமுக்கு சபாஷ் கூறியிருப்பேன், பஜல்!

ப : இப்போது ஸலீமின் துர்ப்பாக்கியம் மேஹரை யடையக் கொடுத்து வைக்கவில்லை.

அக் : ஸலீம் துர்ப்பாக்கியனல்ல, பஜல்! அக்பர் சக்கரவர்த்தியின் மகனுக்குப் பெண் தர ஆயிரம் பேர் முன் வருவார்கள்.

ப : இருந்தாலும் காக்காய்ப் பொன் தங்கமாகி விடுமா?

அக் : ராஜ்ய வளர்ச்சியைத் தடை செய்வது தங்கமே யானாலும் அதைத் தடுத்தே தீருவேன், பஜல்! நீரும் தான் பார்த்து வருகிறீரே. ராஜ்ய ஒற்றுமைக்காக நானே ஒரு ராஜபுத்திரப் பெண்ணை மணந்து இந்துக்களைக் கௌரவித்தேன் இல்லையா ?

ப : தங்களை எனக்குத் தெரியாதா ? என்றாலும்...... மேஹர் விஷயத்தில் சிறிது கருணை காட்டலாம்.

அக் : கருணையா ? காதல் விஷயத்தில் கருணை காட்டுவதென்பது அக்பர் பாதுஷாவிடம் கிடையாது. பஜல்! இப்போது நம் நாட்டில் குடியேறும் வெள்ளையரின் ராஜகுமாரியைக் கூட, ஸலீமிற்கு மணம் செய்து வைக்கத் தயார்.

ப : இதென்ன பாதுஷா ? ஒவ்வொரு இனத்திலிருந்தும் பெண் எடுக்கத் தொடங்கினால், இஸ்லாத்தின் புனிதமே மாசுபட்டு விடுமே.

அக் : குர்ஆனைக் கையில் ஏந்திக்கொண்டு மௌல்வி அஹமத்துல்லா அக்னிப் பரீட்சையில், நெருப்பில் குதித்து வெளியேறினாரே—அப்படிப் பட்ட புனித இஸ்லாத்தையா அக்பர் பங்கப்படுத்த விரும்புவான் ? அரசியலில் மதத்துக்குப் பிரதானம்

கொடுக்க விரும்பாதவன் நான். மதம் ராஜ்யத்தைப் பிளவுபடுத்தும். நான் விரும்புவதோ ஒன்றுபட்ட சாம்ராஜ்ய அரசியல். தெரிந்ததா ?

ப : அப்படியானால், மேஹறரை ஸலீம் அடைய முடியாது என்று சொல்லுங்கள்.

அக் : ஆம், ஸலீமிடம் அப்படித்தான் கூறப்போகிறேன்.

[சறுக் சறுக் என்று பாதக்குறடு கட்டியங்கூற ஸலீம் வந்து சேர்கிறான்.]

(ஸலீமை நோக்கி) ஸலீமா ? வா இப்படி.

[ஸலீம் வந்து அமர்கிறான்.]

ஸலீம் ! வேட்டையிலிருந்து எப்போது திரும்பி வந்தாய் ?

ஸலீம் : நேற்றுக் காலையில்தான். சாரலிலிருந்து திரும்பி வரவே மனமில்லை.

அக் : (மெல்லச் சிரித்து) கங்கை வெள்ளத்தில் நீந்திய ஹுமாயூனின் பேரனல்லவா ? வேட்டையில் நாட்டம் ஏனிருக்காது ?

ஸலீம் : ஆம் தந்தையே. தங்கள் புதல்வனான எனக்கு என்ன குறை ?

அக் : உண்மைதான் ஸலீம்! ஆனால்...நீ உன்காலத்தை வீணில் போக்கிவிடாதே. அக்பர் பாதுஷாவின் மகன், மொகலாய சாம்ராஜ்யத்தின் வாரிசு என்பதை மறந்து விடாதே.

ஸலீம் : என்ன சொல்கிறீர்கள் ?

அக் : உன் வேட்டைகளையும் விளையாட்டையும் நிறுத்திவிட்டு ராஜ்ய பரிபாலனத்தில் பங்கெடுத்துக்கொள் என்று தான் சொல்கிறேன்.

ஸலீம் : அதற்குள்ளாகவா ?

அக் : ஆம். இப்போதே நீ ராஜ்ய பரிபாலனத்தில் பழக்கப்பட வேண்டும். இல்லையெனில் பின்னால் இடைஞ்சல் ஏற்படும்,

ஸலீம் : இடைஞ்சலா ? ஸலீமின் வாள் நிழலில் இடைஞ்சலென்றால்—சிரிக்கத்தான் தோன்று கிறது !

அக் : ஸலீம் ! உன் பாட்டனார் ஹுமாயூன் சிறந்த வீரர்தான். எனினும் ராஜ்ய பரிபாலனத்தில் அசட்டையாயிருந்ததால்தான், ஷெர்ஷா அவரை விரட்டியடிக்க முடிந்தது. உனக்கோ அந்த விதமான சங்கடங்கள் எதுவும் இல்லை. பைராம் கானைக் கூட, நான் தொலைக்க வேண்டியிருந்தது.

(ஸலீம் மௌனமாயிருக்கிறான்.)

அக் : சரி, ஸலீம், நாளை முதல் நீ அபுல்பஜல், ராஜா தோடர்மால் முதலியவர்களோடு வந்து ராஜ்ய விஷயங்களைக் கற்றுக்கொள்.

ஸலீம் : அப்படியே ஆகட்டும். நான் வரட்டுமா ?

[இடத்தை விட்டு எழுகிறான்]

அக் : ஏன் இத்தனை அவசரம் ? மேஹரைச் சந்திக்கும் நேரம் வந்து விட்டதோ ?

ஸலீம் : (திகைத்து) என்ன ?

அக் : இன்று ராணிமஹாலில் சந்திப்பதாக நீ வாக்களிக்கவில்லை ?

ஸலீம் : இதெல்லாம்,—(ஸலீமின் குரல் நடுங்குகிறது)

அக் : (நகைத்து) பாதுஷாவின் மகன், பட்டத்திளவரசனின் நடவடிக்கைகளைக் கவனிக்கக்கூட, மொக

லாய சாம்ராஜ்யத்தில் ஒற்றர்கள் இருக்கிறுர்கள், ஸலீம். உங்கள் உறவு எனக்கு முன்பே தெரியும்.

ஸலீம் : உண்மை என்ருவது தெரிந்தாக வேண்டியது தானே.

அக் : என்ன சொல்கிருய், ஸலீம் ?

ஸலீம் : அவளை நான் காதலிக்கிறேன்.

அக் : அக்பரின் அரசியலில் காதலுக்குச் சிறிதும் இடம் கிடையாது என்பதை நீ மறந்துவிடுகிருய், ஸலீம்.

ஸலீம் : காதல் தெய்வ நியதி, அரசனும் அதை மீற முடியாது.

அக் : (சிரித்து) தெய்வ நியதியா ? காதல் மனிதனின் மிருக இச்சையின் வெளிப்பூச்சு ; முலாம் !

ஸலீம் : என்ன ?

அக் : எனக்குத் தெரியாதா ? கேவலம், மிருக இச்சை மேஹரைக் கைபிடிக்கச் சொல்லுமா ?

ஸலீம் : ஆம். நான் மேஹரை மணந்து கொள்ளத் தான் போகிறேன்.

அக் : மணக்கலாம்—அக்பரின் மகனுய்ப் பிறக்கா திருந்தால் !

ஸலீம் : சாதாரண மனிதனுக்குள்ள உரிமைகூட, ராஜகுமாரனுக்கு இல்லையா ?

அக் : இல்லை, ஸலீம், உன் காதல் மொகலாய சாம்ராஜ் யத்தையே நிலைகுலையச் செய்துவிடும். காதலால் எத்தனை சாம்ராஜ்யங்கள் நாசமாயின. கிரேக்க, ரோம, எகிப்திய, லங்கா சாம்ராஜ்யங்கள் எல்லாம் அடைந்த கதி தெரியாதா ? மேஹரின் காதல்

உனக்கு நல்லதுக்கில்லை.

ஸலீம் : நல்லதில்லையா ?

அக் : ஆம், உன் காதலை முளையிலேயே கிள்ளி யெறிந்துவிடு.

ஸலீம் : முடியாது, அது வேரூன்றி விட்டது.

அக் : (கோபத்தோடு) என்ன உளறுகிறாய் ?

ஸலீம் : ஆம். மேஹரை நான் கைவிடமுடியாது.

அக் : ஸலீம், நீ சக்கரவர்த்தி அக்பரிடம் பேசுகிறாய் என்பது ஞாபகம் இருக்கட்டும். எனது வார்த்தை ஒவ்வொன்றுக்கும் அர்த்த முண்டு. ராஜ தண்டனை உனக்குக் காத்து நிற்கலாம்.

ஸலீம் : எவ்விதத் தண்டனையையும் ஏற்கச் சித்தமா யிருக்கிறேன்.

அக் : ஸலீம், அரசன் என்ற முறையில் ஆணையிடு கிறேன். மேஹரை மறந்துவிடு.

ஸலீம் : அதைத் தவிர, வேறு எதுவும் சொல்லுங்கள்.

அக் : நீ அவளை மறக்கமாட்டாய் ?

ஸலீம் : இதற்குள் தாங்கள் அதைத் தெரிந்து கொண் டிருக்க வேண்டும்.

அக் : தெரிந்து கொண்டேன்... உனக்கும் தெரியப் படுத்த வேண்டாமா ?

ஸலீம் : நான் தெரிந்துகொள்ள என்ன இருக்கிறது?

அக் : மேஹரின் கதியைப் பற்றி—

ஸலீம் : அவளையும் கொன்று விட்டீர்களா, அரசே !

அக் : இல்லையில்லை, மேஹருன்னிஸா வேறொருவ னுக்கு மனைவி. தளபதி ஷேர்கானுக்கு மணம் முடிக்கத் தீர்மானித்துவிட்டேன்.

ஸலீம் : உறைவாளைத் தவிர வேறொன்றும் அறியாத போர்த் தலைவனுக்கா உலகத்தின் ஜோதியைப் பரிசளிப்பது? மேஹரை அடைய ஷேர்கான் அருகதையற்றவன்.

அக் : பணிப் பெண்ணுக்குப் படைத் தலைவன். ஷேர் கான் அவளை அடைந்தே தீருவான். நீ மேஹரை மறந்தே ஆகவேண்டும்.

ஸலீம் : மேஹரை மறப்பதா? முடியாது அரசே! ஒருக்காலும் முடியாது! என் உயிருக்குயிரான அனார்க்கலியை உயிரோடு சமாதி செய்தீர்கள். அந்த மாதுளை மொக்கைக் கசக்கிப் பிழிந்தீர்கள்! உலகத்தின் ஜோதியான என் மேஹரை உயிரோடு ஒரு போர் வீரனுக்குப் பலியிடப் போகிறீர்கள். பாதுஷா! அனார்க்கலியையும் மேஹரையும் என்னை யும் நீங்கள் பலியிடவில்லை; காதல் என்ற உணர்ச் சியையே உங்கள் ராஜ்ய வெறி என்ற பலிபீடத் தில் பலியிடுகிறீர்கள்!

அக் : ஸலீம், பதறாதே!

ஸலீம் : பதற்றமா? பாதுஷா அக்பரின் ராஜ்யவெறி மகனின் காதலைக்கூடக் கொன்றுவிட்டது என்ற பழி உலகம் உள்ள வரையிலும் நிலவட்டும்!

[ஸலீம் சபித்துத் திரும்புகிறான், அவனது பாதக் குறடுகளின் ஓசை மங்கி மடிகிறது.]

அக் : ஸலீம், எங்கே போகிறாய்?

[ஸலீம் போயே போய்விடுகிறான்.]

அபுல் பஜல்! பார்த்தீரா? ஸலீமிடம் மாறுதலே இல்லே. இன்னும் தொட்டால் சிணுங்கியாகத் தான் இருக்கிருன்!

*[ஸ்திரமற்ற ஸலீமின் வலிமை மீண்டும் தன்முன் சரணுகதியடைந்ததை எண்ணித் தமக்குள் தாமே சிரித்துக் கொள்கிருர் அக்பர் பாதுஷா.]*

— திரை —

1944

# அண்ணனும் தம்பியும்

பாத்திரங்கள் :

கும்பகர்ணன்

விபீஷணன்

*[போர்க்களம். குலத்து மானம் தீர்ந்திலனை கும்ப கர்ணன் மலைபோல நிற்கிறான்; இராமனது பக்கத்தினின்றும் தன்னந்தனியனாக வந்த விபீஷணன் 'மழையின் நீர் வழங்கு கண்ணனாய்' அண்ணன் எதிரில் நிற்கிறான். தருமத்தின் உயர்வை எடுத்துக்காட்டி அண்ணனைத் தன் பக்கம் திருப்பி, ராமனிடம் அடைக்கலம் புகச் சொல்கிறான். இருவர் மனமும் ரத்தபாச உறவாலும், லட்சிய வேறுபாட்டாலும் கலங்குகின்றன.*

*தூரத்தில் எங்கோ சங்கும் எக்காளமும் முரசொலியும் ஏங்கி முழங்குகின்றன.]*

கும்பகர்ணன் : *(ஆச்சரியத்துடன்)* என்ன சொன்னாய்?

விபீஷணன் : (குலையாத சாந்தத்துடன்) ஆமாம், அண்ணா. ராமன் எனக்குத் தரும் இந்த லங்கா சாம்ராஜ்யம் முழுவதையும் உனக்கே தந்து விடுகிறேன். உனது காலடியில் கிடந்து நீ இடும் கட்டளையை நிறைவேற்றவும் தயாராயிருக்கிறேன்...ஐயோ! அண்ணா! இந்தப் போர் வெள்ளத்தினின்றும் நீ கரையேறுவாய் என்பதோ உறுதியற்ற நினைப்பு. பிறந்த குலத்தையாவது

தழைக்கச் செய் அண்ணு! அதருமமே உருவாகக் கொண்டு விளங்கும் இராவணனைப்போல் வீணுக மடிந்தலையாமல், பிழைக்கின்ற வழியைப் பின் பற்று. இராவணனை மறந்துவிடு. அவனை விட்டுப் பிரிந்து—

கும்ப: (குறுக்கிட்டு) இராவணனை விட்டுப்—பிரிவதா? தம்பி, அவன் நம்மோடு பிறந்த அண்ணனல்லவா?

விபீ: அண்ணன்தான். அதற்காகத் தருமத்தை ஒதுக்கி வைத்து விடலாமா? தருமத்துக்காக உழைக்கும்போது அண்ணன் தம்பி உறவு முறைக்கு இடம் ஏது, அண்ணு? இது நான் சொல்லி நீ தெரிய வேண்டியதில்லையே!

கும்ப: அண்ணனை விட்டுப் பிரிவது பழியல்லவா?

விபீ: பழியா?...நல்லது. சன்மார்க்க நெறியில் செல்பவர்களைப் பழி என்ன கவ்வி விழுங்கி விடுமா? அண்ணு, உடம்பில் வெடிக்கும் பொக்குளத்தை அழகு பார்த்து மகிழ்வாருண்டா? அதை அறுத்துச் சுட்டு மருந்து வைத்துக் கட்டி ஆற்றுவதல்லவா நல்ல வழி?

கும்ப: (லேசாகச் சிரித்து) நீ சொல்வதைப் பார்த்தால், அண்ணனை நாமே தீர்த்துவிட வேண்டும் என்று சொல்வாய் போலிருக்கிறதே!

விபீ: ஊஹூம். அதெல்லாம் ஒன்றுமில்லை. முடிந்தால் உனது அண்ணனையும் காப்பாற்ற வேண்டியதுதான். ஆனால், அது ஆகிற காரியமா? நீயும் தான் எவ்வளவோ முயன்று பார்த்தாயே, முடிந்ததா? உனது போதனையெல்லாம் இராவணனின் காதில் கொஞ்சமேனும் உறைத்ததா? இராவணனைக் காக்காவிடினும் தருமத்தை நிலை நிறுத்தலாமென்றால், அதுவும் (பெருமூச்சுடன்) முடிகிற வழியாய் இல்லையே!

கும்ப : (பரிதாப ஒலியில்) தருமம்? இராவணனின் சாம்ராஜ்யத்தில் தருமமா? என்று சீதையைச் சிறையெடுத்து வந்தாரோ, அன்றே தருமதேவதையும் இலங்கையை விட்டுக் குடியோடி விட்டாளே. இனிமேல், கொஞ்சங்கூட மனமாற்றமில்லாத இராவணனின் ஆட்சியில் தருமம் நிலைக்கவா?

விபீ : ஏன் நிலைக்காது? நிலைப்பதும் நிலைக்காததும் நமது செய்கையைப் பொறுத்தது. அண்ணா! இவ்வளவு நாளும் மலைபோலத் தூங்கிக் கிடந்தாயே, அதனால் உனக்கு ஏதேனும் பயன் உண்டா? இப்போதும் உன் உயிரை ஏன் வீணாக இழக்கப் போகிறாய்? தருமத்தை எதிர்த்து, இராவணனுடன் சேர்ந்து நிற்கவேண்டுமென்பதுதான் உனது விருப்பமா?

கும்ப : தம்பி! தருமத்தை எதிர்ப்பதுதான் எனது தொழில் என்று எண்ணினாயா? தருமத்தைவிட மானம் பெரிதல்லவா? நான் தூங்கியெழும் காலத்திலெல்லாம் எனக்கு வேண்டிய மது மாமிச ஆகாரங்களை ஊட்டி என்னை வளர்த்தவனல்லவா இராவணன்? என்னை நம்பிப் போர்க்களத்துக்கு அனுப்பிய ராவணனுக்குத் துரோகம் நினைப்பதா? உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பதுதான் தரும சாஸ்திரமா? நம்பினவனைக் கைவிடுவதுதான் நியாயம் என்று உன் தருமம் சொல்லுகிறதா? இராவணனை விட்டுப் பிரிந்து வாழ்வது மட்டும் சாஸ்வதமான வாழ்வா? அந்த வாழ்க்கை நீரின் மேல் வரையும் கோலந்தானே!

விபீ : அண்ணா தருமத்தின் லட்சியத்தை—

கும்ப : விபீஷணா! உனக்குத் தருமலட்சியம் உயர்ந்ததுதான். எனக்கோ மானம், நம்பிக்கை இவை

தான் உயர்ந்தவை. உன் லட்சிய சித்திக்காக, நீ தருமபிராஞன இராமனுடன் சேர்வது தகுதியானதே. ஆனல் பாபகிருத்தியங்களையே மூட்டையாகச் சுமந்து கொண்டிருக்கும் எனக்கு வீர மரணத்தைவிட, வேறு என்ன புகழ் இருக்கிறது?

விபீ: அண்ணு! அப்படியென்ருல், நீ சாகத் துணிந்து விட்டாயா?

கும்ப: ஆம். சாவது என்னவோ சதம். அதைத்தான் இந்தப் போரில் அடைந்தாலென்ன? சாவதுதான் எனக்குப் பெருமை. சாவுதான் எனக்குக் கொடுத்து வைத்த புகழ். அன்னியன் ஒருவன் என் நாட்டுத் தலைவாசலில் வந்து என்னை எதிர்க்கத் துணியும்போது, நானும் அவனை எதிர்க்கத்தான் செய்வேன். நாட்டின் மானத்தைக் காப்பதில் என் உயிர் போனல் போகட்டும். திரிலோகங்களுக்கும் சர்வாதிகாரியாக விளங்கும் என் அண்ணன் கடைசியில் தம்பி ஒருவனும் துணை நில்லாது மண்ணைக் கவ்வி மடிவாஞ? ஒரு காலத்தில் எமனையே ஆட்டிப் படைத்த என் அண்ணன்—அதே அண்ணன் அதே எமதர்மனின் சபையில், காலபாசத்தால் கட்டப்பட்டு, கவிழ்ந்த தலையோடு செல்லும் போது நாஞவது அவனுக்குத் துணையிருக்க வேண்டாமா?

விபீ: அண்ணு! அப்படியாஞல் இராவணன் பக்கம் சேர்ந்து நிற்பதுதான் உனது முடிவா?

கும்ப: வேறு வழி? நான் இராவணன் பக்கம் சேர்ந்து நில்லாமல், உன் பேச்சைக் கேட்டு இராமன் பக்கத்திலே சேர்ந்தாலும் எனது கதி என்ன? என் அண்ணனைக் கொன்று பழிதீர்த்த இரத்தக் கறை படிந்த அந்த இராமனை, அந்தப் பகைவனை வாயாரப்

புகழ்ந்துதானே நான் அரியணை ஏறவேண்டும்! கேவலம், இரு மானிடப் பிறவிகளையும் கூன் விழுந்த குரங்குக் கூட்டத்தையும் வணங்கி வாழ்வதை விட, சாவது மிகவும் மேலானது. இலங்காபுரியில் அடிமையாய்ச் சிம்மாசனம் ஏறுவதைவிட, நரகலோகத்தில் சுயேச்சையுடைய பாபியாயிருப்பது எவ்வளவோ நல்லது.

விபீ : அண்ணு! நான் சொல்வதை நீ—

கும்ப : நீ சொல்வதை நான் கேட்பதா? அம்பு பட்டு நெஞ்சை வகிரும் புண்ணைக்கூட ஆற்றிவிடலாம். ஆனுல் என் தமையனைக் கொன்ற பகைவனை வாழ்த்தித் தலைவணங்கும்போது என் நெஞ்சைக் கீறும் அம்புகளின் விஷப்புண்களை எந்த மருந்திஞல் ஆற்ற முடியும்? உன் இராகவனின் பாணத்தால் ஏற்படும் புண்களென்ன இவற்றைவிடக் கொடியனவா? அப்படிப்பட்ட நெஞ்சுப் புண்களோடு நான் வாழமாட்டேன். எவனையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் பெற்ற நான் எதிரியின் முன் கும்பிட்டுப் பிழைப்பதா? மாட்டவே மாட்டேன்!

விபீ : அண்ணு! உனது முடிவு இதுதாஞ?

கும்ப : இதுதான் என் முடிவு. இந்த முடிவே எனக்கும் முடிவைத் தரும். இந்தப் போர்க்களத்தில் என் கண்ணில் படும் எதிரிகளை உயிர் சுமந்து திரியவிட மாட்டேன். ஆலகாலத்தைக் கண்டு அஞ்சியோடிய தேவர்களைப்போல், எனது பகைவர்களும் என்னைக் கண்டு ஓடட்டும். இந்த உடலில் உயிர் இருக்கும் வரை, கும்பகர்ணன் தலைவணங்கும் காலம் ஒருக்காலும் வராது. நான் யுத்தத்தில் இறந்து போவேன்.

இராவணனும் அப்படியே. அரக்கர் குலத்துக்கே இந்தப் போர்தான் ஊழி வெள்ளம். அந்த வெள்ளத்தினின்றும் கரையேறுவது நீ மட்டும் தான். அரக்கர் குலத்துப் பிதிர்க்கடனைச் செய்ய நீயாவது மிஞ்சினுயே!

விபீ: (கவலையுடன்) அண்ணு!

கும்ப: என்னை அண்ணு என்று அழைக்காதே. நீ இராமனுடன் சேர்ந்த அன்றே என் உடன்பிறப்புச் செத்து விட்டது.

விபீ: என்ன?...

கும்ப: ஆம். இராமன் தரும் இலங்கா சாம்ராஜ்யத்தை நீயே ஆண்டுகொள்!

விபீ: (பதில் சொல்லாமல் கண்ணீர் சொரிந்து நிற்கிறுன்)

*(தூரத்தில் எங்கோ போர்முரசும் சங்கும் ஏங்கி ஒலித்து மடிகின்றன. கும்பகர்ணனை விட்டுப் பிரிந்து செல்லும் விபீஷணனின் உருவம் தூரத்தில் மங்கிமறைகிறது.)*

— திரை —

1942